வாரப்பதிப்பு விலை சதம் 20

சுலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ. பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.

திறம் சலவைக்கு

மில்க் வைற் சோப்




மில்க் வைற் சோப் தொழிற்சாலை

யாழ்ப்பாணம்

புத்தகம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 1991 வைகாசி திங்கள் 16-ம் நாள் (29—5—1960) ஞாயிற்றுக்கிழமை துல்கஃ 26 | இதழ் 47

# யாழ்ப்பாணப் பொலீஸார் மீது நடவடிக்கை!

## பொது மக்கள் வற்புறுத்து

### நகரசபைக் கலாட்டா காரணமாக!

### குறிப்பாக இருவர் தாக்கப்பட்டதும் ஜாதிப் பெயரால் நையப்புடைக்கப்பட்டதும் ஏன்?

(சுதந்திரன் யாழ் நிருபர்)

யாழ்ப்பாணப் பொலீஸாரின் நடத்தைபற்றி விசாரணை நடத்த வேண்டும்; அவர்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று யாழ்ப்பாணப் பொதுமக்கள் வற்புறுத்தி வருகிறார்கள். யாழ் நகர சபைக் கூட்டத்தின்போது நடந்த கலாட்டாவின் எதிரொலி இது!

யாழ்ப்பாண மேயர் திரு அல்பிரட் துரையப்பாமீது அவிமையில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்து விவாதத்துக்கு எடுக்கப்பட்ட சமயம் அங்கு கூடியிருந்தவர்கள் காடைத்தனம் செய்ததும் அதனுல கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதும் தெரிந்ததே.

#### உள்ளும் புறமும் ரௌடித்தனம்

கூட்டத்தின்போது 'கலரி'யில் கூடியிருந்தவர்கள் கூச்சலிட்டு குழப்பம் விளைத்தார்கள். வெளியில் குழுமி நின்றவர்கள் வெட்ட வெளிச்சமாக பொலீஸார் பார்த்துக்கொண்டு நிற்கும்போது ரௌடித்தனத்தில் இறங்கினார்கள்.

#### கூட்டம் ஒத்திவைப்பு

கூட்டத்தை நடத்திய நகர சபைக் கமிஷனர் கலரியில் இருந்தவர்களை வெளியேற்ற எடுத்த முயற்சி மேயரின் தலையீட்டால் தோற்றது. வெளியிலாவது குழப்பத்தை அடக்கி சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்த எண்ணிப் பொலீஸாரின் உதவியை அவர் நாடியபொழுது அவர்களும் கையை விரித்துவிடவே அவர் கூட்டத்தை ஒத்திவைத்தார்.

#### பொலீஸார் பார்த்திருந்தனர்

1956ல் காலிபேஸ் திடலில் சத்தியாக்கிரகம் செய்த தமிழரைப் பொலீஸார் பார்த்துக்கொண்டு வகைட்டுப் பொய்மைமகளே போல் நிற்க வெறிபிடித்த சிங்களவர்கள் தாக்கியது போல் யாழ் நகர சபைக்கு முன்னும் கூட்டத்துக்குச் சென்ற உறுப்பினர்களில் இருவர்— செனட்டர் ஜி நல்லையாவும் திரு வின்னநாதனும் தாக்கப்பட்டார்கள். இவர்கள் இருவரும் தாக்கப்பட்டதுமட்டுமல்ல; ஜாதிப் பெயர் சொல்லி நையப்புடைக்கப்பட்டார்கள்.

#### பொதுமக்கள் கேள்வி

மேயருக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் 10 பேர் கையெழுத்திட்டிருந்தபோதிலும் குறிப்பாக இருவர் மட்டும் ஏன் தாக்கப்பட வேண்டும்? ஏன் ஜாதிப் பெயரால் நையப்புடைக்கப்பட வேண்டும்.

பொலீஸார் ஏன் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க வேண்டும். மேயருக்கும் பொலீஸ் மேலதிகாரிகளுக்கும் உள்ள நெருங்கிய விருந்துபசார நட்பு முறைகள் அவர்கள் கடமை செய்வதற்கு தடையாக அமைவதா?—இத்தியாதி கேள்விகளை எழுப்பும் யாழ் பொதுமக்கள் பொலீஸார் விசாரிக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் வற்புறுத்தி வருகிறார்கள்,

## தி. மு. க. கூட்டத்தில் எறியப்பட்ட கல்

### 38 ரூபாவுக்கு விலைபோனது

தமிழகத்தில் தி. மு. க. கூட்டங்களில் யாராவது கல் எறிந்து கலாட்டா செய்தால் அதுவும் அவர்களுக்கு லாபமாகி விடுகிறது எறியப்பட்ட கல்லை ஏலத்தில் (விலைகூறி) விற்கிறார்கள்: சமீபத்தில் அப்படி எறியப்பட்ட கல் ஒன்று ரூபா 38/= விலை போயிற்று;

காஞ்சிபுரம் பிள்ளையார் பாளையம் மண்டலத்தெரு கே. வி. கே. சாமி படிப்பகத்தின் 4-வது ஆண்டு நிறைவு விழா தோழர் எம். கோவிந்ததாசன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் ஒரு கல் மேடை மீது விழுந்தது. சிறிது நேரச் சலசலத்திற்குப் பின் அமைதி நிலவிற்று. இந்தச் சம்பவத்தைக் குறித்து பேச்சாளர் அறிவுடைநம்பி குறிப்பிட்டதாவது:—

#### பகற் கனவு

"கல் எறிவதாலோ மற்ற இழி தொழில்களில் ஈடுபடுவதாலோ நம் கழகத்தை அழித்து ஒழித்து விடுவோமென்று மாற்றுக் கட்சி தோழர்கள் கனவு காண்பார்களானல் அது வெறும் பகற் கனவாகமுடியுமென்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சென்ற பொதுத் தேர்தலின் போது காஞ்சிபுரத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலைஞர் கருணாநிதி பேசிக் கொண்டிருக்கும் போது இதைப் போலவே மேடை மீது ஒரு கல் வீசி எறியப்பட்டது. அந்தக் கல் விலை போயிற்று. 1962-ல் நடைபெறப்போகின்ற தேர்தலை நினைவூட்டுவதற்காக இந்தக் கல் இப்போது வீசப்பட்டிருக்கின்றதென நான் எண்ணுகிறேன். இந்தக் கல்லுக்குப் பொது மக்கள் என்ன விலை கொடுக்கப்போகின்றீர்கள்?"

#### கல் விலை

அறிவுடை நம்பி எறியப்பட்ட அக்கல்லை தன்னுடைய துண்டில் ஏந்தியவாறே பொது மக்களிடம் அனுகி ரூ 38-16 வசூல் செயதார். இந்தத் தொகையைத் தேர்தல் நிதியில் சேர்க்கும் பொருட்டு பொதுச் செயலாளரிடம் அனுப்புவதாக அறிவித்தார்

## அனுபவமும் தகுதியும் உள்ளவருக்கு பதவி இல்லை

### உத்தியோக மொழி இலாகாவில் சூழ்ச்சிப் படலம் தொடர்கிறது

[சுதந்திரன் நிருபர்]

ஆறு வருட அனுபவம் உடையோர் விண்ணப்பிக்கலாம் என்று விளம்பரத்தில் காணப்பட்ட 'சுப்பிரின்ரென்டென்ட்' பதவிக்கு ஏழு வருட அனுபவம் பெற்றவரும் உத்தியோக மொழி இலாகாவில் முன்னர் கடமையாற்றியவருமான ஒருவர் விண்ணப்பித்த போது அவருடைய விண்ணப்பம் மேற்படி இலாகாவால் நிராகரிக்கப்பட்டதாகத் தெரிகிறது. வேண்டிய தகுதிகள் உடைய இவரின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது மேலிடத்தின் ஒரு சூழ்ச்சித் திட்டத்ன் திவிளைவு என்று நம்பப்படுகிறது.

பிரஸ்தாப பதவிக்கு விண்ணப்பித்தவர்களுள் அவ்விலாகாவில் முன்னர் ஆராய்ச்சி உதவியாளராகக் கடமை பார்த்த திரு. மு. கணபதிப்பிள்ளையும் ஒருவராவர். இவர் அங்கிருந்து கிளப்பி எடுக்கப்பட்டு தொழில் இலாகாவில் புதிதாக சிருஷ்டிக்கப்பட்ட மொழி பெயர்ப்பாளர் பதவியில் அமர்த்தப்பட்டார். இது விஷயத்தில் பல தில்லுமுல்லுகள் நடைபெற்றன என்றும் சிங்கள மேலதிகாரிகளுக்கு, இனத்தின் சுயகௌரவத்தை அடகு வைத்து சொந்த லாபந்தேடும் தமிழ் உத்தியோகத்தர் சிலர் தம்மால் ஆன முயற்சிகள்யாவும் செய்தனர் என்றும் தெரியவருகிறது.

#### விண்ணப்பம் நிராகரிப்பு

தொழில் இலாகாவில் மொழி பெயர்ப்பாளராக இருந்தவாறே திரு கணபதிப்பிள்ளை உத்தியோக மொழி இலாகா சுப்பிரின்ரென்டென்ட் பதவிக்கு தமது 7 வருட அனுபவத்தையும், யோக்கிய தாம்சங்களையும் சுட்டிக் காட்டி விண்ணப்பித்திருந்தார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## தொய்வு (ASTHMA) சங்காரி

## ரிச்லெட்ஸ் பெக்டோரல்

(RICHELET'S PECTORAL)



- ★ இடைவிடாத இருமல்
- ★ இளைப்பு
- ★ மூச்சுத் திணறல்
- ★ கிர்ர் புர்ர் சத்தம்
- ★ நெஞ்சுவலி
- ★ தொண்டை வலி




இவைகளை ஒழித்துக் கட்டுவதில் இணையற்றது. ஈளை நோயினல் இன்னலுறுபவர்களுக்கு இது ஓர் வரப்பிரசாதம். சில டோஸ் சாப்பிட்டதுமே நிம்மதியளிக்கக் கூடிய இவ்வற்புத சஞ்சீவி.

எங்கும் கிடைக்கும்.

ஏகவிநியோகஸ்தர்கள்:

வெஸ்டன் ஏஜன்சீஸ்,

63, பேங்ஷால் வீதி, கொழும்பு.

(போன் : 2885)


இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னம்பலனார் திருவிளையாடல் புராணம்

## [மட்டக்களப்பு காண்டம்]

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட முன்வந்தவர்கள் தமது நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்யக் குறிப்பிடப்பட்டிருந்த 20-5-60 தினத்துக்கு ஒரு வாரத்துக்கு முதல் அகில ஆனைப்பந்தி காங்கிரஸின் தனிப் பெருந் தலைவர் திருவாளர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் மட்டக்களப்புக்கு விஜயம் செய்த வரலாற்றைக் கூறுகிறது இங்கு பிரசுரிக்கப்படும் 'புராணம்.'



எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடும் தமிழரசுக் கட்சி அபேட்சகர்களின் கட்டுப்பணத்தை பொது மக்களே தாமாகத் திரட்டிக் கொடுத்து உதவினார்கள். உடுப்பிட்டித் தொகுதியில் போட்டியிடும் திரு. ஜெயக்கொடியின் கட்டுப்பணத்தை அத்தொகுதி மக்கள், அவர்களிலும் குறிப்பாக சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் கட்டிவிட்டு ரசீதை அவரிடம் ஒப்படைப்பதைப் படத்தில் காணலாம்.

### வழியனுப்பு படலம்

கொள்கையும் குறிக்கோளும் இல்லாத சூன்ய வெளியிலே திருநடனம் செய்கின்ற சூழ்ச்சிச் 'சக்தியும்' தானும் பாதி பாதி யாகிய ஐம்பதுக்கு ஐம்பது பொன்னம்பலனார் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் வைத்து 13-5-60 வெள்ளிக்கிழமை இரவு மட்டக்களப்புப் புகை வண்டியில் தமது திருப்பாதங்களைத் தூக்கி வைத்தருளினார். அப்பொழுது சகல பூதகணங்களும் வாழ்த்த அங்கு நின்ற தேர்தல் வீழ்ச்சி கண்டார் திரு. நல்லையா அவர்கள் முறுவலோடு விடைதர எம் பெருமானார், தமிழ் மக்களின் வாழ்வின் ஒளியான தமிழரசு இயக்கத்தை மோதி தனது முக்கண்ணாலும் (இவருடைய இரண்டு கண்களும் மூன்று கண்களுக்கு சமானம்) எரித்து, மட்டக்களப்பை நீருக்கி வெற்றி கொள்ளும் திரு(ட்டு) நோக்கோடு தம் பெரும் பயணத்தை துவக்கி அருளினார்.

வாழிய பெருமான்
திரு நோக்கு
வழியனுப்பு படலம் முற்றும்.

●

### நுழை வாயில் படலம்

'ஆனைப்பந்தி காங்கிரஸ்' என்றால் சர்வ உலகத்தையும் எட்டுத் திசைகளையும் ஆளும் பொன்னம்பலனாரின் கைலாய தலம். அந்த இடத்திலிருந்து உலகாளும் எம்பெருமானுக்கு மட்டக்களப்பு 'அவுட் ஒவ் கொண்ட்ரோள்! என்ற நிலை வந்ததும் சகிக்க முடியவில்லை. ஆகா! கடந்த பத்து ஆண்டுகளாக நான் வழக்கு அருச்சினைப் பணம் சேர்க்கும் நோக்கமாக மட்டக்களப்புக் கோர்ட் கோயிலுக்குப் போய் வருகிறேன். அங்குள்ள மக்களை என்னை மீறிய ஒரு தெய்வமும் சக்தியும் ஆட்கொள்வதா என்று குமுறினார். இறைவன் குமுறினால் கேட்க வேண்டுமா...? புகையிரதம் மட்டக்களப்புப் புகையிரத நிலையத்தில் திடீரென்று வந்து நின்றது. அந்தப் புண்ணிய காலம் 14-5-60 சனிக்கிழமை காலை 6-30 மணியாகும்.

அம்பலனார் பெருமானே வருகிறார் என்றால் கேட்பானேன்... மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழரசோடு மோதி விழுந்து இன்னும் முதுகு வலி தீராத எட்

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

ஆக்கியோன்:
"உளவறி நாயனார்"

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

டப்ப நாயனார் (இவர் யாழ்ப்பாணத்தாரின் எதிரி என்பது குறிப்பு) தனது 2 சிறீ 8598 பல்லக்கில் பத்து நிமிடத்துக்கு முதலே வந்து இறங்கி புகையிரத நிலையத்தில் காத்திருந்தார். இவரோடு கூட இன்னும் மூன்று பக்த கோடிகள்—இன்னும் ஒரு கண்ணாடி யணிந்த மெல்லிய அரசாங்க உத்தியோக நாயனார்—இவர் விவசாயப் பகுதியில் எவ். பி. ஓவாக கடமை பார்ப்பவர். "இல்லை ஆனால் நாயன்" என்பது இவர் திருநாமம். இந்த நான்கு திருத் தொண்டர்களை மட்டும் கொண்ட வேறு யாருமில்லாத 'சனத்திரள்' ஒன்று எம்பெருமானை மட்டக்களப்பு புகையிரத நிலையத்தில் வரவேற்ற போது அவர்களுக்கு அருகில் ஒரு சங்கு ஒலித்தது. அது சங்கு அல்ல சாதாரணமான ஒரு மனிதனின் குரல்... "இவன் என்னத்துக்கு வாறான் ஊரைக் குழப்ப" என்பது அந்த ஒலி... அதைப் பெருமான் கவனிக்க வில்லை. யாரோ அசுரனின் குரலாக இருக்கும் என்று 'இம்பிள்' ஆக சமாளித்தருளி வெளியேறினார். எட்டப்ப நாயனின் பல்லக்கு மட்டக்களப்பு வாடி வீட்டை நோக்கிப் பறந்தது.

(இது திருவிளையாடல் அதிசயம் ஒன்று. யாழ்ப்பாணி என்று திட்டும் எட்டப்ப நாயனும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எம்பெருமானும் ஒன்றாகப் பல்லக்குப் பவனி வந்தமை.)

நோய் தரு தலைவா போற்றி
நுழைவாயில் படலம்போற்றி.

●

### இறை நாயன்மார் இணை படலம்

மட்டக்களப்பு வாடி வீட்டில் எட்டப்ப நாயனாரின் பல்லக்கைத் தவிர இன்னுமொரு வாகனம் இருந்தது. இந்த வாகனம் இராசதுரையோடு மோதி போன தேர்தலில் தோகை முறிந்து தோல்வி கண்ட வாகனமாகும். மட்டக்களப்பு வழக்கறிஞர் சுப்பிரமணியக் கடவுளும், தெய்வ (கோடிகளின்) நாயகமும் அரிஸ்டோகிரசி காலத்தில் வாழ்ந்திருக்க வேண்டிய ஒரு 'நோபிளும்', வாகன வரிசையிலே ஒரு நெட்டை நரியும், அரசியல் குழந்தைகளான பாலனும் பையனும் (Boy) ஆனா ஆவன்னா வினாவீயன்னாக்களும் (இதெல்லாம் தேவ பாஷை) வேலும் சூலமும் இன்னும் இறைவனை முந்திக்கொண்டு மதுமலையில் நடனமாடும் (கம்யூனிஸ்ட், யு. என். பி, எம். ஈ. பி, தமிழ் பேசும் முன்னணி இனிமேல் காங்கிரஸ் கட்சிகளைச் சேர்ந்த தூர்நாற்றவாய் பி. ஏ. நாயனாரும் திருத்தரிசனம் தந்தருளிய வாடிவீட்டுப் பெரு முற்றத்தில் அம்பலனார் தமது திருக்கூத்தை காலை 8-30 மணிக்கு ஆரம்பித்தருளினார்.

"பக்த கோடிகளே! நான் இங்கு தரிசனம் தந்திருப்பது உங்களுக்கு ஏனென்று முதலில் தெரிய வேண்டும்—தமிழரசுக் கட்சியையும் செல்வநாயகனையும் ஒழித்துக் கட்டி தமிழர்களைப் பாதுகாப்பது தான் என் திரு நோக்கமாகும்...... செல்வநாயகனை அரசியலில் தூக்கி விட்டவன் நான்—இறக்கி விடப் போகிறவனும் நான் தான்" என்று பெருமான் கூறிய பொழுது, இப்படித் தான் இவர் தமிழினத்தை ஒருவேளை காப்பாற்றினாலும் பிறகு தமிழினத்தை அழிப்பவரும் இவராகத்தான் இருப்பார் என்ற எண்ணம் நாயன்மாருக்கு வரவில்லை. அவ்வளவு பக்திப் பிரவாகம்! ஒரே மெய் மறந்த பெரு நிலை!

பிறகும் பெருமான் பொன்னம்பலனார் திருவாய் மலர்ந்தருளினார்:—

"என் பக்த சிகாமணிகளே! நாம் மட்டக்களப்பிலும், பட்டிருப்பிலும், கல்குடாவிலும் தோற்பதைப் பற்றிக் கவலை யில்லை. ஆனால் தமிழரசுக் கட்சியை [illegible] தான் எனது அடுத்த நோக்கம். எந்த நாயனார் எந்தத் தொகுதிக்கு என்று நீங்களே முடிவு கட்டுவீர்களாக."

யாழ்ப்பாணத்தாரின் காலைப் பிடிக்கும் வெட்கங்கெட்ட மட்டக்களப்பார் தான் இராசதுரை, ராசமாணிக்கம், மாணிக்கவாசகர் என்று மூன்று மாதங்களுக்கு முதல் திருப்பதிகம் பாடியருளிய எட்டப்ப நாயனார் அடுத்த நிமிடமே யாழ்ப்பாணப் பெருமான் பொன்னம்பலனாரின் காங்கிரஸ் விபூதியோடு பட்டிருப்பில் குதிக்க ஏகமனதாகத் தெரிவு செய்யப் பட்டார். ஏனைய ஆறு பக்தர்களின் வாழ்த்தொலிகள் முழங்க—பூதகணங்கள் பூச்சொரிய எட்டப்ப நாயனார் கனவு உலக பட்டிருப்பு உறுப்பினராக வர அம்பலனார் அருள் பாலித்தார்.

அடுத்து மட்டக்களப்புப் பிரச்னை வந்தது. சுப்பிரமணியக் கடவுள் இயன்ற அளவு நிதிக்குவை வழங்குவதாகவும் தம்மை மட்டக்களப்புத் தோல்விப் பெருமகனாக நிறுத்த வேண்டாமென்றும் பெரிய மனது வைத்துக் கேட்டருள அடுத்தவர் யார் என்ற கோரிக்கையை கடவுள் துவக்கினார்.

இப்பொழுது வாகனம் அவர்களை பக்தர்கள் மீண்டும் தூண்டி முன்னுக்குக் கொண்டு வந்து வைத்தார்கள்.

வாகனம் பதைத்தார். "நான் போட்டியிட விரும்பவில்லை. நான் இராசதுரையை வெல்லவும் முடியாது—வேறு யாரையாவது நிறுத்துங்கள்—அப்படி யாரும் இல்லையென்றால்—நீங்கள் காசு தந்தால் போட்டியில்லாமல் அவரை விடக் கூடாது என்பதற்காக நான் வருகிறேன்" என்று முறிந்த தோகையை முட்டுக் கொடுத்து வாகனம் முக்கி முனகிப் பேசி முடித்தார்.

இறை நாயன் இணைபடலம்
முற்றும்.

●

### சூடான படலம்

இப்பொழுது அம்பலனார் சபையில் ஒரே சூடு: "ஒருவருக்கும் சம்மதமில்லையென்றால் இதென்ன விளையாட்டா? நாங்கள் வீட்டுக்குப் போகிறோம்" என்று ஏனைய பக்தர்கள் குமுறினார்கள். அம்பலனார் 'போய்!' என்று ஒரு அழைப்பு விட்டார். அமுதமான 'விஸ்கி' பரிமாற்றம். அவர்களை யெல்லாம் குளிர்விப்பதற்காக நிகழ்ந்ததோ என்னவோ பழைய நிலை வந்தது. மட்டக்களப்பை விடுத்துக் கல்குடாவுக்குப் பாய்ந்தார்கள் பக்தர்கள்.

'தெய்வநாயகம் கல்குடாவுக்கு சரியான ஆள்' என்று மட்டக்களப்பையே கரைத்துக் குடித்தவர் மாதிரி பொன்னம்பலனார் திருவாய் மலர்ந்தார். தேவர் தலைவரால் இதை முழுமனத்தோடு ஏற்றுக்கொள்ள முடியவில்லை. "இறைவா! யோசித்துப் பார்க்கிறேன்—இப்பொழுது முடிவு சொல்ல விரும்பவில்லை" என்று தனது பணிவான விருப்பத்தைக் கூறியருளினார் அவர்.

கடிகாரம் இரவு எட்டு மணி என்று இரைந்தது! அம்பலனார் எழுந்தார். "புகையிரதம் பிந்திவிடும் நான் யாழ்ப்பாணம் போயாக வேண்டும்-எப்படியோ போட்டி போடாமல் விடாதீர்கள்," என்று சுய அறிவோடும் மது வெறியோடும் நாயன்மார் கூட்டத்திடம் சொன்னார் தற்காலிக தமிழ்க் காங்கிரஸ் தலைவரையும் செயலாளரையும் மட்டக்களப்பில் தெரிவு செய்தார். (ஏனென்றால் தமிழ் காங்கிரசே தற்காலிகமானது என்பதால்) 2 சிறீ 8598-ல் புகையிரத நிலையம் நோக்கிப் பறந்தார்......... பறந்தார் என்பது பிழை மறைந்தருளினார்.

"நினைத்தது நடக்கவில்லை
நிம்மதியின்றிப் போனார்.
அனைத்தையும் ஆளும்
தெய்வம் ஐம்பதுக் ஐம்பது
நிசம்!"

சூடான படலம் முற்றும்.

●

### சூழ்நிலைப் படலம்

பொன்னம்பலனாரின் மட்டக்களப்புத் திரு விஜயத்தைத் தொடர்ந்து மட்டக்களப்பில் நடந்தவை புராணத்தின் புண்ணிய நிகழ்ச்சிகளாகும். வாடி வீட்டில் பெருமான் சபை கூடிய அதே வேளையில் ஒரு பிரபல முஸ்லிம் வழக்கறிஞரும் தமிழ் வழக்கறிஞரும் வாடி வீட்டில் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கு வந்தவர்கள். அவர்கள் பொன்மொழி பின் வருமாறாகும்:-

"இந்த துரோகி பொன்னம்பலம் திரு. செல்வநாயகத்தின் காலைப் பிடிக்கக்கூட அருகதையற்றவன். யாழ்ப்பாணத்துத் தமிழ் மக்களைக் குழப்பியது மட்டுமல்லாமல் மட்டக்களப்பையுமா கெடுக்க வந்திருக்கிறான்?"

அதே தினத்தில் கடவுளில் ஒருவராய சுப்பிரமணியர் மட்டக்களப்பு நீதி மன்றத் தருகாமையில் ஒரு பிரஜையிடம் பின் வருமாறு கூறியருளினார்:-

'பொன்னம்பலத்துக்கு யு. என். பி அள்ளிக் கொடுக்குது......அவனோட யார்

(7-ம் பக்கம் பார்க்க)


# ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, எலும்புகளில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, படர்தாமரை, சொறி, தேமல், நெஞ்சு எரிவு, தேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இலவசமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.
வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-
ஆனந்தா வைத்தியசாலை,
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்டுப் பாருங்கள்

## குயுக்தி



ப. கனகசபாபதி, புற்றளை.

கே: கண்மூடித்தனமாக நடக்கும் இன்றைய பெண் உலகைத் திருத்துவது பெற்றோர் கடமையா அல்லது கல்வி பயிற்றும் ஆசிரியருடைய பொறுப்பா?

ப: கண்ணோடு கூடிய விஷயமாயிருக்கிறதே. கண் டாக்டருடைய பொறுப்பாய்த்தான் இருக்க வேண்டும்.

ஃ

ந. திருவடி, காங்கேசன்துறை.

கே: மிஸ்டர் குயுக்தியாரே, சமசமாஜக் கட்சித் தலைவர் கெட்டிக்காரரா?

ப: இல்லாவிட்டால் பாவாடைக்குள் இடம்பிடித்துக்கொள்வாரா?

ஃ

ராஜா ஆனந்தம், மண்டூர்.

கே: இலங்கைப் பாராளுமன்றத்தில் ஹாஸ்யப் பேச்சாளர் யார்?

ப: கடந்த பாராளுமன்றத்தில் சிறந்த ஒரு அரசியல் பேச்சாளராகவும் அதே சமயத்தில் ஹாஸ்யப் பேச்சாளராகவும் விளங்கியவர் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் தான்.

கே: தங்கள் மனைவி ஒரு பிரபல நட்சத்திரமானால்...

ப: ஆனால் என்ன? காரையும், கணவரையும் அடிக்கடி மாற்றிக்கொண்டிருப்பாள்.

ஃ

சி. குமாரசாமி, யாழ்ப்பாணம்.

கே: யாழ்ப்பாணத்தில் ஓர் இடத்தில் பேசிய வித்துவான் வேலன் என்பவர், "மக்களுக்கு அரசியலில் கட்சியென்று ஒன்று தேவையில்லை. யோக்கியர் ஆளவேண்டும். அயோக்கியர்கள் ஆளப்பட வேண்டும்" என்றார். உங்கள் கருத்தென்ன குயுக்தியாரே?

ப: அவர் சொன்னது சரி. அவர் ஆளப்பட வேண்டியவர்!

ஃ

எஸ். வேல்சாமி, கண்டி.

கே: கண்டவர் வியக்கும் வண்ணம் இலங்கைத் தமிழரசுக் கட்சி இவ்வளவு பெரிய அரசியல் ஸ்தாபனமாகப் புகழும், செல்வாக்கும், பலமும் பெற்று வளர்ந்துவிட்டதே இதன் இரகசியம் என்ன?

ப: இதில் இரகசியம் ஒன்றுமில்லை. எந்த ஒரு அரசியல் கட்சியும் செல்வாக்குப் பெற்று வளர்வதற்கு மூன்று முக்கிய அம்சங்கள் தேவை. ஒன்று அதற்கென்று அசையாத தனிக் கொள்கை தேவை. இரண்டு நேர்மையும் நெறியும் வாய்ந்த ஒரு தலைவர் தேவை. மூன்று இயக்கத்தைக் கட்டுக்கோப்பாக அமைத்து பிரபலப்படுத்த சக்திவாய்ந்த ஒரு பேனா தேவை. தமிழரசுக் கட்சிக்கு 'சமஷ்டி அரசமைப்பு வேண்டும்' என்ற ஸ்திரமான ஒரு கொள்கையுண்டு. நெறியும் நேர்மையும் வாய்ந்த தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகத்தின் தலைமையுண்டு. எதிரிகளை முறியடித்து எடுத்த கொள்கையை நிலைநாட்டச் 'சுதந்திரன்' உண்டு. தமிழரசுக் கட்சி வளர்ச்சியடையக் கேட்கவா வேண்டும்?

ஃ

எஸ். எஸ். மிக்கேல், முல்லைத்தீவு.

கே: பக்தி யென்றால் என்ன?

ப: சிந்தனையற்ற அங்கிகாரத்துக்கு பக்தி யென்று பெயர்.

ஃ

ஆ. புவனேந்திர நாதன், கொழும்புத்துறை.

கே: நான் சினிமா உலக ஆடல் அழகி வைஜயந்திமாலாவை மனமாரக் காதலிக்கிறேன். அவளை அடைவதற்கு ஒரு வழி கூறுங்கள் பார்ப்போம்.

ப: இலங்கையில் அங்கொடையைப் போலச் சென்னையில் கீழ்ப்பாக்கம் என்று ஒரு இடம் இருக்கிறது. அந்த இடத்துக்கு டிக்கட் எடுத்து, நேரே போய்ச் சேரும். வைஜயந்தியை அடைவதற்கு ஒரே வழி அது தான்!

ஃ

நா. வடிவேலு, சாவகச்சேரி.

கே: வடக்கு கிழக்கு மாகாணத் தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகளை ஒரே மேடையில் காணத் துடியாய்த் துடிக்கிறோம். ஆசை நிறைவேறுமா?

ப: தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகளின் தொகை தேர்தலுக்குத் தேர்தல் அதிகரித்துக் கொண்டே வந்துவிட்டதால் அவ்வளவு பேரையும்

திருவாளர் குயுக்தியார்
மே/பா சுதந்திரன்.
த. பெட்டி 1183,
கொழும்பு-12.

ஒரே மேடையில் ஏற்ற மேடை தாங்காதே அப்பனே!

ஃ

வை. மணி, சாவகச்சேரி.

குயுக்தியாரே, நான் என் காதலியிடம் "இதற்குப் பதில் போடாவிட்டால் உன்னைப் பார்க்க மாட்டேன்" என்று எழுதி ஒரு கடிதம் கொடுத்தேன். பதில் வரவில்லை, அவளைப் பார்க்க முடியாமல் தவிக்கிறேன். என்ன செய்வது? ஒரு புத்தி சொல்லுங்கள்.

ப: கவலைப்படாதே. இன்னொரு கடிதம் எழுதி அவளுக்குக் கொடு. அதில் "உன்னுடைய அன்பான பதில் கிடைத்தது. ஏன் உன் கையெழுத்தைப் போடத் தவறிவிட்டாய்? அத்தனை மறதியா? அல்லது கடிதம் பிடிபட்டால் அதில் பெயரிருந்தால் அகப்பட்டு விடுவோமே என்று பயமா? பாதகமில்லை. நீ எழுதியபடியே தினமும் உன்னைப் பார்ப்பேன். சந்திப்பேன். பேசுவேன்" என்று குறிப்பிட்டு விடு. உன் காதலி குடித்துப் போவாள். இன்னும் யாரோ ஒரு பெண் உனக்கு கடிதம் எழுதுவதாக நினைத்து பொருமையால் உன்னை வலிய வந்து வட்டமிடுவாள்.

ஃ

எல். எம். தாஹிர், கல்முனை

கே: மாஜி நியமைச்சர் எம். எம். முஸ்தபா இம்முறை ஏன் நிந்தவூர் தொகுதியிற் போட்டியிடவில்லை?

ப: என்று அவர் கட்சி விட்டுக் கட்சி மாறித் திடீர் மந்திரியானாரோ அன்றே அவருடைய அரசியல் வாழ்வு அஸ்தமித்துவிட்டது என்று நான் சோதிடம் கூறினேன். குயுக்தியாரின் சோதிடம் பொய்க்க முடியுமா?

ஃ

ஈ. வேலுப்பிள்ளை, மந்துவில்

கே: இம்முறை சாவகச்சேரி திரு வி குமாரசாமி ஏன் போட்டியிடவில்லை?

ப: அந்த வரையில் அவர் [illegible] வளத்தை அவர் கடந்ததேர் தலிலேயே கண்டறிந்துவிட்டார். 'தொழிலைக் கவனித்துப் பட்ட கடனை அடைப்போம்' என்று அவர் செய்த தீர்மானம்தான் அடுப்படி முன்னணிக் கட்சி இதுகாலவரை நிறைவேற்றிய தீர்மானங்களில் மணியானது.

ஃ

ஏ. எச். எம். மன்சூர் பஸ்லல், தொட்டவத்தை

கே: உலகில் உள்ள மனிதர் எல்லோரும் ஒரே நாளில் இறந்துவிட்டால்......?

ப: பெரிய ஆபத்து வந்தது! அத்தனை பேரும் சவப்பெட்டிக்கு என்ன செய்வார்கள்?

கே: அமெரிக்காவில் சாதி வித்தியாசம் இருக்கிறதா?

ப: இல்லையென்று பிரசாரஞ் செய்ய பல்லாயிரம் செலவிடுகிறது அமெரிக்க அரசாங்கம், கறுப்பு மனிதர் ஒருவரைக் கண்டால் கரித்துக்கொள்ளுகிறது அமெரிக்க சமுதாயம். சாதி வித்தியாசம் இல்லையென்னும் அமெரிக்காவில் இன்னும் நிற வித்தியாசம் நீங்கவில்லையே!

ஃ

ஜோதி, பருத்தித்துறை

கே: குயுக்தியாரே நான் ஒரு வானொலிப் பெட்டி தயாரிக்கத் திட்டமிட்டுள்ளேன். அரசாங்கத்துக்கு அறிவிக்க வேண்டுமா?

ப: அவசியம் அறிவித்து உத்தரவு பெற வேண்டும். இல்லாவிட்டால் பெரிய குற்றம். போஸ்ட்மாஸ்டர் ஜெனரலுக்கு எழுதி அனுமதி கோரினால் சில நிபந்தனைகளின்மீது அனுமதி கிடைக்கும். சில பெண்கள் தங்கள் வாயை வானொலியாகப் பாவிப்பதுண்டு. இந்த வானொலிக்குத் தடை உத்தரவு கிடையாது.

ஃ

பி. எஸ். சண்முகநாதன், முரசுமோட்டை

கே: குயுக்தி மாமா, உங்கள் மகளைச் சதா நினைந்து நினைந்து உருகுகிறேன். இன்னும் எத்தனை காலந்தான் நான் காத்திருப்பது? அவள் கையை நான் எப்போது பிடிக்கலாம்?

ப: உருகும் பொருளை அவள் விரும்புவாள் என்று நான் நினைக்கவில்லை. உருக்குப்போன்ற உள்ளம் படைத்த ஒருவனையே அவள் விரும்புவாள் என்று தோன்றுகிறது. எதற்கும் நீ இன்னும் 15 ஆண்டுகள் காத்துக் கிடக்க வேண்டும் அப்பனே!


## வாழ்வு ஒரு மாயம்!

எதிர்பாராதது நடந்து விடுகிறது. எனவே எதற்கும் எப்பொழுதும் பாதுகாப்பு அவசியம். கஷ்டகாலத்தில் கடன் வசதி—மரணகாலச் செலவுக்கு நிதி உதவி ஆகியவற்றோடு பரிபூரண ஆயுள் பாதுகாப்பை அளிப்பது த நொர்தேன் லைப் அண்ட் ஜெனறல் இன்ஸ்சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட். தமிழ் மக்களால் தமிழ் மக்களுக்காக தமிழ்ப் பகுதிகளை வளம்படுத்தித் தமிழர் தம் பொருளாதாரத்தை வளர்க்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டு திறமையாக பலகாலம் நடைபெற்று வரும் ஒரேயொரு ஸ்தாபனம் இதுவே.

ஆயுள் பொலிசிகள் தமிழ் மொழியில் வழங்கப்படுகின்றன. இன்றே விவரங்களுக்கு எழுதுங்கள்

எங்கும் ஏஜண்டுகளும், பிரதிநிதிகளும் தேவை.

**The Northern Life & General Insurance Co., Ltd.**

18 1/6, State Bank Building,
COLOMBO—1.




## நமக்குத் தொழில் கவிதை

நமக்குத் தொழில் கவிதை என்ற வெண்பாப் போட்டியில் கவிதை எழுத விரும்புவோர் யாவரும் கலந்துகொள்ளலாம். கட்டுப்பாடு கிடையாது. ஒருவர் எத்தனை வெண்பாக்கள் வேண்டுமானாலும் எழுதலாம். கவிதை அஞ்சல் அட்டையில் (Post Card) மட்டுந்தான் எழுதப்பட வேண்டும். ஒரு அட்டையில் ஒரு வெண்பாவுக்குமேல் எழுதக்கூடாது. கீழே தரப்பட்டிருக்கும் அச்சிட்ட முகவரியை வெட்டி அஞ்சலட்டையில் ஒட்டி அனுப்ப வேண்டும். அச்சிட்ட முகவரி ஒட்டப்பெறாத அட்டைகள் கவனிக்கப்படமாட்டா.

### போட்டி இல: 11

இந்த பதினோராவது வெண்பாப் போட்டிக்கு 'ஆடி இருபதிலே சாடு" என்ற ஈற்றடி தரப்பட்டிருக்கிறது. இதை வைத்தே வெண்பா எழுதப்பட வேண்டும். இலக்கியச் சுவைக்கும், நகைச் சுவைக்கும், அங்கதச் சுவைக்கும் (Satire) முக்கிய மதிப்பு அளிக்கப்படும். மத்தியஸ்தர்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற வெண்பாக்கள் சுதந்திரனில் வெளியாகும்.

—ஆசிரியர்: சுதந்திரன்.

'நமக்குத் தொழில் கவிதை'
C/o ஆசிரியர்,
சுதந்திரன்,
த. பெ. 1138,
கொழும்பு—12.

வெண்பாக்கள் கிடைக்க வேண்டிய முடிவு தேதி 15—6—60

"ஆடி இருபதிலே சாடு"


## அன்பர்களே

நீங்கள் எவ்வளவு நல்ல உணவுகள் சாப்பிட்டாலும் உடல் மெலிந்துகொண்டே போகிறதா? பசியின்மை பல் ஈறு கரைதல், கை கால் நோவு, சோம்பல், சிறுநீருடன் சக்தி போகுதல் என்பன போன்ற வியாதிகளால் கஷ்டப்படுகிறீர்களா? அப்படியானால் மூன்று விதமான சிகிச்சைகள் தேவை.

உள் சுத்தி, புறச் சுத்தி, இரண சிகிச்சைகள் இச் சிகிச்சைகளுக்கு ஒரே வார்த்தையில் பதில்

ஸ்பேமடோன் கொம்பவுண்ட்

(Spermatone Compound)

ஒரு பிரபல ஜெர்மன் டாக்டரின் மருந்து சீட்டிலிருந்து தயார் செய்த ஒரு அற்புத சக்திவாய்ந்த மருந்தாகும்.

8 அவுன்ஸ் பாட்டில் மருந்தின் விலை ரூ. 3/25 வி. பி. பி. தனி.

விபரங்களுக்கும் வி. பி. பி. ஆடர்களுக்கும்,

டாக்டர்

'மோடர்ன் கிலினிக்'

(MODERN CLINIC)
255, காலி ரோட், கொழும்பு-4.
பம்பலப்பிட்டிய கன்வண்ட் எதிரில்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உலகெங்குமுள்ள தமிழரை ஒன்றுபடுத்த ஒரு வழி

## தமிழ் மறைக் கழகம் வகுத்து செயல்படுத்தி வருகிறது

உலக மக்கள் யாவரும் சாதி, மத, நிற வேறுபாடுகளின்றி ஒன்றுபட்டு நல்வாழ்வு வாழ்வதற்கு எல்லா நாடுகளையும் உறுப்பாகக் கொண்ட உலக அரசு ஒன்று தோன்ற வேண்டும் என்றும் அதற்காக அகில இலங்கை தமிழ் மறைக் கழகம் அயராது உழைத்து வருகிறது என்றும் அதன் ஆயுள் தலைவர் பண்டிதர் கா. பொ இரத்தினம் மேற்படி கழகத்தின் ஒன்பதாவது கூட்டம் அணிமையில் கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் கூடியபோது கூறினார்.

உலக தமிழ் மக்களை ஒன்றுபடுத்தும் நோக்கத்துடனேயே ஆண்டில் ஒரு நாளில் அதாவது வைகாசி அனுடத்தில் (இவ்வாண்டு ஜூன் 8) திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடுமாறு கேட்டு வருவதாகவும் அவர் கூறினார். தமது முயற்சிக்கு ஆதரவும் ஊக்கமும் அளித்து வரும் பத்திரிகைகள், வானொலி நிலையங்கள், கழகங்கள் முதலானவற்றிற்கு அவர் நன்றி தெரிவித்தார். பாடசாலை ஆசிரியர்கள் மட்டும் நினைத்தால் திருவள்ளுவர் திருநாள் கொண்டாடும் விஷயத்தில் வியத்தகு சாதனையை ஏற்படுத்தலாம் என்றும் அவர் சொன்னார்.

### மூன்று விஷயங்கள்

கழகம் தற்போது ஈடுபட்டுவரும் முயற்சி பற்றிக் குறிப்பிடுகையில் சிறப்பாக மூன்று விஷயங்களை அவர் கூறினார். (1) திருவள்ளுவர் திருநாளைச் செல்லை அரசினரைக் கொண்டு விடுமுறை நாளாக்குவிப்பது. (2) திருக்குறளைச் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் சிறப்பாக வெளியிடுவது. மற்றும் சீனு, ஜப்பான், பர்மா, யூகோஸ்லேவியா, செக்கோஸ்லேவாக்கியா நாட்டு மொழிகளிலும் மொழி பெயர்த்து எடுப்பது. (3) இவ்வாண்டும் வழமைபோல் தமிழ் மறைத் தேர்வு நடத்தியது.

### வள்ளுவர் படம்

பண்டிதர் கா. பொ. இரத்தினம் இன்னொரு குறிப்பும் சொன்னார். இந்திய அரசினர் தபால் தலைகளில் வெளியிட்ட திருவள்ளுவர் படத்தை இன்னும் கவர்ச்சியுள்ளதாக ஆக்கியிருக்கலாம் என்றார் அவர்.

### உத்தியோகத்தர்கள்

கழக ஆண்டுக் கூட்டத்தில் அடுத்த ஆண்டுக்குரிய அலுவலாளர்களும் தெரிவு செய்யப்பட்டனர். விவரம்:—

செயலாளர்: திரு ஆ சந்தையா; பொருளாளர்: வித்துவான் இ. சி. சோதிநாதன்; துணைப் பொருளாளர்: வித்துவான் நீ. மே. யோ. வேதநாயகம்; ஆட்சிமன்ற உறுப்பினர்: திருவாளர்கள் இ. இரத்தினம், சி. இராமலிங்கம், மு. கணபதிப் பிள்ளை, எஸ். எம். கமால்தீன், பண்டிதர் த. பொ. கார்த்திகேசு, ச. சரவணமுத்து, எஸ். டி. சிவநாயகம், ஆ. க. சுப்பிரமணியம், வ. நடராசா, பண்டிதர் க. மயில்வாகனம், பண்டிதர் க. முருகேசு, செ. வேலாயுதபிள்ளை, செல்வி ந. காசிப்பிள்ளை, திருவாட்டி மகேஸ்வரி பாலகிருஷ்ணன்.

### எட்டாவது திருக்குறள் மாநாடு

தமிழ் மறைக் கழகத்தின் எட்டாவது திருக்குறள் மாநாடு மாத்தளை மாணவர் மன்ற ஆதரவில் ஜூன் 4ஆம் 5ஆம் தேதிகளில் மாத்தளை அர்ச். தோமையார் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். திருக்குறள் ஏட்டுச் சுவடி ஊர்வலத்துக்கு மாத்தளை நகர சபைத் தலைவர் திரு த. தம்பிராசா தலைமைதாங்குவார். திரு மு. லெ. சொக்கலிங்கம் செட்டியார் மாநாட்டைத் தொடக்கி வைப்பார். வழக்குரைஞர் திரு த. சோமசுந்தரம் வரவேற்புரை நிகழ்த்துவார். முதல் நாள் தமிழ் மறைக் கழகத் தலைவர் திரு கா. பொ. இரத்தினமும் இரண்டாம் நாள் நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரி முதல்வர் திரு க. சபா. ஆனந்தரும் தலைமைதாங்குவார்கள்.

### சனிக்கிழமை

மாநாட்டிற் சிறப்புச் சொற்பொழிவாற்றுவதற்குச் சென்னையிலிருந்து திரு ச. சிவகுமாரன் அழைக்கப்பட்டுளார்.

சனிக்கிழமையன்று வித்துவான் நீ. மே. யோ. வேதநாயகம், திருவாளர்கள் க. பே. முத்தையா, எஸ். எம். கமாலதீன், ஆ. சந்தையா, பண்டிதர் க. மயிலவாகனம், திருவாட்டி நவரத்தினம் என்போர் சொற்பொழிவாற்றுவர். கருமாரன் குழுவினர் நடனமும், சங்கீத பூஷணம் திரு இராகவின் இசை விருந்தும் நடைபெறும்.

### ஞாயிறு

ஞாயிற்றுக்கிழமை திருவாளர்கள் நாவலியூர் நா. செல்வத்துரை, வித்துவான் க. வேந்தனார், ஆ நடராசா, நா. முத்தையா, சி. த. சிவநாயகம், வீ. சந்தவனம் என்போர் விரிவுரை நிகழ்த்துவர்.

அகில இலங்கைத் தமிழ் மறைத் தேர்வு, வீரகேசரி இளங்கதிர்-திருவள்ளுவர் திருநாட் கட்டுரைப் போட்டி, மாத்தளை வட்டார மாணவர் பேச்சுப் போட்டி என்பவற்றிலே பரிசில் பெற்றோருக்குரிய பரிசில்களை மருத்துவ கலாநிதி திரு சங்கரப்பிள்ளை வழங்குவார்.

'ஒளிகொடுத்த விளக்கு' எனும் நாடகத்துடன் மாநாடு நிறைவுறும்.

### நாடெங்கும் வள்ளுவருக்கு விழா

ஜூன் மாதம் 8ஆம் தேதி திருவள்ளுவர் திருநாளை உலகெங்குமுள்ள தமிழ் மக்கள் கொண்டாட வேண்டுமென்று தமிழ் மறைக் கழகம் விடுத்த வேண்டுகோள் தமிழ் மக்களிடையே பெரு விழிப்பையும் புத்துணர்ச்சியையும் உண்டாக்கியுள்ளது. வெளி நாடுகளிலும் இலங்கையிலும் பல சங்கங்களும் சபைகளும் திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடுகின்றன.

### கொழும்பில்

கொழும்பு மாநகரில் பல சங்கங்களும் பாடசாலைகளும் வள்ளுவருக்கு விழா எடுக்க முன் வந்துள்ளன. கொழும்புத் தமிழ்ச் சங்கம், கொழும்பு விவேகானந்த சபை, சைவ மங்கையர் கழகம் இசைக் கலை மன்றம் முதலியன முன்னைய ஆண்டுகளிற் போல் இவ்வாண்டும் சேர்ந்து விழா எடுக்குமென்றறிகிறோம். கணபதி வித்தியாலயம், தெமற்றக்கொடை அரசினர் தமிழ்ப்பாடசாலை, முதலியனவும் விழா வெடுக்க ஒழுங்கு செய்கின்றன.

(13-ம் பக்கம் பார்க்க)

# தமிழரசுக் கட்சி தேர்தல் பிரசாரக் கூட்டங்கள்

தமிழரசுக் கட்சித் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் பின்வரும் இடங்களில் பின்வரும் தேதிகளில் நடைபெற விருப்பதாகவும் கீழ்க் குறிப்பிடப்படும் பேச்சாளர்கள் அக் கூட்டங்களில் பேச இருப்பதாகவும் யாழ்-பிரதேச தமிழரசுக் கட்சி அலுவலகப் பொறுப்பாளரும் கட்சி உதவிப் பொதுச் செயலாளருமான திரு. எஸ் சின்னத்துரை அறிவித்திருக்கிறார்.

**மைலிட்டி**

28-5-60-ல் கூட்டம்

பேச்சாளர்கள்: திருவாளர்கள் எஸ். ஜே வி. செல்வநாயகம், பாலசுந்தரம், துரைரத்தினம், வி. என். நவரத்தினம், அமிர்தலிங்கம்.

**உடுப்பிட்டி**

4-6-60-ல் கூட்டம்

பேச்சாளர்கள்: திருவாளர்கள் எஸ். ஜே. வி. செல்வநாயகம், பாலசுந்தரம், வி. ஏ சந்தையா, வி. என். நவரத்தினம், அமிர்தலிங்கம், துரைரத்தினம், கதிரவேற்பிள்ளை, செனட்டர் நல்லையா, டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன், ஜெயக்கொடி.

**கோப்பாய்**

5-6-60-ல் கூட்டம்

பேச்சாளர்கள்: திருவாளர்கள் அமிர்தலிங்கம், வி. என் நவரத்தினம், வி. ஏ. கந்தையா, செனட்டர் நல்லையா, கதிரவேற்பிள்ளை, பாலசுந்தரம்.

**சாவகச்சேரி**

6-6-60-ல் கூட்டம்

பேச்சாளர்கள்: திருவாளர்கள் அமிர்தலிங்கம், வி. ஏ. கந்தையா, பாலசுந்தரம், வி. என். நவரத்தினம்.

**வவனியா**

10, 11-6-60-ல் கூட்டம்

பேச்சாளர்கள்: திருவாளர்கள் எஸ். ஜே. வி. செல்வநாயகம், வி. என். நவரத்தினம், எஸ். நடராஜா, வி. ஏ. கந்தையா, அமிர்தலிங்கம், துரைரத்தினம், டாக்டர் எஸ் ஏ. தர்மலிங்கம், ஜீ. பி. வின்சன்ட்.

**உடுப்பிட்டி**

15-6-60-ல் கூட்டம்

பேச்சாளர்கள்: திருவாளர்கள் அமிர்தலிங்கம், வி. என். நவரத்தினம், துரைரத்தினம், செனட்டர் நல்லையா, புதுமைலோலன், கரிகாலன், ஜெயக்கொடி.

**வட்டுக்கோட்டை**

18-6-60-ல் கூட்டம்

பேச்சாளர்கள்: திருவாளர்கள் வி. ஏ. கந்தையா, பாலசுந்தரம், செனட்டர் நல்லையா, வி. என். நவரத்தினம், அமிர்தலிங்கம்.

**பருத்தித்துறை**

19-6-60-ல் கூட்டம்

பேச்சாளர்கள்: திருவாளர்கள் எஸ். ஜே. வி. செல்வநாயகம், வி. என். நவரத்தினம், அமிர்தலிங்கம், வி. ஏ. கந்தையா, செனட்டர் நல்லையா, ஜெயக்கொடி, புதுமைலோலன், கரிகாலன், துரைரத்தினம்.

**கோப்பாய்**

19-6-60-ல் கூட்டம்

பேச்சாளர்கள்: திருவாளர்கள் எஸ். ஜே. வி. செல்வநாயகம், வி என். நவரத்தினம் அமிர்தலிங்கம், வி. ஏ. கந்தையா, செனட்டர் நல்லையா, ஜெயக்கொடி, புதுமைலோலன், கரிகாலன், துரைரத்தினம், பாலசுந்தரம்.

### புதிய புரொக்டர்



திருகோணமலையைச் சேர்ந்த திரு கே. செல்வராசா உயர்நீதிமன்ற புரொக்டராக அணிமையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். தமது சொந்த ஊரான திருகோணமலையில் தொழில் நடத்துவதையே தாம் விரும்புவதாக அவர் தெரிவித்தார்.

திரு செல்வராசா கோணமலையின் புதல்வர். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்வி பயின்றவர். அங்கு விளையாட்டுகளுக்கு வெற்றி விருதுகள் பல பெற்றிருக்கிறார்.

இலங்கை ஒலிம்பிக் பொது நலக் குடியரசு விளையாட்டுச் சங்கத்தின் நிர்வாகக் கவுன்சில் உறுப்பினராகவும், கரம் பெடரேஷன் துணைத் தலைவராகவும், இலங்கை கைப்பந்தாட்ட பெடரேஷனின் ஆசிரியராகவும் திரு கே. செல்வராசா இருந்து வருகிறார்.

# தட்டெழுத்தாளர் சங்கம் ஆரம்பம்

## கொழும்பில் நடந்தது

அகில இலங்கை அரசாங்கத் தமிழ் தட்டெழுத்தாளர் சங்கம் (தற்காலிக சேவையாளர்) தொடக்க விழா கடந்த சனிக்கிழமை மாலை கொழும்புத் தமிழ்ச் சங்க மண்டபத்தில் மிகவும் விமரிசையாக நடைபெற்றது. சங்கத்தின் தலைவராக திரு க. சுந்தரமூர்த்தியும் செயலாளராக பொ. இராமநாதனும் பொருளாளராக த. நடராசா ஆகியோரும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அரசாங்க இலாகாக்களில் தமிழ் தட்டெழுத்தாளர்களாகக் கடமையாற்றும் எல்லோரும் கூட்டத்துக்குப் பிரசன்னமாயிருந்தனர். கூட்டத்தில் இச்சங்கத்தை ஓர் தொழிற்சங்கமாகப் பதிவு செய்து மற்றும் சிங்கள, ஆங்கில தட்டெழுத்தாளர் சங்கங்களுடன் இணைந்து தமிழ் தட்டெழுத்தாளர்களின் முன்னேற்றத்துக்கும் உரிமைகளுக்குமாக உழைக்க வேண்டும் என செயற்குழுவைச் சபையோர்கள் வேண்டிக்கொண்டனர்.

சங்கத் தலைவர் [illegible] வர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இலங்கையில் சுருக்கெழுத்து, தட்டெழுத்துக் கலை நன்றாகப் பரவவில்லை. அரசாங்கத்துக்கு மேற்படி கலை தெரிந்தவர்கள் தேவையாக இருக்கிறார்கள். இந்த நிலைமையில் அரசாங்கம் நடத்தி வரும் சுருக்கெழுத்து, தட்டெழுத்து போதனா வகுப்புக்களை நிறுத்தி விடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இது மிகவும் வருத்தத்துக்குரியதாகும்."

போதனா வகுப்புகளைத் தொடர்ந்து நடத்துமாறு அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுவதாக ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்துக்கு யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அக்கறைப்பற்று, கல்லோயா முதலிய இடங்களில் கடமையாற்றும் தமிழ் தட்டெழுத்தாளர்களிடமிருந்து வாழ்த்துக்கள் வந்து கிடைத்தன.

தமிழ் தட்டெழுத்தாளர்களுக்கு 1955-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்துக்குப் பின் போட்டிப் பரீட்சை வைக்கப்படவில்லை. 1956-ஆம் ஆண்டு தனிச் சிங்களம் மட்டும் மசோதா நிறைவேற்

(8-ம் பக்கம் பார்க்க)




சி. சி. சி.

தாவர உரப்பசளைக் கலவைகள்

அதிக விளைச்சலுக்கு உத்தரவாதமளிக்கிறது

எமது உரப்பசளைக் கலவைகளின் உதவியால் பெருந்தொகையான நல்ல விளைச்சலைப் பெறுவதற்கு நீங்கள் திடமாக நம்பியிருக்கலாம்.

இலவச விளக்கப் பிரசுரத்திற்கு தயவு செய்து எழுதுக:—

கொழும்பு கொமர்ஷியல் கம்பனி லிமிட்டெட்.

[பெரிய பிரித்தானியாவில் இணைக்கப்பட்டது. அங்கத்தவர் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது.]

தபால் பெட்டி 33 கொழும்பு.




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# எங்கும் தமிழரசு என்பதே பேச்சு! எல்லாரும் வெல்வர் என்பது உறுதியாச்சு!!


திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் (காங்கேசன் துறை)


திரு என். ஆர். இராஜவரோதயம் (திருகோணமலை)


டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் (நல்லூர்)


திரு செ. இராசதுரை (மட்டக்களப்பு)


ஜனாப் என். [illegible] (மட்டக்களப்பு)


திரு எஸ். கதிரவேற்பிள்ளை (யாழ்ப்பாணம்)


திரு வி. ஏ. கந்தையா (ஊர்காவற்றுறை)


திரு ஏ. அமிர்தலிங்கம் (வட்டுக்கோட்டை)


திரு ஜி. பி. வின்சென்ட் (வவனியா)


திரு கே. துரைரத்தினம் (பருத்தித்துறை)


திரு பி. மாணிக்கவாசகர் ([illegible]குடா)


திரு எஸ். எம். இராசமாணிக்கம் (பட்டிருப்பு)


திரு எம். பாலசுந்தரம் (கோப்பாய்)


ஜனாப் எம். ஸி. அஹமது (கல்முனை)


திரு டபிள்யூ. எம். பிரான்ஸிஸ் பெரேரா (சிலாபம்)


திரு வி. என். நவரத்தினம் (சாவகச்சேரி)


திரு டி. ஏகாம்பரம் (மூதூர்)


திரு ஏ. சிவசுந்தரம் (கிளிநொச்சி)


ஜனாப் எம். ஏ. அப்துல் மஜீது (பொத்துவில்)


ஜனாப் எம். ஐ. எம். அப்துல் மஜீத் (நிந்தவூர்)

இரண்டு மஜீதுகளும் தமிழரசு ஆதரவு பெற்றவர்கள்.


திரு வி. அழகக்கோன் (மன்னார்)


திரு கே. ஜெயக்கொடி (உடுப்பிட்டி)


திரு வி. தர்மலிங்கம் (உடுவில்)

## போட்டி—விவரம்

அம்பாறை நீங்கலாக தமிழ்ப் பிரதேசத்திலுள்ள எல்லாத் தொகுதிகளிலும் தமிழரசுக் கட்சி அபேட்சகர்களும் ஆதரவாளர்களும் போட்டியிடுகிறார்கள். சிலாபத் தொகுதியிலும் அப்படியே. இந்த நிலையில் வேறு எந்தக் கட்சியும் இல்லை. தமிழ்க் காங்கிரஸ் 10 தொகுதிகளிலும். சமசமாஜக் கட்சி 2 தொகுதிகளிலும், கொம்யூனிஸ்டு கட்சி 2 தொகுதிகளிலும், யு. என். பி. வெளிப்படையாக 3 தொகுதிகளிலும், சுதந்திரக் கட்சி 3 தொகுதிகளிலும், எம். ஈ. பி. 3 தொகுதிகளிலும் மட்டுமே போட்டியிடுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# துவேஷக் கைது செய்தலும் முறையற்ற காவலும்

## (Malicious Arrest & False Imprisonment)

திரு. எஸ். சபாபதிப்பிள்ளை
M. A., LL. B. (Lond) F. R. A. S., Bar-at-Law
இலங்கை சட்டக்கல்லூரி, தொழில் நுட்பக்கல்லூரி விரிவுரையாளர்
வருமானவரி பரிசிலனைக்குழு சட்ட ஆலோசகர்

நட்டஈட்டுக் குற்றங்களைப் பற்றி ஆராயுங்கால் முந்திய கட்டுரையில் துவேஷப் பிராது (Malicious Prosecution) பற்றி விளக்கம் கூறினோம். அதன் சாராம்சம் யாதெனில் ஒருவர் இன்னொருவர்மீது துவேஷ நோக்கத்துடன் ஒரு தண்டனைக் குற்ற (Criminal) வழக்கை வைத்து அவ்வழக்கு முடிவில் குற்றம் சாட்டப்பட்டவருக்குச் சாதகமாகத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின் குற்றச் சாட்டுக்கு ஆளாக்கப்பட்டவர் குற்றம்சாட்டியவர்மீது நட்டஈடு கோருவதாகும். நட்டஈட்டுக்கு மாத்திரமன்றி அவர்மீது துவேஷப் பிராது என்னும் தண்டனைக் குற்ற வழக்கும் வைக்க முடியும். அங்கு பிரதான அம்சம் யாதெனில் நன்னம்பிக்கையின்றித் துவேஷத்தினால் வழக்குத் தொடருவதற்கு ஏதுவாயிருந்தாரென்பதே.

### கைது செய்ய ஏதுவாய் இருத்தல்

இதேபோல இன்னொருவர் மீது வழக்குத் தொடராவிடினும் இன்னொருவரைக் குற்றம்சாட்டி அவரைக் கைது செய்தற்கு (Arrest) ஏதுவாயிருத்தலும் ஒரு நட்டஈட்டுக் குற்றமாகும். இங்கும் துவேஷ மனப்பான்மை அத்தியாவசியம். இக்குற்றத்திற்குப் பின்வரும் இலக்கணம் கூறியுள்ளார்கள்:— கைது செய்தற்கு உத்தரவளிக்கப்பட்ட ஒருவரிடம் [illegible] மனப்பான்மையுடனும் போதிய நியாயமானதும் நம்பகமானதுமான காரணமின்றி இன்னொருவரை குற்றம்சாட்டி முதற் கூறிய நபரைக் கொண்டு குற்றம்சாட்டப்பட்டவரை கைது செய்விப்பதே துவேஷக் கைது செய்தல் (Malicious Arrest) என்று கூறப்படும்.

### நிரூபணம் வேண்டும்

பின்கூறப்படும் முறையற்ற காவலுக்கும் (False Imprisonment) இக்குற்றத்துக்கும் ஓரளவு ஒற்றுமையிருப்பினும் இவை இரண்டும் வித்தியாசமான குற்றங்களென்பதைக் கவனிக்க வேண்டும். இக்குற்றத்துக்கும் துவேஷப் பிராது (Malicious Prosecution)வுக்கும் உள்ள வித்தியாசம் யாதெனில் இக்குற்றத்தை நிரூபிப்பதற்குக் குற்றஞ்சாட்டப்பட்டவரில் வழக்குத் தொடரப்பட்டது அல்லது வழக்குத் தள்ளுபடியானதென்பதை நிரூபிக்கும் சங்கடம் ஏற்படாது.

இன்னொருவரின் வேண்டுகோளின்றி தானாகவே கைது செய்த, ஒரு கைது செய்ய உத்தரவுள்ள காரியஸ்தரும் இக்குற்றத்துக்கடங்கிய அம்சங்கள் முழுவதும் நிரூபிக்கப்படின் இக்குற்றத்துக்கேதுவாகுவார்.

### இரண்டு அம்சங்கள்

துவேஷ கைது செய்தல் குற்ற வழக்கை வைக்கும் வழக்காளி பின்வரும் அம்சங்களை நீதிமன்றத்தில் ஸ்தாபிக்க வேண்டும்:-

(1) அதாவது தன்னைக் கைது செய்தவர் பிரதிவாதியென்றுவது அல்லது அவரின் உத்தரவின்படி அல்லது அவரின் தூண்டுதலினால் தான் தண்டனைக் குற்றச் சாட்டின் நிமித்தம் கைது செய்யப்பட்டதாக நிரூபிக்க வேண்டும்.

(2) இதுதான் பிரதான அம்சம்: பிரதிவாதி துவேஷ நோக்கமாகத்தான் இச்செயலில் ஈடுபட்டாரென நிரூபிக்க வேண்டும். இப்படியான குறிக்கோளில்லாவிடில் ஒருவரும் குற்றம் செய்த இன்னொருவரைக் கைது செய்யவோ அல்லது அதற்கு ஏதுவாயிருக்கவோ முன்வரமாட்டார்கள். அப்படியாயின் குற்றமே உலகத்தில் தாண்டவமாடத் துவங்கிவிடும்.

### துவேஷ மனப்பான்மை

இத்துவேஷ மனப்பான்மை எத்தகையது என்பதை ஆராய்வோம். முந்திய கட்டுரையில் இதன் இலக்கணத்தை விரிவாக ஆராய்ந்திருந்தோம். ஒருவர் அதிகாரிகளுக்கு முறைப்படும்பொழுது குற்றத்துக்கு பிரதானமான ஒரு விஷயத்தைத் தெரிந்தும் மறைத்தாரென்பது அவரின் துவேஷ மனப்பான்மையை விளக்கும். அதைவிட அவரின் பகைமை, எரிச்சல் மற்றைய நேர் துவேஷச் சான்றுகளும் இம்மனப்பான்மையை விளக்கும். இதைவிட துவேஷ மனப்பான்மையை சூழ்நிலையிலிருந்தும் யூகித்துக்கொள்ளலாம். கீழ்வரும் தென்னாபிரிக்க வழக்கு உதாரணம் இதை விளக்கும்.

### தென்னாபிரிக்கா வழக்கு

தென்னாபிரிக்காவில் தோட்டத் தொழிலுக்காக ஒப்பந்தம் செய்து வந்த இந்தியர்கள யாவரும தெருவில் திரியும்பொழுது ஒரு உத்தரவுச் சீட்டு (Permit) தங்களுடன் கொண்டு திரிய வேண்டுமென ஒரு சட்டமுண்டு. அச்சட்டப்படி ஒரு நகர காவலர் (Police Officer) அவ்வுத்தரவுச் சீட்டில்லாத நபர்களை சிறைபிடிக்கும்படி உத்தரவிடப்பட்டார். அந்நகர காவலர் ஒரு உத்தியோக வகுப்பைச் சேர்ந்த ஒரு இந்தியரை அவர் எவ்வகைப் பட்டவரெனவே விசாரியாமல் கைது செய்தார். விசாரித்திருந்தால் அவர் ஒரு ஒப்பந்தத் தோட்டத் தொழிலாளியென வறிந்திருக்கலாம். ஆனால் தன் கடமையில் அசண்டையாயிருந்ததின் நிமித்தமாக இப்பிழையேற்பட்டது. அவ்வுத்தியோகத்தர் இவர் மேல் துவேஷக் கைது செய்தல் குற்றம் சாட்டி நட்டஈடு கோரிய வழக்கில் இவருடைய அசண்டைத்தனம் துவேஷத்தை விளக்கியதெனத் தீர்க்கப்பட்டது.

### இலங்கை வழக்கு

இது போலவே இலங்கையிலும் ஒரு வழக்கில் ஒரு பெண் மீது அவள் நகையைக் களவெடுத்தாரென ஒருவர் நகரகாவலருக்கு அறிவித்தார். நகரகாவலர் அவர் வீடு வந்து அவரின் வாய்ப்பிறப்பைக் கேட்டு விட்டு அப்பெண்ணைக் கைது செய்தார். வழக்குத் தள்ளுபடியானது. கைது செய்யப்பட்ட பெண் நட்ட ஈட்டு வழக்கு கொண்டு வந்தார். அவ்வழக்கில் தீர்ப்பளிக்கையில் உயர் நீதிமன்றம் பின்வரும் அபிப்பிராயத்தைத் தெரிவித்தது “துவேஷம் இருக்கிறதென்பதை நேரடியாக அத்தாட்சிப் படுத்தத் [illegible] ஒருவர் அசண்டைத்தனமாக அல்லது சாதாரண மனிதர் செயலாற்று முறையில் கவனம் செலுத்தாமல் செயலாற்றி அல்லது குற்றம் சாட்டக்கூடிய தகவல் யாதுமில்லாதிருக்கும் நிலையில் ஒருவரைக் குற்றச் சாட்டுக்குள்ளாகினும் அவர் துவேஷ மனப்பான்மையோடு செய்தாரென்றே யூகிக்க இடமுண்டு” பெரும்பான்மையாக இவ்விஷயம் ஒரு சத்தத்துவப் பிரச்னை (question of fact.)

### ஒரு சிக்கல்

இந்நிலையில் பிரதிவாதி போதிய நியாயத்துடனும் நம்பகமான காரணத்துடனும் தான் கைது செய்ததாகவேனும் நிரூபித்தால் சூழ்நிலையால் யூகிக்கப்படும் துவேஷ மனப்பான்மை நிலையைநிராகரிக்க முடியும். ஆனால் ஒரு நியாமான மனிதரின் மனதில் குற்றச் சாட்டைப் பற்றி ஐமிச்சம் தோன்றக்கூடியநிலையில் ஒருவர் கைது செய்தால் அல்லது கைது செய்வதற்கு ஏதுவாயிருந்தால் தன் மனதிலே நன்னம்பிக்கையுடன் தான் செயலாற்றியதாக நிரூபித்து இக்குற்றத்தைத் தவிர்க்க முடியாது. நியாயமான காரணமுண்டோ இல்லையோ வென்பது செயலாற்றியவரின் மனப்பான்மையில் தங்கிய விஷயமல்ல; வெளியிலிருந்து பார்ப்பவரின் நிலையிலிருந்தே யறிய வேண்டிய விஷயம்.

### முறையற்ற காவல்

இனி இதற்குத் தொடர்பாயுள்ள முறையற்ற காவல் (False Imprisonment) பற்றிச் சிறிது ஆராய்வோம். ஒருவரை இன்னொருவர் நீதிமன்ற மூலமன்றி ஒரு பிரத்தியேக வீட்டிலாகிலும் அல்லது பகிரங்க வீதிகளிலாகிலும் மறியலில் அல்லது காவலில் வைத்திருத்தலே முறையற்ற காவல் குற்றமாகும். இதுவும் ஒரு நட்ட ஈட்டுக் குற்றமேயாம். இக்குற்றத்துக்குமுக்கியாம்சம் காவலில் வைக்கப்பட்டவர் ஒரு வழியாலும் ஓட முடியாமல் எல்லாப் பக்கத்தையும் அடைத்து விடுவதே. ஆகையால் ஓடுவதற்கு ஒரு வழியிருந்தால் தன் விரும்பிய பாதையால் அல்லது மார்க்கத்தால் போக விடாமல் தடுபட்டதன் நிமித்தம் அது மறியலெனக் கருதப்படமாட்டாது. இப்பேர்ப்பட்ட மறியலுக்கு ஒருவருடைய உடம்பைத் தீண்டியிருக்கத் தேவையில்லை. உதாரணமாக ஒருவர் ஒரு அறையுளிருக்கும் போது கதவுகளைப் பூட்டி விட்டால் அது முறையற்ற காவலாய் முடியும். அடைபட்டவர் தான் காவலில் வைக்கப்பட்டிருப்பதையுணரவும் தேவையில்லை.

உதாரணமாக ஒருவர் ஓர் அறையுள் தூங்கிக் கொண்டிருக்கும் சமயம் கதவுகளைப் பூட்டினாலும் இக்குற்றத்துக்கு ஆளாக முடியும். ஆனால் இச்சந்தர்ப்பங்களில் மன்றம் சொற்ப நட்டமே தீர்க்கும்.

### வித்தியாசம்

துவேஷக் கைது செய்தலுக்கும் முறையற்ற காவலுக்குமுள்ள வித்தியாசத்தைப் பின்வரும் உதாரணங்களால் விளக்களாம்.

(அ) ஒருவர் இன்னொருவரை நியாயமின்றிக் கைது செய்து தன் வீட்டில் அடைத்து வைத்தால் அது முறையற்ற காவலாகும்.

(ஆ) ஆனால் துவேஷ மனப்பான்மையுடன் இன்னொருவர் களவெடுத்தாரென நகர காவலதிகாரிக்குப் புகார் செய்து கைது செய்வித்தால் துவேஷக் கைது செய்தலுக்கு ஆளாகுவார். அச்சந்தர்ப்பத்தில் நகரகாவலர் மீது முறையற்ற காவல் குற்றம் சாட்ட முடியாது. ஏனெனில் புகார் செய்யப்பட்டவர்களைச் சொற்ப காலத்துக்கு கைது செய்து வைப்பது அவர்களின் உரிமை— ஆனால் பிணை கொடுத்தால் விடுதலை செய்ய வேண்டிய கடமையும் சில சமயத்திலுண்டு.

(இ) துவேஷ மனப்பான்மையுடன் நீதிபதி முன்னிலையில் புகார் செய்து அவரின் உத்தரவின்படி காவலில் வைக்கப்பட்டால் புகார் செய்தவர் மீது முறையற்ற காவல் குற்றம் சாட்ட முடியாது. ஏனெனில் காவலில் வைத்தவர் நீதிபதி அதுவுமன்றி துவேஷக் கைது செய்தல் குற்றமும் சாட்ட முடியாது. ஏனெனில் நகரகாவலர் கைது செய்தல் நிர்வாகச் செயல் (Administrative act). ஆனால் நீதிபதி கைது செய்தல் சட்ட ரீதியான செயல். சட்ட ரீதிச் செயலுக்கு ஒருத்தர் பாத்திரவாளியல்லர். ஆனால் நிர்வாகச் செயலில் தவறு இழைத்தால் அதைச் செய்வித்தவர் பொறுப்பாளியாவார். ஆனால் இச்சந்தர்ப்பத்தில் நீதிமன்றம் கைது செய்யப்பட்டவர் நிரபராதியெனத் தீர்த்தால் துவேஷப் பிராது (Malicious prosecution) குற்றத்துக்கு அதன் அம்சங்கள் அமைந்தால் ஆளாவார்.

### இன்னொரு வித்தியாசம்

துவேஷக் கைது செய்தலுக்கும் முறையற்ற காவலுக்குமுள்ள இன்னொரு வித்தியாசம் யாதெனில் முன் கூறிய குற்றத்துக்கு துவேஷ மனப்பான்மையும் தகுந்த காரணமின்மையும் இருக்க வேண்டும்; ஆனால் முறையற்ற காவலுக்கு அத்தகைய மனப்பான்மை யல்லது தகுந்த காரணமின்மை தேவையில்லை. உதாரணமாக ஒரு சித்த சுவாதீனமற்றவரை அவரின் நன்மைக் கருதியும் முழு விசுவாசத்துடனும் அறையில் பூட்டி வைத்தால் பூட்டி வைத்தவர் அக் குற்றத்துக்காளாவார்—இங்கு துவேஷ மனப்பான்மையிலலை யென்பதையும் நன்னம்பிக்கையுண்டென்பதையும் கவனிக்கலாம். எனினும் குற்றம் அமைந்திருக்கிறது.

## நாதசுர வித்துவான் கௌரவிக்கப்பட்டார்

பாணாவிடை சிவன் கோவில் ஆறும் திருவிழா அணிமையில் நடைபெற்றபோது இணுவில் நாதசுர வித்துவான திரு ந. ஆ. கோவிந்தசாமிக்கு பாணாவிடை சிவன் கோவில் அருள நெறி மன்றத்தாரால் அவரின் வித்துவத் தன்மையைப்பாராட்டி “நாதசுரகான கலாமணி” என்னும் பட்டமும் வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

ஆஸ்த்மா என்ற தொய்வால் அவதிப்படும் அன்பர்களே

அநேக ஆண்டுகளின் ஆராய்ச்சியின் விளைவாக வந்த “ஆஸ்த்மடிக்கா” என்ற அற்புத மருந்தைப் பாவியுங்கள்.

3 பாட்டில்கள் தொடர்ச்சியாகப் பாவித்தால் வியாதி பூரண சுகமடையும் என்பது நம் உத்தரவாதம்.

ஆஸ்த்மா, மாரடைப்பு, மார்ச்சளி, மார்பில் “கர்” என்ற சத்தம், இரவில் ஏற்படும் இருமல் இவைகளுக்கு

“ஆஸ்த்மடிக்கா”

ஒரு நவீன சஞ்சீவி

“ஆஸ்த்மடிக்கா” ஸ்பெஷல் ரூ. 15-00.

(மிக உபாதை தரக்கூடிய, நாள்பட்ட ஆஸ்த்மாவுக்கு)

“ஆஸ்த்மடிக்கா” சாதாரணம் ரூ. 5-00.

வி. பி. பி. சதம் 85.

விபரங்களுக்கும் வி. வி. பி. ஓடர்களுக்கும்

டாக்டர்,

மொடர்ன் கிளினிக்

MODERN CLINIC

255, காலி ரோட், (பம்பலப்பிட்டிய கன்வன்ட் எதிரில்)
கொழும்பு—4.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அப்பன் சேனநாயகாவுக்கு பிறந்த தேதியே தெரியாது-மகன் டட்லி

## எப்படி இலங்கைப் பிரஜையாகலாம்?

## பிரஜா உரிமைச் சட்டம் ஒரு கேலிக்கூத்து! முதல்தர மோசடி!!—மாற்றவேண்டும்

### பாராளுமன்றத்தில் டாக்டர் நாகநாதன்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

"சொந்த மண்" என்ற உரிமையில் பிரஜா அந்தஸ்து வழங்குவது ஒரு அடிப்படை. இன்னொரு அடிப்படை "தத்துவப் பிரஜாவுரிமை" (Naturalisation). இங்கே 'சொந்த மண்' உரிமையில் பிரஜையாகவும் முடியாது: தத்துப் பிரஜா அந்தஸ்து (Naturalisation) அடிப்படையில் பிரஜாவுரிமை பெறவும் முடியாது. இது ஒரு வேடிக்கையான நாடு. தாய்நாட்டுப் பற்றென்றால் இன்னது என்று தெரியாத மக்கள்; சரியான தத்துவம் எதுவும் தெரியாதவர்கள். இங்கே உண்மைக்கிடமில்லை; உயர்ந்த நோக்கங்கள் இல்லை.

பிரஜாஅந்தஸ்து "மண் உரிமை"மூலம் பெறுவதைவிட "இரத்த உரிமை"ப் பிரஜா அந்தஸ்து என்றும் ஒன்று உண்டு. நாகரிகம் அடைந்த முன்னேற்ற நாடுகளில் நிலவும் பிரஜாவுரிமைச் சட்டங்கள் இந்த அடிப்படையிலிருப்பதைக் காணலாம். தாய்நாட்டை விட்டு இன்னொரு நாட்டில் தங்கியிருக்கும் காலத்தில் ஒருவருக்கு ஒரு குழந்தை பிறந்தால் அக்குழந்தை பிறந்த நாட்டின் ஒரு பிரஜை. உதாரணமாக இங்கிலாந்திலிருக்கும் இலங்கை அரசாங்க தூதுவருக்கும் அவர் மனைவிக்கும் ஒரு குழந்தை பிறந்தால் அக்குழந்தை அந்த நாட்டின் சட்டப்படி ஒரு ஆங்கிலப் பிரஜை. ஆனால் பெற்றோர்கள் பிற நாட்டிலிருந்தபொழுது குழந்தை பிறந்தாலும் அவர்கள் இலங்கையர் என்பதினால் "இரத்த உரிமை" அடிப்படையில் குழந்தைக்கு இலங்கைப் பிரஜாவுரிமையும் கிடைக்கிறது. ஆனால் இரத்த உரிமை அடிப்படையில் இலங்கையில் பிரஜையாக வேண்டுமா

## இது என்ன நீதி? சட்டம் சிங்களவருக்கு ஒரு மாதிரி தமிழருக்கு இன்னொரு மாதிரியா?

னால் பெற்றோர்கள், பேரன், பேத்திமார், பூட்டன் பூட்டிமார் அத்தனை பேரும் இலங்கைப் பிரஜைகள் என்று நிரூபித்தே உரிமை பெற முடியும்! இந்தவிதமாக நீடித்துக்கொண்டே போகிறது சட்டம்.

இது மிகவும் மடைத்தனமான, முற்றிலும் நியாயமற்ற பிரஜாவுரிமைச் சட்டம். பிரஜைகளைப் பிரித்து வைக்கும் நோக்கங்கொண்டது இது. நான் இலங்கையில் பிறந்தால் போதாது. நான் நாகநாதன் குடும்பத்தைச் சேர்ந்தவன் என்று நிரூபிக்க வேண்டும். நான் நல்லூர் என்ற கிராமத்தில் சங்கிலித் தோப்பில் பிறந்தவன் என்று காட்டி வேண்டும். இலங்கையில் பிரஜாவுரிமை பெற ஒருவன் 1948 அக்டோபர் 1ம் தேதிக்கு முன் பிறந்திருக்க வேண்டும். தன்னுடைய பிறப்புப் பதிவுப் பத்திரத்தைக் காட்ட வேண்டும்; தாயினதும் தந்தையினதும் பிறப்புப் பத்திரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டத்தின்படி இலங்கைப் பிரதமரே இலங்கைப் பிரஜையல்ல. பிரதமரின் தந்தையால் தம்முடைய பிறப்புப் பதிவுப் பத்திரத்தைக் காண்பிக்க முடியவில்லை. இதைப் பிரதமரின் தந்தையாகிய டி. எஸ். சேனநாயகாவே என்னிடம் கூறியிருக்கிறார்.

மகாதேசாதிபதி வீட்டில் நடந்த ஒரு பிறந்த தின விழாவிற்குப் போயிருந்தேன். அங்கே டி. எஸ். சேனநாயகாவைக் கேட்டேன் "உங்கள் பிறந்த தினம் எப்போது?" என்று. "எனது தந்தை அதை என்னிடம் கூற மறந்துவிட்டார்" என்றார் முன்னாள் பிரதமர். இதே கேள்வியை திரு ஓ. ஈ. குணதிலகாவும், சி. எல். விக்கிரமநாயகாவும் சேனநாயகாவிடம் கேட்டபொழுது அப்பொழுதும் அவர் தகப்பன் சொல்ல மறந்துவிட்டார் என்றார்.

உடனே குணதிலகாவும் விக்கிரமநாயகாவும் சொன்னார்கள், தங்களிருவரினதும் பிறந்த தினமே சேனநாயகாவின் பிறந்த தினமாகவும் இருக்கட்டும் என்று. அன்று தொடக்கம் குறிப்பிட்ட இந்தத் தினமே டி. எஸ். சேனநாயகாவின் பிறந்த தினமாகிவிட்டது. கொண்டாட்டங்களும் நடைபெற்று வந்தன. இவ்வாறாக இன்றைய இலங்கையின் பிரதமராலேயே தம்முடைய பிரஜாவுரிமையை ஒரு நீதிமன்றத்தில் நிரூபிக்க முடியாது.

கௌரவ ஜே. ஆர். ஜெயவர்தன:- இது ஒரு வேடிக்கை!

டாக்டர் நாகநாதன்: உங்கள் அரசாங்கத்தின் பிரஜாவுரிமைச் சட்டம் அதிலும் பெரிய வேடிக்கை! உங்கள் பிரதமரால் தனது பிரஜாவுரிமையை நிரூபிக்க முடியாது. தனது தந்தையின் பிறப்புப் பதிவுப் பத்திரத்தை அவரால் காண்பிக்க முடியாது. எனவே அவர் இலங்கையின் பிரஜையல்ல. அவரின் குழந்தைகள் இலங்கைப் பிரஜைகளாக முடியாது. (துரதிர்ஷ்டமாக அவருக்குக் குழந்தைகளில்லை). இந்த நாட்டில் நூற்றுக்கணக்கான வருஷங்களாக சேனநாயகா குடும்பம் வாழலாம். ஆனால் அவர்கள் தங்கள் பிரஜாவுரிமையை நிரூபிக்க முடியாது.

இதுதான் என்னுடைய வயிற்றெரிச்சல்! அதாவது பிரஜாவுரிமையை நிரூபிப்பதற்கு உரிய தஸ்தாவேஜுகள் இலங்கையில் இல்லை. பிறப்புப் பதிவுச் சட்டம் முதல் முதல் ஜுலை மாதம் 1ம் தேதி 1897ல்தான் நடைமுறைக்கு வந்தது. சபாநாயகர் அவர்களே! எனது தந்தைக்கோ, உங்கள் தந்தைக்கோ பிறப்புப் பதிவுப் பத்திரம் கிடைக்காது போகலாம். எனவே கவனியுங்கள், உங்கள் பிறப்பை அத்தாட்சிப்படுத்த உங்களால் முடியாது; எனவே உங்கள் பிரஜாவுரிமையை நீங்கள் நிரூபிக்க முடியாது. உங்கள் பேரப்பிள்ளைதானும் தனது பிரஜாவுரிமையை நிரூபிக்க முடியாது. விவாகப் பதிவுகள்கூட இந்த நாட்டில் பல வருடங்களுக்குப் பின்னரே பதிவு செய்கிறார்கள்.

இந்த நாட்டில் நடைமுறைக்குக் கொண்டு வர இயலாத சட்டமொன்றை இயற்றியிருக்கிறீர்கள். நீதிமன்றத்தில் எடுத்து வாதிட முடியாத ஒரு சட்டமிது. எனவே இச்சட்டம் பெரிய தொரு மோசடி! எமது உரிமைகளை வாதிட்டுப் பெற்றுக்கொள்ளவே நீதிமன்றம் போகிறோம். நீதிமன்றத்தில் நிரூபிப்பதற்குத் தேவையான பத்திரங்கள், தஸ்தாவேஜுகள் அறவே இல்லாத இடத்தில், உரிமையை நிரூபித்துக்கொள்வதெப்படி? தனிப்பட்டவர் எவரிடத்தும் பிழையில்லை. இது சட்டத்தின் பிழை. நிதி மந்திரி கூறியதுபோல இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டம் ஒரு பெரிய வேடிக்கை.

தமிழாக்கம் :
செ. குமாரசாமி

## உலகில் எங்கும் இப்படி இல்லையே! சற்று நாகரிகமானதாக்குங்கள்

தனிப் பிரஜையின் சுதந்திரத்தைப் பாதுகாப்பது நீதிமன்றம். இந்தப் பாதுகாப்பை எடுத்துவிட்டால் பிரஜாவுரிமையை நிலைநாட்ட முடியாது. இதன் விளைவு என்ன? இந்த நாட்டு மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பது—நீதிமன்றமல்ல—அரசாங்கமாகிவிடுகிறது. மனம்போனபோக்கில் எந்தவித நியாய அடிப்படையுமின்றி அரசாங்கம் சொல்லலாம் "உனக்குப் பிரஜா உரிமை உண்டு; உனக்குப் பிரஜா உரிமை இல்லை" என்று. டாக்டர் நாகநாதன் யார் என்றால் அரசாங்கம், தான் நினைத்த ஒருவரைக் காட்டி இவர்தான் டாக்டர் நாகநாதன் என்று கூறலாம். எனக்குப் பிறப்புப் பத்திரம் இருப்பதுபோல உங்களிடமும் பதிவுப் பத்திரம் இருந்தால் இப்படி நினைத்தபடி அரசாங்கம் கூற முடியாது. ஆனால் இன்னொரு நாகநாதனைப் பார்த்து நீ "கள்ளத் தோணி" என்று அவரைக் கைதாக்கலாம்!

இயலாத ஒன்றை நிரூபிக்கும்படி கேட்கிறது அரசாங்கம். இதனால் அரசாங்கம் அடக்குமுறையில் நடந்துகொள்ளுகிறது. இந்தவகைகளில் நடந்துகொண்டிருக்கிறது இனவொழிப்பு.

குடியேற்றத்தினால் நாடு பறிபோகிறது; பிரஜாவுரிமைச் சட்டத்தினால், குடியுரிமை பறிபோகிறது. அத்துடன் எமது பழம் பெருமைமிக்க சரித்திரமும் மாற்றி எழுதப்பட்டு, அழிக்கப்படுகிறது எனவே எம்மைக் கொலை செய்ய—எம் இனத்தை நிர்மூலமாக்க—இவர்கள்முனைந்து நிற்கும் பொழுது இந்தக் கொலைகாரச் சட்டங்களை இப்படியேவிட்டு வைக்க முடியுமா நாம்? இந்தச் சட்டத்தில் திருத்தங்கள் செய் என்று கூறுகிறோம் நாம். இந்த நாட்டின் அந்நியர்களின் [illegible] இந்நாட்டு மக்களின் நலனுக்காகவே இந்தச் சட்டத்தை நாங்கள் திருத்திக்கொள்ள வேண்டும்.

ஒரு சிங்களவனை, அல்லது சிங்களவனைப்போல நடித்துக்கொள்ளுபவனை அரசாங்கம் தனது யதேச்சையையொட்டிப் பிரஜையாக ஏற்றுக்கொள்ளுகிறது. ஆனால் ஒவ்வொரு தமிழனும், ஒவ்வொரு முஸ்லிமும் ஒரு சந்தேகப் பிரஜை! வருஷங்கள் உருள, உருள, சந்தேகமும் வளர்ந்துகொண்டே போகிறது. இந்த அடிப்படையில் எனது பேரப்பிள்ளை தன்னுடைய பிறப்பை நிரூபித்தால் போதாது. அதன்பின்னர் தனது தந்தையின் பிறப்புப் பதிவைச் சமர்ப்பிக்க வேண்டும். அத்துடன் தனது தந்தை தனது தாயை விவாகம் செய்த பதிவுப் பத்திரத்தைக் காட்ட வேண்டும். எனது பூட்டப்பிள்ளை இன்னும் ஒருபடி போய் என்னுடைய பிறப்புப் பதிவையும் காட்ட வேண்டும்.

இந்தப் பிரஜாஉரிமைச் சட்டம் 1948ல் இயற்றப்பட்டது. 2048ம் ஆண்டு ஒவ்வொரு தமிழனும் ஒவ்வொரு முஸ்லிமும் ஆறு, ஏழு தலைமுறைக்கு முந்திய தன முதாதையர்களின் பிறப்புப் பதிவுப் பத்திரங்களைத் தேடிப் பிடிக்க வேண்டும்! எனவேதான் இந்தப் பிரஜாவுரிமைச் சட்டத்தை சிறிது நாகரிகமான சட்டமாக்குங்கள் என்று கேட்கிறேன். இந்த இனவொழிப்பு உபாயங்களால் வேகத்தில் அழிந்துகொண்டிருக்கும் தமிழருக்கும் முஸ்லிம்களுக்கும் இச்சட்டம் தலைமேல் தொங்கிக்கொண்டிருக்கும் ஓர் ஆபத்தாக இல்லாது போகட்டும்.

இலங்கை இணைப்பாட்சி அரசமைப்புப்பற்றி இரண்டு வார்த்தைகள் கூற வேண்டும். எனது நண்பர் கல்வி மந்திரியவர்கள் இணைப்பாட்சி அரசமைப்புப்பற்றிச் சிறிது கல்வி புகட்டப்பட வேண்டிய நிலையிலிருக்கிறார். இணைப்பாட்சி என்றால் பிரிவினை என்கிறார் நண்பர். சுவிற்சர்லாந்து மக்கள் பிரிவினைப்பட்டா இருக்கிறார்கள்? இந்திய மக்களை இணைப்பாட்சி அரசமைப்பு பிரித்தா வைத்திருக்கிறது? ஐக்கிய அமெரிக்க மக்கள் இணைப்பாட்சியால் பிரிவினைப்பட்டுவிட்டார்களா? இரு இனங்களைச் சேர்ந்த மக்களைச் சுபீட்சமும், சாந்தியும்நோக்கிச் சகோதரர்களாக இணைந்து வாழ இருக்கின்ற ஒரேயொரு மார்க்கம் இணைப்பாட்சி அரசமைப்பேயாகும்.

இதை நாங்கள் சிங்களவர்களிடமிருந்து எதிர்பார்க்கலாமா? சிங்களவர்கள்தான் இலங்கைப் பிரிவினையை வளர்க்கிறார்கள். நிர்வாகத்தைச் சீர்படுத்துவதற்காகவே (அதிகாரத்தைப்) பிரிக்கச் சொல்லுகிறோம். கொழும்பு மாநகரம் வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டில்லையா? இலங்கைத் தீவு மாகாணம், மாகாணமாகப் பிரிக்கப்பட்டில்லையா? சிறந்த ஐக்கியத்தையும், திண்மையையும் சிறந்த முன்னேற்றத்தையும் கருதியே இப்படிவட்டாரங்களாகவும் மாகாணங்களாகவும் பிரித்திருக்கிறார்கள். அதேபோல இலங்கைத் தாய்நாட்டின் ஒற்றுமையையும் உயர்வையும் கருதி இலங்கை ஆட்சிபீடத்தின் அதிகாரத்தைப் பிரிக்கும்படி இலங்கைத் தமிழரசுக் கட்சி கூறுகிறது.

(முற்றும்)

### பொன்னம்பலனார்...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

தான் மோத முடியும்...... போங்கள்"

சூழ்நிலைப் படலம் சுருக்கமாக முடியும் வேளை மூன்று தடவை வாசகர்கள் 'அம்பலனார் கூத்து அடியோடு வீழ்க!' என்று முழங்குவார்களாக. [முற்றும்.]


இந்தியாவின் உயர்ந்த ரக உற்பத்தி!
மங்கையர் மனதுக்குகந்தது

உஷா தையல் மெஷின்களே




● ஒருவரின் ஆயுள் காலம்முழுவதும் உழைக்கக்கூடிய வெகுமதி

● மாதத் தவணைக் கட்டணங்களில் பெறுக் கொள்ளலாம்;

● இலங்கை பூராகவும் விற்பனையாகிறது;

● உங்கள் உள்ளூர் விற்பனையாளர்களைக் கேளுங்கள்,

சோல் ஏஜண்டுகள்:
ரெய்மூசன்ஸ் லிமிட்டெட்,
88 A, மெயின் வீதி, கொழும்பு-11
போன்: 4243, 5060

கல்கத்தாவிலுள்ள இந்தியன் என்ஜினியரிங் எக்ஸ்போர்ட் புரொமோஷன் கவுன்சிலால் நடாத்தப்படுவது


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1960 மே மாதம் 29-ந் தேதி

194ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.
தொலை பேசி எண்: 3411. த பெ. 1183

# இறுதிப் போர்!

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் எதிர்வரும் பொதுத் தேர்தலில் எதற்காகப் போட்டியிடுகிறார்?

தமிழ்ப் பிரதிநிதிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரு ஐக்கிய முன்னணி அமைக்க வேண்டும். தமிழ் மக்களுடைய குரல் பாராளுமன்றத்தில் ஒரே குரலாக ஒலிக்க வேண்டும் என்றெல்லாம் வாயளவில் உன்னதமான தத்துவம் பேசி வந்த திரு. பொன்னம்பலம் இப்போது எதற்காகப் போட்டியிட்டுத் தமிழ் மக்களிடையே, அவர்தம் பிரதிநிதிகளிடையே ஏற்பட்ட ஐக்கிய முன்னணியைத் தகர்க்கப் பார்க்கிறார்? பாராளுமன்றத்தில் ஒன்றாக ஒலித்த தமிழ் மக்களின் தனிக் குரலை நசுக்கப் பார்க்கிறார்?

1960 மார்ச்சில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழ் பேசும் மக்கள் தேர்ந்தனுப்பிய பிரதிநிதிகள் ஒன்றாக நின்றார்கள். ஒரே குரலை எழுப்பினார்கள். இலங்கை அரசியலில் என்றும் கண்டிராத அற்புதமாக ஒரு ஐக்கிய முன்னணி உருப்பெற்றிருந்தது!

உண்மையில் ஒரு ஐக்கிய முன்னணி ஏற்பட வேண்டும் என்ற விருப்பம் திரு. பொன்னம்பலத்துக்கு இருந்திருந்தால், கடந்த மார்ச்—ஏப்ரல் மாதங்களில் தமிழ் பேசும் மக்களிடையேயும் அவர்தம் பிரதிநிதிகளிடையேயும் உருப்பெற்றிருந்த ஐக்கிய முன்னணியைக் கண்டு அவர் மகிழ்ந்திருக்க வேண்டும். அதற்குமாறாக இன்று அதே ஐக்கிய முன்னணியில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராகப் போட்டியிட்டு தமிழ் மக்களைப் பிளவு படுத்தப் பார்க்கிறார் ஏன்?

திருவாளர்கள் சி. சுந்தரலிங்கத்தைப் போலவும், ஏ. எல். தம்பியையாவைப் போலவும் பெருந்தன்மையாக ஒதுங்கி யிருந்திருக்கலாம் அல்லவா? அப்படி ஒதுங்கி யிருக்க சுயநலமே கருத்தாகக் கொண்ட திரு. பொன்னம்பலத்தின் இருள் மனம் எப்படித்தான் இடந்தரும்?

திரு பொன்னம்பலம் கனவு கண்ட ஐக்கிய முன்னணி, உண்மையில் தமிழ் மக்கள் தம் ஐக்கிய முன்னணி அல்ல. தம்மையும் உள்ளுக்குள்ளே, அதுவும் மத்தியில், வைத்ததாக ஒரு ஐக்கிய முன்னணி அமைவதானால்தான் அதை ஒரு ஐக்கிய முன்னணியாக திரு பொன்னம்பலம் ஏற்றுக்கொள்வார் கடந்த பொதுத் தேர்தலில் பொதுமக்கள் அவரை நிராகரித்துவிட்டதால் அதன்பின் ஏற்பட்ட ஐக்கிய முன்னணியைக் காண அவர் கண்கள் மறுத்துவிட்டன. ஐக்கிய முன்னணியென்ற பேச்சைவும் அத்தோடு விட்டொழித்துவிட்டு இப்போது தமிழரசுக் கட்சியுடன் நேரடியாக பொருதப் புறப்பட்டுவிட்டார்.

ஒருகாலம் கைகட்டிச் சேவகம் புரிந்த சிங்கள எஜமானர்களின், கூலிக்குக் கூரைபிடுங்கும் ஏவல் பிசாசான இவர் இப்போது தேர்தல் அரங்கில் குதித்திருப்பது தமிழ் பேசும் இனம் நாணத்தால் கோணிக் குறுக வேண்டிய செயலாக அமைந்துவிட்டது. ஐக்கிய தேசிய கட்சியின் முகமூடியாக இவர் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் என்ற பெயரைப் பயன்படுத்துவதையே இங்கு குறிப்பிடுகிறோம். தமிழ் பேசும் இனம் ஒன்றுபட்டுவிட்டது என்ற புகழை அழித்து, தமிழ் மக்களிடையே போட்டியும் பிளவும் உண்டு என்று சிங்களத் தலைவர்கள் சுட்டிக்காட்டுவதற்கு வாய்ப்பளிப்பதற்காகவே திரு பொன்னம்பலம் இந்த விபீஷண வேலையில் இறங்கியிருக்கிறார் என்பதை தமிழ் பேசும் மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

தமிழ் மக்களை ஒன்றுபடுத்துவதற்காகவும், தமிழ் மொழிக்கு பருத்தித்துறையிலிருந்து தேவேந்திர முனைவரை சமஉரிமை பெறப் போராடுவதற்காகவுமே தமிழ்க் காங்கிரஸ் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதாகச் சொல்லப்படுகிறது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட திரு பொன்னம்பலம் தேர்ந்தெடுத்திருக்கும் ஒரு அபேட்சகரைப் பார்த்தாலே மேற்படி கூற்றின் வண்டவாளம் அம்பலமாகிவிடும். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் அல்லவா?

சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றிய சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகள் அனைத்தையும் ஏற்றுக்கொண்டு அந்த அரசாங்கத்தில் அரை மந்திரிப் பதவி வகித்தவரும், சென்ற பொதுத் தேர்தல் பிரசாரத்தின்போது மேடைக்கு மேடை யாழ்ப்பாணத்தான்—மட்டக்களப்பான் என்ற விஷத்தைக் கக்கிய வருமான பட்டிருப்பு எதிர்மன்னசிங்கம்போன்ற எட்டப்பர்களைத் தம் படையில் சேர்த்துக்கொண்டுதான் தமிழ் மக்களை ஒன்றுபடுத்தவும், பருத்தித்துறைமுதல் தேவேந்திரமுனைவரை தமிழ் முழக்கம் செய்யவும் திரு பொன்னம்பலம் திட்டமிடுகிறார். இந்தத் திட்டத்தில் தமிழ் பேசும் மக்கள் ஏமாறுவார்கள் என்று அவர் நம்பியிருந்தால் ஒன்றில் நாம் அவருடைய நெஞ்சழுத்தத்தைப் பாராட்ட வேண்டும் அல்லது அவருடைய சித்தத் தெளிவைச் சந்தேகிக்க வேண்டும்.

ஆம், அவருடைய இறுதித் திட்டம் ஒன்றுதான்! பத்துப் பேரைக் காட்டியாவது தமது பதவியை மீட்டுக்கொள்ள வேண்டும் என்பதுதான். இது நிறைவேறுமா?

கடந்த பொதுத் தேர்தல் வடக்கு கிழக்கு மாகாணங்களிலிருந்து பல வேண்டாத சக்திகளை ஒழிக்கப் பயன்பட்டது ஒருசில விஷப்பூண்டுகள் தப்பிக்கொண்டன. அவற்றையும் சேர்த்து வேரோடு ஒழித்துக்கட்டித் தமிழரசின் ஜயஸ்தம்பத்தை உயர்த்த காங்கிரசும்—தமிழரசும் மோதும் எதிர்வரும் பொதுத் தேர்தல், தமிழ் பேசும் மக்கள் பரிபூரண ஐக்கியத்துக்காக நிகழ்த்தும் இறுதிப் போராக அமையும் என்று கருதுகிறோம்;

# சிங்கள பொது மக்களே பொங்கி எழுங்கள்!

# உங்களை விரட்டி விரட்டி அடிக்கப் போகிறார்கள் சுதந்திரக் கட்சியினர் தமிழரோடு சேர்ந்து!

## 'சியரட்ட' பத்திரிகையின் போர் முரசு

துவேஷப் பிரசாரத்தின் மூலம் சிங்களப் பாமர மக்களுக்குத் தூபம் போட்டு அவர்களைத் தமிழருக்கு எதிராகத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்த்து வரும் இழிசெயலில் ஈடுபட்டுள்ள யு. என். பி யின் "சியரட்ட" என்ற சிங்களப் பத்திரிகை இம்முறை போர் முரசு கொட்டியிருக்கிறது.

"சிங்களப் பொது மக்களே! பொங்கி எழுங்கள்" என்று நேரடியாக அறை கூவல் விட்டிருக்கிறது. எழுதியவர் சிறிசேன யாப்பா என்பவர். மே. 22 இதழில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. படித்துப் பாருங்கள்.

இதோ சிறீ லங்கா சுதந்திர—பெடரல் உடன்படிக்கையின் ஒரு பகுதி.

> பெடரல் கட்சிக் காரர்கள் இந்தியர்களுக்குப் பிரஜா உரிமை வழங்க வேண்டுமென்று கேட்குமளவிற்கு ஆதிக்கமடைந்து விட்டனர். இந்தியரின் பிரஜா உரிமைப் பிரச்னையில் தலையிடுவதற்கு பெடரல் தலைவர்களுக்குள்ள உரிமை என்ன என்று கேட்க விரும்புகின்றோம்.

இன்று எல்லா இன மக்களாலும் சொந்தம் என உரிமை கொண்டாடப்படும் இலங்கையில் கௌரவத்துடன் மதிக்கப்படுகின்ற தலைவரான திரு டட்லி சேனநாயகா பதவியை ஏற்றதும் நேர்மையற்ற மகாஜன எக்சத் பெரமுன (M. E. P.) ஆட்சியிலிருந்த காலத்தில் துரதிர்ஷ்டத்தினால் விடுபட்டுப் போன சிங்கள-தமிழ் இனங்களின் நல்லுறவைத் திரும்பவும் புனருற்பத்தி செய்ய விரும்பினார் முதல் நடவடிக்கையாக திரு டட்லி சேனநாயகா பெடரல் தலைவர்களுடன் இதுசம்பந்தமாகப் பேச்சுவார்த்தைகள் சில தினங்கள்வரை நடத்தினார். அப்படியிருந்தும் பெடரல் தலைவர்கள் 'ஒரு ராத்தல் இறைச்சியே வேண்டும்' என்று வாதாடி தங்கள் பழைய ஆதிக்கமான முறையில் தேவையற்ற கொள்கைகளினின்றும் சிறிதும் விட்டுக்கொடுப்பதற்கு விரும்பவில்லை.

### பெடரல் வாதிகளின் அகங்காரம்

இந்நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் இந்நாட்டின் எந்த இடத்திலாவது கஷ்டமோ பயமோ இன்றி வாழ வேண்டும் என்பதே திரு டட்லி சேனநாயகாவின் கொள்கை. அப்படிப்பட்ட சீரிய முற்போக்குக் கொள்கையுள்ள தலைவருடன் பெடரல்வாதிகளுக்கு ஒரு சமரச முடிவிற்கு வர முடியாமற்போனது இந்நாட்டுத் தமிழ் மக்களின் துரதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும். பெடரல்வாதிகள் இந்தியர்களுக்கு பிரஜா உரிமை கேட்டு நிற்குமளவிற்கு அகங்கார வெறிபிடித்துவிட்டனர். இந்தியரின் பிரஜாவுரிமைப் பிரச்னையில் கைவைப்பதற்கு பெடரல் தலைவர்களுக்குள்ள உரிமை என்ன என்று கேட்க விரும்புகின்றோம்.

### கௌரவத்தைக் காப்பாற்றினார்

ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட திட்டம் நிலம் இல்லாத கிராமப்புறத்து மக்களுக்கு நிலம் கொடுக்கும்திட்டமாகும் இத்திட்டத்தின்கீழ் வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள குடியேற்றத் திட்டங்களில் குடியேறியுள்ள சிங்களவர்களெல்லோரையும் வாபஸ்பண்ணிக்கொள்ள வேண்டும் என்பது பெடரல்வாதிகளின் கோரிக்கைகளில் ஒன்று. பெடரல் கட்சிக்காரர்களின் இந்த முறையற்ற கோரிக்கையை அமுல் செய்வதாகச் சொல்லி திரு டட்லி சேனநாயகாவிற்கு 5 வருஷ காலம் பிரதமர் பதவியில் ஒட்டிக்கொண்டிருக்க வழியிருந்தது. அப்படியிருந்தும் காலஞ்சென்ற தேச பிதாவின் (டி. எஸ். சேனநாயகாவின்) புத்திரனான டட்லி சேனநாயகா பிரதமர் பதவிக்காகவல்ல, தமது உயிருக்கே ஆபத்து வந்தாலும், ஏன்—ஆறு கண்டங்களையும் ஆளும் அரசபோகமே கிடைப்பதானாலும் இனத்தின் கௌரவத்தைப் பணயம் வைத்து அனுபவிக்கக் கூடியவரல்லர். திரு டட்லி சேனநாயகாவின் தலைமையின்கீழ் ஐக்கிய தேசிய கட்சி பண்டாரநாயகா-செல்வநாயகம் ஒப்பந்தத்திற்கு விரோதமாக நடத்திய போராட்டங்களை பொதுமக்கள் இதற்குள் மறந்திருக்க மாட்டார்கள்.

### பெடரல்காரர்களின் கோரிக்கைகள்

அற்றுப்போன இனங்களின் ஒற்றுமையை புனர் உற்பத்தி செய்யும்வண்ணம் மேற்கொள்ளப்பட்ட முதல் முயற்சி பெடரல்வாதிகளின் பிற்போக்கான நடவடிக்கைகளினால் பலனற்றுப் போனது.

அச்சமயம் சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஐக்கிய தேசிய கட்சியை சிம்மாசனப் பிரசங்க விவாதத்தில் தோற்கடித்துவிட்டு கூட்டரசாங்கத்தை அமைக்க இரகசிய ஒப்பந்தமொன்றைச்செய்து கொண்டது.

சிறீலங்கா சுதந்திரக் கட்சி-பெடரல் கட்சியின் இந்தப் புதிய உடன்படிக்கையின்படி என்ன நடக்கும்?

(1) வடக்கு—கிழக்கு மாகாணங்களில் அரசாங்க பாஷையாக தமிழை வைப்பது.

(2) பிரதேச சபை முறைகளின் படி வடக்கு—கிழக்கு மாகாணங்களைத் தமிழர்களுக்கு மட்டுமே சொந்தமாக்குவது.

(3) வடக்கு—கிழக்கு மாகாணங்களில் குடியேறியுள்ள சிங்களவர்களை அவர்களிருக்குமிடங்களிலிருந்து வெளியேற்றித் துரத்துவது.

(4) இதனால் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தால் வடக்கு—கிழக்கு மாகாணங்களிலமைக்கப்பட்ட குடியேற்றத் திட்டங்களில் குடியேறியுள்ள ஆயிரக் கணக்கான சிங்களக் குடும்பங்கள் இருக்க இடமின்றித் தத்தளிக்கும் நிலை ஏற்படுத்துவது.

வருகின்ற பொதுத் தேர்தலின் பின் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசாங்கம் ஏற்பட்டால் இந்த உடன்படிக்கையை அமுல் செய்வதற்கு சிறீ லங்கா சுதந்திரக் கட்சி பெடரல் கட்சிக்கு

(13-ம் பக்கம் பார்க்க)

## அனுபவமும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"எத்தனை தகுதிகள் இருந்தபோதிலும் இன்னொரு இலாகாவில் உள்ளவர் இங்கு எதற்கு?" என்ற அடிப்படையில் அவருடைய விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டிருப்பதாக அறியவருகிறது.

### சூழ்ச்சியா?

இந்த நொண்டிச் சாக்கு பற்றியே பலருக்கும் சந்தேகம். ஓர் இலாகாவில் உள்ளவோர் உத்தியோகத்தர் அந்த இலாகாவின் அனுமதியோடு இன்னோர் இலாகா உத்தியோகத்துக்கு மனுப்பண்ணி தெரிவு செய்யப்படுவதில்லையா? திரு கணபதிப்பிள்ளையை உத்தியோக மொழி இலாகாவில் வைத்துக்கொள்ள ஏன் தயக்கம்? அதிலும் சூழ்ச்சியா?—இப்படிக் கேட்கிறார்கள் அக்கறையுடையவர்கள்.

## தட்டெழுத்தாளர்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

றப்பட்ட காரணமாகப் பரீட்சை வைக்க முடியாது போயிற்று என்றும் பேசப்படுகிறது. ஆனால் 1958-ஆம் ஆண்டு நியாயமான அளவு தமிழ் உபயோகச் சட்டம் நிறைவேற்றப்பட்டும் இன்னும் அரசாங்கம் தமிழ் தட்டெழுத்தாளர்களுக்கு போட்டிப் பரீட்சை நடத்தவில்லை. அரசாங்கத்தை போட்டிப் பரீட்சை வைத்து நிரந்தரமானதும், உபகாரச் சம்பள உரிமையுடையதுமான பதவிகளைத் தமிழ் தட்டெழுத்தாளர்களுக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்ளுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டட்லியின் மூளை கெட்டுவிட்டதா?

## கண்ணாடி வீட்டிலிருந்து விஷயமறியாமல் கல்லெறிகிருரே!

## யு.என்.பி. தலைவரின் குற்றச்சாட்டுகளுக்கு சிறிமாவோ சூடான பதில்

யு. என். பி. தலைவர் டட்லியின் பகல் வேஷத்தைக் களைந்து எறிந்திருக்கிருர் சிறீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர் சிறிமாவோ பண்டாரநாயகா.

திரு. டட்லி சிறிமாவோவையும் அவர் கட்சியையும் தாக்கி வெளியிட்ட பத்திரிகை அறிக்கை ஒன்றுக்கு பதிலளித்து சிறிமாவோ வெளியிட்ட பத்திரிகை அறிக்கையிலேயே டட்லியின் முகத்தில் கரி பூசியிருக்கிருர் சிறிமாவோ.

பிரஸ்தாப அறிக்கை எந்தத் தமிழ்ப் பத்திரிகையிலும் முழுமையாக வெளியிடப்படவில்லை. அதை சுதந்திரன் வாசகர்களுக்கு நாம் இங்கு வழங்குகிறோம்.

—ஆசிரியர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான டட்லி சேனநாயகா அதிகாரபூர்வமான அறிக்கையொன்றை பத்திரிகைகளில் வெளியிட்டிருந்தார். தடித்த முகப்புகளில், பார்த்த விளம்பரம் பெற்ற இவ்வறிக்கையில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியையும் என்னுடைய தலைமையையும் பலமாகக் கண்டித்திருக்கிருர்.

### மூளையில் கோளாறு

ஹேஸ்டீட் பிளேஸின் நாலு சுவர்களுக்குள்ளும் குந்திக்கொண்டிருந்த நான் பாராளுமன்றக் குழுவிற்கு எப்படித் தலைமைதாங்க முடியும் என்ற பெரிய கேள்வியைத் தூக்கிப்போட்டிருக்கிருர் டட்லி. அவருடைய ஞாபக சக்தியிலோ, மூளையிலோ ஏதோ கோளாறு ஏற்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. இல்லாவிட்டால் தன்னுடைய அரசியல் மயக்கத்திலிருந்து தெளிவுபட்டபோது ஐக்கிய தேசிய கட்சிக்கு தான் எவ்வாறு தலைமை தாங்கினுர் என்பதை இவ்வளவு விரைவில் அவர் எப்படி மறந்திருக்க முடியும்? மனநோயாளரையோ, தொற்றுநோயாளரையோ ஒதுக்கி வைப்பதுபோல, பாராளுமன்றத்துக்கு வெளியே இவர் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தபொழுது, கனத்தை ரோட்டில் பதுங்கியிருந்து இவர் ஐக்கிய தேசிய கட்சிக்குத் தலைமைதாங்கியதை மறந்துவிட்டார். அல்லது அந்நாட்களில் அவர்தான் ஒரு மதுவிலக்குப் பிரசாரகர் என்று எண்ணினுரோ என்னவோ!

### கண்டுபிடிப்பு

கறையான் அரித்த புத்தகங்களிலிருந்து பிரிட்டிஷ் அரசியல் திட்டம்பற்றி சிறிது மேதாவிலாசம் திருவி சேகரித்திருக்கிருர் டட்லி இது எனக்கு மிகவும் உற்சாகமூட்டுவதாயிருக்கிறது. பொதுத் தேர்தலில் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுப்பதுடன் ஒரு பிரதமரையும் தெரிந்தெடுக்கும் ஒரு சந்தர்ப்பம் என்று அவர் கண்டுபிடித்திருக்கிருர். சுயவசதிக்கேற்றபடி விவிலிய நூலிலிருந்து மேற்கோள் காட்டும் பெருந்தகைகளுள் டட்லி சேனநாயகா தனித்து நிற்கவில்லை. (சாத்தான்கூட இதைத்தானே செய்கிறது!) பாராளுமன்றச் சீர்முறைகளின் அப்போஸ்தலரான இப்பெரியார் பிரதிநிதிகள் சபையைக் கலைக்கத் தீர்மானித்தபோது பாராளுமன்றப் பாரம்பரியங்களை கைகழுவிவிட்டது ஆச்சரியத்திலும் ஆச்சரியம்தான்.

### சவால்

சிம்மாசனப் பிரசங்கத்தில் தோல்வியுற்ற ஒரு பிரிட்டிஷ் பிரதமர் பாராளுமன்றத்தைக் கலைக்கும்படி தீர்மானித்த ஒரு சந்தர்ப்பத்தைத் தானும் காண்பிக்க முடியுமாவென திரு சேனநாயகாவிற்குச் சவால் விடுக்க விரும்புகிறேன். கடந்த 120 வருடகாலத்தில் இத்தகைய விசித்திரம் நடந்ததுண்டா? செல்லரித்த ஏடுகளைத் தடவத் தொடங்கிய சேனநாயகா இரண்டாம் முறையும் இப்படிப் பாராளுமன்றத்தைக் கலைக்க முடியாது என்ற கசப்பான உண்மையை அந்த ஏடுகளில் இதுவரை கண்டுபிடித்திருப்பார்! பிரதமர் பதவியை அபகரித்துத் தன தாக்கிக்கொண்ட இவரின் பதவி காலம் இறுதிக் கட்டத்தை நெருங்கிவிட்டது. தொடர்ந்து பாராளுமன்றங்களைக் கலைத்துக்கொண்டே பிரதமர் வேடந்தாங்கி நோகாமல் பவனி வரும் இவரின் ஆசைகளை எல்லாம் நிர்மூலமாக்குவோம். எனது தலைமையில் இயங்கும் சிறீலங்கா சுதந்திரக் கட்சி இதை சாதித்தே தீரும்.

### டட்லிக்கு வயிறு எரிகிறது

பாராளுமன்றத்தில் ஒரு ஸ்தானத்தைப் பெற்றுப் பாராளுமன்றத்திற்குள்ளேயே இருந்து சுதந்திரக் கட்சிக்குத் தலைமைதாங்கி நடத்துவது எனக்கு எவ்வளவு சுலபமானதென்பதை உலகம் அனைத்தும் அறியும். ஆனல் டட்லியவர்களுக்கு இதை நினைத்தால் வயிறு பகிரென்னலாம். மார்ச் 1960ல் டெடிகமத் தொகுதியில் பெரும்பான்மை வாக்காளர்கள் தன்னை மறுதலித்துவிட்டார்களென்பதை நினைக்கும்பொழுது பிரதமரின் வயிறு மேலும் பகிரென்னலாம். டி. எஸ். சேனநாயகா பல வருடங்களாக வென்று வந்ததும், மூதாதையோர்களின் தொகுதியுமான மீரிகமத்தில் தான் நியமனம் செய்த தனது உறவினர் சுதந்திரக் கட்சி அபேட்சகரால் தோற்கடிக்கப்பட்டார் என்பதில் பிரதமரின் அடிவயிறேபற்றி எரியலாம்.

### இது வாய் ஜம்பமல்ல

ஆனலும் நான் பாராளுமன்றத்திற்குள் நுழைவது வெறும் வாய்ஜம்பமல்ல என்பதை நாடு அறியும். சந்தேகப்படக்கூடிய வழிகளில் பிரதமராகும் அவாக்கொண்டசிலருக்கு, பெண்ணாகப் பிறந்த எனக்கு அவ்வித அவா [illegible] இல்லை [illegible] [illegible]தாகவே இருக்கும். நாட்டில் சமுதாய நீதியை ஏற்படுத்தி நாட்டு மக்களுக்கு சுயகௌரவத்தை அளித்து, அவர்களின் அந்தஸ்தை உயர்த்தி வைத்தவர் என்னுடைய கணவரே என்பதை மக்கள் அறிவார்கள். ஐக்கிய தேசிய கட்சியிலுள்ள பிற்போக்குவாதிகளும் போலி ஜனநாயகவாதிகளும் இந்நாட்டு மக்களை அடக்கி ஒடுக்க எவ்வித சந்தர்ப்பமும் கிடைக்காதவாறு என்னல் ஆனதை முற்றிலும் செய்யத் தவறமாட்டேன். சுதந்திரக் கட்சிக்கு இந்தப் பணியை நிறைவேற்றி வைக்கும் சந்தர்ப்பத்தை ஜூலை 20ல் மக்கள் அளிப்பார்கள் என்பதுபற்றி நான் திடமாகவிருக்கிறேன்.

### எங்களுக்குள் போட்டி இல்லை

சேனநாயக்காவின் கருத்துப்படி, சுதந்திரக் கட்சியின் பிரதமர் யாராயிருக்கப் போகிருர் என்பதைக் கட்சி அறிவித்துவிடவேண்டுமாம். ஐக்கிய தேசிய கட்சிக்குள் நடப்பதுபோல இத்தகைய பதவி வேட்கையில் எங்கள் கட்சியில் யாரும் கீழ்த்தரமாக விழுந்தடித்துக்கொள்ளவில்லை என்பதை அவருக்கு திடங்கூற விரும்புகிறேன். "பிரதமர் வேட்கை 1952" (Premier stakes of 1952) என்று அபகீர்த்தி பெற்றுவிட்ட ஐக்கிய தேசிய கட்சியின் அந்நாள் சம்பவம் எதுவும் எங்கள் கட்சிக்குள் நடக்கப்போவதுமில்லை. காலஞ்சென்ற பிரதமர்களின் மக்கள் மருமக்களுக்குப் பிரதமர் பதவியை நன்கொடையளிக்கவோ அல்லது வாரிசு உரிமைப் பட்டியலில் இவர்களின் பெயர்களை சிம்மாசனம் ஏற்றி வைக்கவோ, எதவும் உயில்களை தேசாதிபத்திய இருட்டறைகளிலிருந்து நாம் தோண்டியெடுக்கப் போவதில்லை, அல்லது பதவியில் அமர்த்தப்படும் பிரதமருக்கே பின்னல் கசந்து போகக்கூடியதாகவோ, வயிற்றைக் குமட்டக்கூடியதாகவோ இருக்கக்கூடியவழியில் எமது பிரதமர் தெரிவை நாம் அமைக்கப்போவதும் இல்லை.

### ஊழல் நிறைந்த கட்சி யு. என். பி.

எமது கட்சி இன்று கட்டுப்பாடுநிறைந்துவிளங்குகிறது. தகுதியற்றவர்களையும் இலஞ்சப் பேய்களையும் நாம் களைந்தெறிந்துவிட்டோம். நாம் வெளியேற்றிய கழிவுகளை மீண்டும் உட்கொள்ளச் சேனநாயக்காவின் தலைமையிலுள்ள ஐ. தே. க. ஒரு நிமிடம் தாமதிக்கவில்லை. பதவியின் சிகரத்திலே ஐ. தே. கட்சியைப் போல ஊழல் நிறைந்த கட்சி வேறெங்கும் இருந்ததில்லை. இந்த ஊழல்களை நிறுத்தி, இவர்களை வனத்தின் இடையே விரட்டிவிட்டவர் பண்டாரநாயக்கா. இவர்கள் பதுங்கியிருக்கும் மூலை முடுக்குகளிலிருந்து இனிமேல் ஒருபோதும்-ஒருபோதும்-இவர்களை

(12-ம் பக்கம் பார்க்க)


கே. பாலச்சந்திரன் அளிக்கும்

# நாடக விழா

4-5ம் திகதிகளிலும், 18-ம் திகதியும் நடைபெறும்.

இடம்: லயனல் வென்ட்ற் தியேட்டர்.

## "பதியூர் ராணி"

சரித்திர நாடகம்

## 'அழாதே கண்ணே'

துப்பறியும் நாடகம்



இலங்கை வானொலி புகழ் 'லண்டன் கந்தையா' திரு. சண்முகநாதன்—ரொஸாரியோ பீரிஸ்—ஆனந்தி சுப்பிரமணியம்—திரு. ஏ. சரவணமுத்து (றேடியோ மாமா) திரு. சோதிநாதன், எம். ஏ. ஜபார், வீ சோமசுந்தரம் ஆகியோர் நடிக்கிருர்கள்.

டிக்கட் விபரம்:

ரூபா 5, 3, 2.

கிடைக்குமிடங்கள்: கிரின்லண்ட்ஸ்— பம்பலப்பிட்டி, [illegible] பவான் —நோரிஸ் ரோட்டு,—உடுப்பிலாட்ஜ்—செட்டியார் தெரு ஆகிய இடங்களில் கிடைக்கும்.



## ஓவியர்கள் தேவை

சுதந்திரன் கதைகளுக்கு சித்திரம் வரையவும் தலைப்புக்கள் எழுதவும் ஓவியர்கள் தேவை.

சுதந்திரன் அலுவலகத்திலிருந்து முழு நேர ஊழியர்களாகக் கடமையாற்ற வசதி இல்லாத ஓவியர்களின் விண்ணப்பங்களும் கவனிக்கப்படும்.

விண்ணப்பிப்பவர்கள் எந்த வகையில் கடமையாற்ற முடியும் என்பதை விண்ணப்பத்தில் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும். வெளிநாட்டு ஓவியர்களும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:

ஆசிரியர், சுதந்திரன்
தபால் பெட்டி 1183
கொழும்பு—12.



## திருமண அழைப்பு

விக்னராசா — ஜெயலட்சுமி

நிகழும் சார்வரி ஆு வைகாசி மீ 19 உ (1—6—60) புதன்கிழமை இரவு 9-00 மணிக்கு மேல் வரும் சுபவேளையில்,

மல்லாகம் திரு. அ. சுப்பிரமணியம் தம்பதிகளின் புத்திரன் திருவளர் செல்வன்

விக்னராசா

(நீர்ப்பாய்ச்சு இலாகா டெக்னிக்கல் உதவியாளர்)

அவர்களுக்கும்

எனது புத்திரி திருவளர் செல்வி

ஜெயலட்சுமிக்கும்

திருமணம் நிகழ்த்தி மனையறம் புகுத்த நிச்சயித்திருப்பதால் அத்தருணமும்

வெள்ளிக்கிழமை (3-8-60) பிற்பகல் 4 மணிக்குமேல் எமது இல்லத்தில் நடக்கும் வரவேற்பிற்கும் தாங்கள் குடும்ப சமேதரராய் சமுகமளித்து தம்பதிகளை ஆசீர்வதித்து ஏகுமாறு வேண்டிக்கொள்ளுகிறோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்
வழக்கறிஞர் சு. நடராசா
தம்பதிகள்.

"சத்தியஸ்தான்"
மல்லாகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் தங்கை!

சிறுகதை — எழுதியவர்: ஆ. தங்கத்துரை

'அட ஆண்டவா! இந்தச் சமையத்தில் எங்கே ஒளிந்து கொண்டு விட்டாய்? இந்த நெருக்கடியான கட்டத்திலிருந்து என்னைக் காப்பாற்றி விட்டால் போதும்...அப்புறம் இந்த ஜன்மத்தில் உன்னை மறக்கவே மாட்டேன்...சீ... நீ எங்கே வரப் போகிறாய்?

நாளை விடிந்தால் அவளுக்கும் எனக்கும் பதிவுத் திருமணமாம். இந்தக் கண்டத்திலிருந்து எப்படித் தப்புவது? நேற்றே, அம்மாவின் முகத்துக்கு முன்பாக, "முடியாது!" என்று சொல்லியிருக்கலாம். இப்போது இவ்வளவு நரக வேதனைப் பட்டுக் கொண்டிருக்க வேண்டியதில்லை. துணிந்து சொல்ல முடியவில்லை—பெரிய ஆண்பிள்ளையாம் நான். 'பொயின்ட் கட்' மீசை வேறு வைத்துக் கொண்டிருக்கிறேன்.

பேசாமல் நாளை அவள் கையைப் பற்றிக் கொண்டு விடலாம். ஆனால், என்னைப் பற்றி அவள் என்ன நினைப்பாள்? சீ... அந்த எண்ணமே வேண்டாம்! உயிர் போனாலும் அவளை மனதாலும் தீண்டக் கூடாது. அப்புறம் என்னை மனிதனுகவே மதிக்க மாட்டாள்.?

'தற்கொலை செய்து கொள்ளலாமா?-அது கூடச் சற்றுச் சிரமமாகத்தானே இருக்கிறது. வீட்டுக்குள்ளே தூக்குப் போடுவதானால் கூட மோட்டிலே ஏற வேண்டிக் கிடக்கிறதே!'

மெதுவாக 'டோச்' விளக்கை அடித்து மோட்டைப் பார்த்தேன் அது, கூரையா அது! சீ...இப்போது விழலாமெனப் 'பொலு பொலுத்'துப் போயிருக்கிறது. அதிலே ஏறிக் கயிறு போடு முன் 'இன்சூரன்ஸ்' செய்து கொள்ள வேண்டும். எனக்கு 'இன்சூரன்ஸ்' 'பொலிசி' கூடக் கிடையாதே! கூரையின் வலைகள் உழுத்துப் போய், ஒரு வித மின் சிலை போல உடம்பெல்லாம் கொட்டுகிறது. கண்டி ராசன் காலத்திலே கட்டப்பட்ட வீடாக இருக்க வேண்டும் இது! அப்புறம் பழுது பார்த்ததே கிடையாது போலும். ஐம்பத்தேழாம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தினுல் பாரதூரமாகப் பழுதடைந்து கிடக்கிறது. இந்த இலட்சணத்தில் வீட்டுக்கார மூர்த்தி அண்ணுச்சி மட்டும் தவருமல் வாடகையை வாங்கிக் கொண்டு போய் விடுகிறார்.

அவள் மன நிலை எப்படி இருக்கிறதோ! அந்த ஜடப் பிண்டம் செத்துத் தொலைக்கக் கூடாதா கடவுளே! உலகத்தில் எத்தனையோ புண்ணியாத்மாக்கள் செத்துத் தொலைகிருர்கள் — இவளை நீ சாகடிக்கிறாய்! இவளை மட்டும் ஏன் விட்டு வைத்திருக்கிறாய்? இப்படி என்னை நரக வேதனைப் படச் செய்யவா? அதை நீ வேடிக்கை பார்த்து இரசிக்கிறாயா?

ஒ...நீ தான் என்ன செய்வாய்! இலகுவில் சாகடித்து விடக்கூடிய உடம்பா அவளுக்கு? முகத்திலே 'தேஜஸ்' வழிய, உருண்டு திரண்ட அவயவங்களோடு 'தள தள' வென்றிருக்கிறாளே!

அது தான் போகட்டும்; அவள் தற்கொலையாவது செய்து கொள்ளக் கூடாதா என்ன? ஆண்டவா விடிவதற்குள் அவள் தற்கொலை செய்து கொண்டதாகக் கேள்விப் பட்டால் உனக்கு ஆயிரம் தேங்காய்களை உடைக்கிறேன்.—சீ... இதென்ன விபரீத எண்ணம்! நான் இல்லாவிட்டால் அவளுக்கு வேறு மாப்பிள்ளையே இல்லையா என்ன? அவள் வாழ வேண்டியவள்! வாழட்டும்... வாழட்டும்! வேறு ஏதாவது உருப்படியான வழி......? ஒரு வேளை அவள் சம்மதித்து விட்டாளோ என்னவோ—யார் கண்டது?

சினிமா இரண்டாவது காட்சி முடிந்து, யாரோ விசிறிகள் கீழ்த்தரமான முறையில் ஒரு படத்தைப் பற்றி விமர்சனம் செய்து கொண்டு செல்லுகிருர்கள். 'காட்டெருமை' ராகத்தில் யாரோ ஒருவன் சினிமாப் பாட்டொன்றைக் கொலை செய்து கொண்டே போனான். அதற்குப் பின்னணியாக அடுத்த வீட்டு அருமை நாதனின் நாய் ஊளை யிட்டது.

நான் படுக்கையிலே அப்படியும் இப்படியும் புரண்டு கொண்டே கிடந்தேன். சிந்தனைப் புகை என்னைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டே இருந்தது.

ஒரு நாள், பிற்பகல், வீட்டில் யாரும் இல்லை ஒரு நாவலைப் படித்துக் கொண்டிருந்தேன். "நாவல் படிக்கிறீங்களா?" என்ற படி உள்ளே வந்தாள் அவள்—அவள் தான் சந்திரா.

"ஒ...நீங்களா? உட்காருங்க லீவில் எப்போ வந்தீங்க...?"

"ஒரு கிழமைக்கு மேலாகுதே, தெரியாதா?"

"ம்...தெரியாது..."

"களுக்" என்ற சிறங்க வைக்கும் சிரிப்பொலி.

"..........."

"நீங்கள் எப்போ கொழும்புக்கு...?"

"இன்னும் நான்கு நாட்களில் போக வேணும்."

"ஒ..." குயில் ஓசை.

"ஆமாம் கண்டியில் நீங்கள் எந்தப் பள்ளியில் படிப்பிக்கிறீங்க...?"

"கண்டி அல்ல ஹட்டன்..." மீண்டும் அந்தக் குளுமையான "களுக்" ஒலி.

"மிச்சம் தொலை தூரந் தான்..."

"கஷ்டப்படாமல் பலன் கிட்டுமா என்ன"

"ஆமாம்..."

ஒயிலாக மயிலைப்போலக் கழுத்தைத் திருப்பிக் கொண்டு, என்ன வெல்லாமோ பேசினுள்—கேட்டாள், நானும் ஏதேதோ சொல்லி வைத்தேன்.

நேரம் போனதே தெரியவில்லை. இருந்தாற் போலிருந்து, "எனக்குப் படிக்கச் சில நாவல்கள் தருவீர்களா?" என்றுள்.

"ஓ, அதுக்கென்ன...?" மெதுவாக எழுந்து அலுமாரியைத் திறந்தேன்.

"அது என்ன அலுமாரிக்கு மேல்...பத்திரிகை மலர்களை அடுக்கி வைச்சிருக்கிறீங்களா?... கடந்த ஆண்டு 'கல்கி' தீபாவளி மலர் நான் பார்க்கவே இல்லை..." ஒரு 'ஸ்டூலை' இழுத்துப் போட்டு, அலுமாரிக்கு மேலிருந்த மலர்களை ஒவ்வொன்ருக எடுத்துக் கையிலே அடுக்கிக் கொண்டாள். மறுபடியும் அவற்றை வைப்பதற்கு எம்பினுள். அவ்வளவு தான்...... 'தடால்' எனத் தரையிலே விழ இருந்தவளைத் தாங்கிப் பிடித்தேன். என்னை உறுதியாக அழுத்திப் பிடித்துக் [illegible] மூன்று...

என்ன செய்வதென்றே தோன்றவில்லை. அவள் சூடான மூச்சு என் கன்னத்திலே பட்டுத் தெறித்தது—உடம்பெல்லாம் ஒரு வித இன்ப மின்சாரம் பாய்ந்தோடியது......

"கடார்..." கிணற்றடியில் யாரோ துலாந்தைப் பலமாக விடும் ஓசை.

ஒரு உணர்ச்சி பெற்று அவள் கரங்களைத் தட்டி விட்டேன். அவள் மெதுவாக ஒரு புன்னகையை அவிழ்த்து விட்டாள். பின் 'குப்' பெனச் சிவந்த அவள் முகத்தை ஒரு பத்திரிகையை எடுத்துப் படிக்கும் சாக்கில் மறைத்துக் கொண்டாள்.

மௌனம்—என்னைப் பிடுங்கித் தின்றது.

"நாவல்கள்..." அவளிடம் கொடுக்க என் கரங்கள் நடுங்கின. நடுக்கத்தை அவள் கண்டு விடக்கூடாதே! அந்த மேசையில் வைத்தேன்; அவள் எதுவும் பேசாமல் நாவல் ஒன்றை எடுத்துப் புரட்டினுள்.

"எப்போ பள்ளி...?" மீண்டும் மௌனத்தைக் கலைக்க வார்த்தைகள் தடுமாறின எனக்கு.

"அடுத்த மாதம் ஐந்தாம் தேதி..."

"ஓகோ..."

"..........."

"அப்படியானுல், என் திருமணத்துக்கு நீங்க நிற்க மாட்டீங்களாக்கும்..."

"திருமணமா...?" அவள் குரல் நடுங்கியது.

"ஆமாம், இன்னும் இரண்டு மாதத்தில்...நீங்கள் கூட எனக்குத் தங்கையாகி விடுவீர்கள்...அதாவது உங்கள் மாமாவின் மகள் மணியைத்தான் நிச்சயப்படுத்தினுர்கள்..."

"தங்கை..." மெதுவாக அசைந்தன அவள் அதரங்கள்.

"உண்மையாக நீங்க இனிமேல் என் தங்கை தான் அப்படி ஆகிவிட்டீர்கள்..."

சிறிது நேரம் மௌனம்.

"சத்தியமாக நீங்கள் இனிமேல் என் அண்ணு தான். எனக்கு அண்ணு இல்லாத குறையைப் போக்கி விட்டான் மணி...இப்படி ஒரு அண்ணு கிடைத்ததற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன்..." அவள் மான் விழிகளிலே பனித்திரை படர்ந்தது.

நான். "..........."

"அண்ணு, இந்த அசந்தர்ப்பம் நம் வாழ்விலே நடந்ததாகவே நினைத்துக் கொள்ளாதீர்கள்......நான் வருகிறேன்..." என் பதிலுக்குக் கூடக் காத்திராமல், 'விடு விடெ'ன்று நடந்து விட்டாள். அவள் சூடான கண்ணீர்த்துளிகள் தரையிலே விழுந்து சிதறிப் போய்க் கிடந்தன. இதயத்திலே எத்தனை கோடி எண்ணங்கள் மடிந்து சிதறிக் கொண்டிருக்கின்றனவோ? அவளுக்காக அனுதாபப் படுவதா? அல்லது—?

நிமிர்ந்து பார்த்தேன். என் விழிகளிலே அரும்பிய பனித்துளிகளுக்கிடையிலே அவள் உருவம் தொலைவிலே மங்கலாகத் தெரிந்தது.

அவள் எடுக்காமலே சென்ற 'பாவை விளக்கும்', 'வெறும் கோவிலும்' அப்படியே மேசையில் கிடந்தன.

எதிர்பாராத விதமாக மணி ஒரு விபத்தில் சிக்கி மடிந்து விட்டாள். என் திருமணம் தடைப்பட்டது. இவை யெல்லாம் நடந்து ஒரு வருடத்துக்கு மேலாகி விட்டது. இப்போது நான் சந்திராவைத் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென அம்மாவும் அப்பாவும் விடாப்பிடியாக நிற்கிருர்கள். "ஏன், அவளுக்கு அழகில்லையா? படிப்பில்லையா? பணமில்லையா?" என அடுக்கிக் கொண்டே போகிருர்கள்.

நான் எப்படி அவளை மணந்து கொள்ள முடியும்? எதைச் சொல்லித் தட்டிக் கழிக்க முடியும்? உண்மையை எப்படிச் சொல்ல முடி...

(15-ம் பக்கம் பார்க்க)

## எஸ். ஜே. வியின் வேண்டுகோள்

கடந்த பொதுத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சி வெற்றி ஈட்ட பொருள் உதவி தந்து துணைபுரிந்த தமிழ் பேசும் மக்களாகிய உங்களிடம் தான் மீண்டும் பணம் தந்து உதவுங்கள் எனக் கேட்க வேண்டிய நிர்ப்பந்த நிலையில் இருக்கிறேன்.

எடுத்த எடுப்பில் தமிழ் பேசும் இனம் தனது இழந்த உரிமைகள் அனைத்தையும் பெற்றுவிட முடியாது. நிலையான கொள்கையோடு தொடர்ச்சியாகப் பல காலத்திற்கு நாம் உரிமைக்குரல் எழுப்பினுல்தான் உரிமை வாழ்வு பெற முடியும். உலகில் உள்ள விடுதலை பெற்ற பல் வேறு நாடுகள்-தேசிய இனங்கள் இந்தப் பேருண்மையையே உணர்த்தி நிற்கின்றன. ஆதலால் தமிழ் அரசுக்கட்சியை ஒருகுறிப்பிட்ட குழுவின் கட்சியெனக் கருதாது ஒவ்வொரு தமிழ் மகனும்-மகளும் தாம் அங்கம் வகிக்கும் 'மக்கள் விடுதலை இயக்கம்' (*Peoples, Freedom Movement*) அது எனக்கருதி நிறைந்த தமிழ் உணர்ச்சியோடு பணியாற்ற வேண்டும்.

இம்முறைத் தேர்தலில் நாம் போட்டியிடும் எல்லாத் தொகுதிகளிலும் வெற்றியீட்டி தமிழ் பேசும் இனம் தனது "சுயநிர்ணய உரிமையை" நிலைநாட்ட உறுதிபூண்டுவிட்டதை சிங்கள அரசாங்கத்திற்கும் உலகத்திற்கும் எடுத்துக்காட்ட வேண்டும். இந்நிலையை உருவாக்க ஓர் அரிய வாய்ப்பாகவே இத்தேர்தலை நாம் பயன்படுத்த வேண்டும். ஆதலால் இம் முக்கியத்துவத்தை உணர்ந்து இயன்றளவு பணம் தந்து உதவுங்கள் என மீண்டும் பணிவன்புடன் வேண்டுகிறேன்.

எஸ். ஜே. வி. செல்வநாயகம்

16, அல்பிறட் ஹவுஸ் கார்டின்ஸ்
கொள்ளுப்பிட்டி, கொழும்பு-3.

★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா

கண்ணைக் கவரும் வண்ணங்களிலும்

கருத்தைக் கவரும் வடிவங்களிலும் சிறந்த பாவனையிலும் உறுதியான சாயத்திலும்

முன்னணி வகிக்கிறது

லதா

கேம்பிரிக்

சட்டை, ஜாக்கெட், கவுண், பாவாடை, கிமோனு முதலியவைகளுக்குச் சிறந்தது.

இலங்கை முழுவதிலுமுள்ள புடைவை வியாபாரிகளிடம் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

குண்டன்மால்ஸ்

26, கெய்லர் வீதி, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைக்குத் தகுந்த கூலி தட்டுப்பாடில்லாமல் வாழலாம்

## ஈழத் தமிழினத்துக்கு கைகொடுக்கும் முதலாவது கைத்தொழில் நெசவு

## தொழிலாளி அருளானந்தம் பேட்டி

[ பேட்டி கண்டவர்: "மாலதி" ]

வந்தாறுமூலை, நெசவுத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்க நிலையம். அது தான் வந்தாறுமூலை நெசவுத் தொழிற்சாலை. 3½ வருடமாக இங்கே கடமையாற்றும் நெசவு ஆசிரியர் திரு. தாமோதரம் பிள்ளை என்னை வரவேற்று அலங்காரத் துணி உற்பத்திக்காக சமீபத்திலே இங்கு வந்த ஆசிரியர் திரு பூபாலரத்தினத்துக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

"எங்கள் பகுதிக்கு நெசவுத் தொழில் புதியது தானே" என்றேன் நான்.

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்? பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, இன்று இயந்திரங்களால் கூடச் செய்ய முடியாத அத்தனை மெல்லிய "மஸ்லின்" துணிகளைச் செய்தவர்கள் நாங்கள்..." இப்படி என்னை மடக்கினார் திரு பூபாலரத்தினம்.

"நீங்களா?" என்றேன் நான் வியப்போடு.

"நாங்கள் என்றால் தமிழர்கள்."

"ஓ அப்படியா; பழங்கதைகள் பேசுவதில் பெருமையில்லை என்று பாரதியே கூறிவிட்டானே" என்றேன் சிரித்துக் கொண்டு.

"அதற்கு நான் சொல்லவில்லை. தமிழன் தோன்றிய போதே மானம் காக்கும் ஆடை நெய்யவும் தெரிந்து கொண்டான். இந்தத் தொழில் தமிழினத்துக்குப் புதியதல்ல."

"அது சரி எங்களுக்குப் புதியது தானே"

"அதுவும் சரிதான்."


"நேரம் போய்க் கொண்டேயிருக்கிறது. நான் வந்த நோக்கத்தையே மறந்து விட்டேன் போலிருக்கிறதே..." என்றேன்.

"இல்லையில்லை; இதோ உங்கள் பேட்டிக்குத் தயாராகி விட்டார் நமது தலைவர்." இது திரு தாமோதரம்பிள்ளையின் கனிவான குரல்.

'வணக்கம்' என்றார் வந்தவர்.

'வாருங்கள் அமருங்கள்' என்றேன் நான். வந்தவர் வேறு யாருமல்லர். கணபதிப்பிள்ளை அருளானந்தம், வந்தாறுமூலை நெசவுத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர்.

இந்த நெசவுத் தொழில் தான் இவரின் இப்போதைய ஜீவனத் தொழில். குடும்பத்திலே அக மூவர் தான். நாளொன்றுக்கு இரண்டு ரூபாயிலே குடும்பம் சிக்கனமாக நடக்கிறது என்று பெருமையோடு கூறுகிறார். மிகுதியையும் அவர் வாயாலேயே கேட்கலாம்.



பாவோட்டம் நடக்கிறது நூலை உருளைக்கு கொடுக்க ஒருவர், உருளையைச் சுற்ற இன்னொருவர்.

"என்னைப்பற்றிச் சொன்னால் தானே தொழிலைப் பற்றிச் சொல்ல முடியும்?

"இந்த நெசவு நிலையத்தை கிராம முன்னேற்றச் சங்கம் கட்டி ஆரம்பித்த காலத்திலே நானும் தான் பயிற்சி பெறச் சேர்ந்தேன். அப்போது நான் சம்பளம் என்ன தெரியுமா 75 சதம். எத்தனை நாள் இருந்தேன் தெரியுமா, பதினான்கு நாட்கள். அதன் பின் இதை விட்டு அரிசி ஆலையில் 'மனேஜர்' ஆனேன். இப்படி 1½ வருடம் பறந்தது. 1957ல் வெள்ளம் வந்ததே, அத்தோடு வெளியூர் வேலை. அதன் பின் மீண்டும் இங்கு வந்தேன். இப்போது கி. மு. சங்கத் தலைவர் பதவி கூட எனக்குத் தான்.

இந்த நெசவுத் தொழிலை ஆரம்பித்து ஆக ஒரே வருடம் தான். ஆனால் வேலைகள் அத்தனையும் நன்ருகத் தெரியும். இதன் மூலமாக நாளொன்றுக்கு 90 சதம் முதல் 4/— ரூபா வரை உழைக்கிறேனென்றால் நீங்கள் நம்ப மறுப்பீர்களா?

நெசவை எப்படிப் பழகினேன்? சொல்லட்டுமா?

முதன் முதலில் 'வொவின்' (நீண்ட நூல் சுற்றும் கட்டை) சுற்ற விட்டார்கள். அதன் பின் 'போர்ண்' (குறுக்கு நூற்கட்டை) சுற்றப் பழகினேன். இது முடிந்ததா? இனிப் பாவோடுதல், 'வீம்' பண்ணல், கீல்ஸ் விழுதக்க கோர்த்தல், தறியில் பொருத்துதல், குறுக்கு நூல் நாடாவில்' பேரிணைப் பொருத்துதல் இப்படி வரிசையாக ஒவ்வொன்றும் பழகினேன். இதன் பின் என்ன? தறியில் அமரவேண்டியது. கால்கள் மிதிக்க வேண்டியது. நெசவு ஆரம்பமாகி விடும். நெசவு ஆரம்பமானால் துணி தானாக வளர்ந்து விடும். ஆனால் நான் தறியில் அமர்ந்தால் அதன் வளர்ச்சி வேகம் ஆமைதான். ஏன் என்று கேட்கிறீர்கள்? எனது வலது கால் பலவீனமானது அதனால் வேலை ஓடாது. நெசவு செய்ய அமர்ந்தால் நிச்சயமாக எனது அன்றைய உழைப்பு 90 சதம் தான். சந்தேகமில்லை. அதனால்புத்தியாக அதை விட்டு விட்டு வேறு வேலைகளில் (நூல் சுற்றல் போன்றவற்றில்) ஈடுபடுவேன். அப்போது 4 அல்லது 5/— ரூபா வரை உழைக்கலாம்.



நெசவு நடக்கிறது; துணி வளர்கிறது.

"இந்தநெசவு நிலையத்துக்கு அரசாங்கம் நூலைக் கடனைக் தருகிறது. 2/1000 நூலில் நெய்யப்பட்ட துணிகளையே அரசாங்கம் பெற்றுக் கொண்டு, நூல மதியைக் கழித்து நெசவுக் கூலியைத் தருகிறது. இந் நிலையம் அரசாங்கத்துக்குக் கொடுக்கும் சாரம் ஒன்று ரூ. 7 சதம் 10 விலை பெறும். இதிலே 3½ ரூபா கூலி மாத்திரம் எங்களுக்குக் கிடைக்கும். நூல் பெறுமதி ரூபா 3 சதம் 50 இதை அரசாங்கம் கழித்துக் கொள்ளும்.

வேட்டி, துவாய், சேலை, போன்றவற்றையும் இங்கு செய்து பொது சன விற்பனவுக்கு வைப்போம். வேட்டி 7 ரூபாவும், துவாய் 2 ரூபாவும், சேலை 12 ரூபாவும் விலையாகிறது. சால்வை ஒன்று 4½/—, படுக்கை விரிப்பு 7/— ரூபாவாகவும் விற்கிறோம்.

"எங்கள் சங்கத்தில் 12 பேர் அங்கத்தவர்கள். பையன்கள் கூட நெசவு பழகுகிறார்கள். சொல்லப் போனால், வேலைக்குத் தகுந்த கூலி கிடைக்கிறது.

"என்னைக் கேட்டால் நெசவுத் தொழிலால், தட்டுப்பாடில்லாமல் வாழலாம் என்பேன்"

திரு அருளானந்தம் தமது முழக்கத்தை முடித்து விட்டாரா? சரி, அவரை நான் சும்மா விடுவேனா?


"படுக்கை விரிப்பை 2/30s நூலால் செய்கிறீர்கள். வேட்டி சேலைகள்?" இது என் கேள்வி.

நெசவு ஆசிரியர் இரண்டு வேட்டிகளையும் சேலையொன்றையும் தூக்கி மேசையில் வீசினார். "இவை ஒற்றை நூலால் செய்தவை. இதோ நான் உடுத்தியிருப்பது கூட இந்த வேட்டி தான்." பெருமையோடு கூறினார்.

நிலையத்தினுள்ளே தறிகள் ஒரு எட்டு வரை என் கண்ணுக்குப் பட்டன. அதற்கேற்ற தளபாடங்களும் நிலையத்தை அடைத்துக்கொண்டுதான் இருந்தன.

சில ஊக்கமுள்ள தொழிலாளர் நாளொன்றுக்கு 5½ ரூபா கூடப் பெற்றிருப்பதைக் கணக்குப் புத்தகம் கூடக் கூறியது.

(13-ம் பக்கம் பார்க்க)



பேட்டியளித்த தொழிலாளி அருளானந்தம் நூல் முறுக்குகிறார் இந்த வேலையின் மூலம் நாளொன்றுக்கு இவரால் ரூபா 4/- உழைக்க முடிகிறது

# அமெரிக்க அரசியலில் நீக்ரோக்களுக்கு பங்கு!

## வாக்குரிமை கிடைக்கிறது

நீக்ரோக்களின் வாக்குரிமை மசோதா கடுமையாக விவாதிக்கப்பட்டு நிறைவேறியது. இறுதியாக அமெரிக்க ஜனாதிபதியும் சென்ற வாரம் அதில் கைச்சாத்திட்டார். எனவே அது இப்பொழுது சட்டம் ஆகிவிட்டது; குடியுரிமை வரலாற்றில் உற்சாகமளிக்கும் ஒரு புதிய அத்தியாயம் தொடங்கியுள்ளது.

இனவேற்றுமைத் தடையின்றித் தென் பகுதியிலுள்ள நீக்ரோக்கள் வாக்களிக்க அரசியல் சட்ட உரிமைகளை அமல் நடத்த நீதிபதிகளுக்கு புதிய சட்டம் விரிவான அதிகாரங்களை வழங்குகிறது. அட்டோர்னி ஜெனரல் வில்லியம் பி. ரோசர்சு புதியசட்டத்தின் கீழ் உடனே முதல் நடவடிக்கை மேற்கொண்டார்.

புதிய 1960-ம் ஆண்டுக் குடியுரிமைச் சட்டம் தென் பகுதியிலுள்ள மத்திய நீதிமன்றங்களுக்கு ஒரு அதிகாரம் வழங்குகிறது. அதாவது, அதிகாரிகள் வாக்குரிமையை மறுத்துக் கொண்டே வரும் இடங்களில் வாக்களிப்புத் தகுதியுள்ளவர்களை வாக்காளராகப் பதிவு செய்ய நடுவர்களை நியமனம் செய்ய நீதிபதிகள் இச்சட்டத்தால் அதிகாரம் பெறுகிறார்கள். மத்திய நீதி மன்ற இலாகா பார்வையிடுவதற்கு வாக்களிப்புச் சீட்டுகளை ஆங்காங்குள்ள அதிகாரிகள் 22 மாதங்கள் பத்திரமாக வைத்திருக்கவேண்டுமென்று இச் சட்டம் கூறுகிறது மத்திய நீதிமன்றத்துச் சட்டங்களுக்குப் பலாத்கார முறையிலோ இடையூறு செய்வது இச்சட்டத்தின் குற்றமாகும். பள்ளிக்கூட இன ஒதுக்கல் ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்வதும் இதன்படி குற்றமாகக் கொள்ளப் படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடக விழாவில்:

# துப்பறியும் தமிழ் நாடகம் "அழாதே கண்ணே"



துப்பறியும் அசல் தமிழ் நாடகங்கள் ஈழத்தில் நடைபெறுவது மிக மிக அருமை. இந்தக் குறைபாட்டைக் கலையுலகமியர்களின் டொவன் அன்றி திரு. கே. யாக, ஷோ பாலச்சந்திரன் மன் ஆக முன்னணிக்கு வந்துகொண்டிருக்கும் திரு கே. பாலச்சந்திரன் முயன்று வருகிறார்.

ஜூன் 4, 5, 8 தேதிகளில் அவர் நடத்த இருக்கும் தமிழ் நாடக விழாவில் இடம் பெறும் "அழாதே கண்ணே" என்ற துப்பறியும் நாடகம் இந்தத் துறையில் இன்னும் பலப்பல நாடகங்கள் வருவதற்கு தூண்டுகோலாக இருக்கும் என்று துணிந்து சொல்லலாம். கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு விவேகானந்த வித்தியாலய மண்டபத்தில் நடந்த மேற்படி நாடகத்தின் ஒத்திகையைப் பார்த்த போது நம்பிக்கை பிறந்தது.

எம். நஸ்ருதீன் எழுதிய இந்நாடகத்தை இலங்கை வானொலி நாடகப் பகுதிப் பொறுப்பாளர் திரு எஸ். சண்முகநாதனின் (சானா) மேற்பார்வையில் "ஆர்பி" தயாரித்து வருகிறார்.



செல்வி ஆனந்தி சுப்பிரமணியம்

கணீரென்ற குரலில் நன்ருக வசனம் பேசி நடிக்கக் கூடிய ரொஸாரியோ பீரிஸ் நயவஞ்சகக் கதாநாயகனாக இரண்டரை மணிநேர நாடகத்தின் பெரும்பகுதியில் தோன்றுகிறார். கண்டிப்பான இன்ஸ்பெக்டராக மற்றும் கீழ்ப்படிவுள்ள அந்தரங்கக் காரியதரிசி வேணுவாக எம். நஸ்ருதீனும் மகள் மைதிலியாக ஆனந்தி சுப்பிரமணியமும் நடிக்கிறார்கள். இன்னும் வித்துவான் ஆர். எஸ். சோதிநாதன், வி. சோமசுந்தரம், வி. கனகலிங்கம், இ. எல். ஆதித்தன் ஆகியோரும் நடிக்கிறார்கள்.

கொழும்பு மாநகரசபை உறுப்பினர் திருமதி மீனா இரத்தினத்தின் ஆதரவின் கீழ் லயனல் வென்ட் ஞாபகார்த்த மண்டபத்தில் 8-6-60ல் "அழாதே கண்ணே" நாடகம் நடைபெறவிருக்கிறது.



திரு. ரொஸாரியோ பீரிஸ்

## சரித்திர நாடகம் "பதியூர் ராணி"

"பதியூர் ராணி" ஒரு தழுவல் சரித்திர நாடகம். ஒஸ்கார் வைல்ட்டின் "டச் செஸ் ஒப் படுவா" என்ற ஆங்கில நாடகத்தைத் தழுவி திரு. இரத்தினம் வானொலிக்கென எழுதியதை மேடைக்காக்கியிருக்கிறார் சானா.

சானாவும், ரேடியோ மாமாவும் (திரு எஸ். சரவணமுத்து) ஏ. டி. பொன்னுத்துரை ஜபார் முதலானோரோடு சேர்ந்து நடிக்கிறார்கள்.

நாடக விழாவில் 4-ம் 5-ந் தேதிகளில் இந் நாடகம் இடம்பெறவிருக்கிறது. லயனல் வென்ட் ஞாபகார்த்த மண்டபத்திலேயே இதுவும் நடக்கும்.

நகைச்சுவை நாடகம்

## "வா கோட்டடிக்கு"

நகைச்சுவை நாடகங்களை வழங்கி ரசிகப் பெருமக்களை வயிறு குலுங்கச் சிரிக்க வைப்பதில் கைதேர்ந்த திரு. இராசரத்தினத்தின் ருஜ் நகைச் சுவை நாடக மன்றம் "வா கோட்டடிக்கு" என்ற நாடகத்தை 28-5-60 சனிக்கிழமை அளிக்கிறார்கள். இடம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபம்.


இந்நாடகம் முன்னர் கொழும்பில் நடிக்கப்பட்ட தோடல்லாமல் யாழ்ப்பாணத்திலும் வெற்றிக்கொடி நாட்டியது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## பாகப்பிரிவினை

நடிகர் திலகம் சிவாஜி கணேசனும் நடிகவேள் எம். ஆர். ராதாவும் ஆளுக்காள் விட்டுக்கொடாமல் தத்தமது திறமை பளிச்சிட நடிக்கும் "பாகப் பிரிவினை" படம் 27-5-60 வெள்ளி முதல் சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் திரையிடப்பட்டு வருகிறது.

வில்லன் பாலையாவுக்கு இந்தப் படத்தில் நடிப்புக்கு முதலிடம் கொடுக்க யாரும் தயங்க மாட்டார்கள். இந்திய ஜனாதிபதி இப் படத்துக்கே பரிசு வழங்கினர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மனோதத்துவக் கருத்தை உள்ளடக்கியிருக்கும் இப் படத்தில் சரோஜாதேவியும் நடிக்கிறார்.



## உண்மை புலியுடன் ரஞ்சன் சண்டை

புலிகூட ரஸித்தது

'பாக்தாத்' என்ற இந்திப் படம் தயாராகிக்கொண்டிருக்கும் பொழுது அதில் கதாநாயகனாக நடித்த ரஞ்சன் ஒரு புலியுடன் சண்டை செய்ய இருந்தது.

இதைப் படத் தயாரிப்பாளர்கள் ரஞ்சனிடம் கூறியவுடன் அவரும் சம்மதித்து விட்டார். உடனே ஒரு சர்க்கஸ் புலி கொண்டுவரப்பட்டது. அந்தப் புலியுடன் ரஞ்சன் கட்டிப்புரண்டு சண்டை செய்தார்.

இதில் மற்றொரு வேடிக்கை என்னவென்றால் ரஞ்சனுடைய சண்டையை அந்தப் புலியும் ரசித்ததாம்!

# டட்லியின் மூளை கெட்டு...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

நாம் வெளியே வர விடப் போவதில்லை.

### ஒப்புவமை இல்லை

"பொதுமக்களுக்குத் தெரியாமலே, அவர்கள் மேல் சாதுரியமாக ஒரு பிரதமரைத் திணிக்க முயற்சிப்பதாக" எமது கட்சி மீது குற்றஞ் சுமத்தத் துணிந்து விட்டார் சேனநாயக்கா. மீண்டும் அவர் ஞாபகசக்தி அவரை வஞ்சித்து விட்டது. ஜனநாயக உலக பாராளுமன்றச் சரித்திரத்தில், சேனநாயக்காவின் செய்கைக்கு உவமையே இல்லை. சந்தேகமான வழிகளில், ஒன்றுக்கு இரண்டு முறை பிரதமர் பதவியைக் கைப்பற்ற இவர் கையாண்ட தகிடுதத்தங்கள் வேறெந்த நாட்டிலும் நடந்ததில்லை. ஆனால் நாட்டு மக்களின் ஆதரவில் இவர் பிரதமரான ஒரேயொரு சந்தர்ப்பம் இல்லாமலுமில்லை. (தகப்பன் சேனநாயக்காவின் மரணத்துக்குப் பின்) கண்களிலிருந்து நீர் வடிய, இவர் பொதுமக்கள் வாக்குகளைக் கோரிப் பிரதமராகிக்கொண்டதை நாம் மறுக்கவில்லை.

### கொத்தலாவலையும் பிச்சா பாத்திரமும்

எமது அபேட்சகர்கள் பட்டியலில் 45 மார்க்ஸீய வாதிகளிருக்கிறார்களென்று குற்றஞ் சாட்டுகிறார். மிக அவசரமாகத் தேவைப்படும் ஒரு நாட்டுக்குத் தன்னுடைய ஒற்றர் படையின் திறமையை விளம்பரப் படுத்துகிறார் டட்லி. இனி பிடித்த முதலாளிகள், வர்த்தகக் கம்பனிகள், அயல் நாட்டு வட்டாரங்கள் ஆகியவை இவருடைய கட்சிக்கு ஏராளமாக நிதி உதவ இத்தகைய பூச்சாண்டிப் பிரசாரங்கள் உதவலாம். ஆனால் கல்வி வாசனையற்றாலும் அறிவு நிறைந்த ஏழைப் பொது மக்களை இத்தகைய பிரசாரத்தினால் ஏமாற்றி விட முடியாது. ஒரு சில பேரைத் தவிர, எமது கட்சி அபேட்சகர்களனைவரும் சென்ற மார்ச் மாதத் தேர்தலில் போட்டியிட்டவர்களே. இத்தகைய மார்க்ஸீய வாதிகளைக் கொண்ட கட்சியிடம் தானு, டட்லியைப் பிரதமர் பதவியிலிருத்துவதற்குப் பிச்சா பாத்திரம் ஏந்தி விரைந்தடித்துக் கொண்டு ஓடி வந்தார் ஐ. தே. கட்சியின் முத்திரை பதித்த தூதுவர், சேர் ஜோன் கொத்தலாவலை?

தன் நிலைமையிலிருந்து விலக முடியாது என்பதைத் திட சித்தத்துடன் எமது கட்சி இவருக்குப் புரிய வைத்தது. அப்பொழுது தான் பிலிப் குணவர்தனவின் கட்சிக்கும் தங்கள் கட்சிக்குமிடையில் பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் 900 ஒற்றுமையிருப்பதை ஐ. தே. கட்சியினர் கண்டு கொண்டார்கள்.

### டட்லி பிலிப் கூட்டு

(இதைப் பாராளுமன்றத்திலேயே ஜே. ஆர். ஜெயவர்தன கூறியிருக்கிறார்) ஐ. தே. கட்சி அரசாங்கத்துக்கெதிராக வாக்களிக்க மறுத்தது, அவ்வழியில் பிலிப் குணவர்தன இந்தப் புகழுரைக்குத் தன் பிரதியுபகாரத்தைத் தெரிவித்துக் கொண்டார். இவர்களிருவரும் பரஸ்பரமாக ஒருவரை ஒருவர் வியந்து கொண்டது எங்கே முடிவுற்றிருக்கிறது? டெடிகமத் தொகுதியில் டட்லி சேனநாயகாவிற்கெதிராக பிலிப் குணவர்தன அபேட்சகரை நிறுத்துவதில்லை என உடன்பட்டு விட்டார்! இப்பொழுது தெரிகிறதா கனல் பறக்கும் மார்க்ஸிஸ்டுகளுடன் யார் இரகசிய ஒப்பம் செய்து கொண்டிருக்கிறார்களென்று?

### சமஷ்டிக் கட்சியிடம் டட்லி தூது

சமஷ்டிக் கட்சியுடன் எவ்வித சமரஸமும் செய்து கொள்ள மாட்டேன் என்று கூரையில் நின்று கொக்கரிக்கிறார் டட்லி. ஆனால் சமஷ்டி அங்கத்தவர்களுக்குப் பதவியளிப்பதாக வாக்களித்து சேர் எட்வேட் ஜெயத்திலக்காவையும் சேர் அருணாசலம் மகாதேவாவையும் அவர்களிடம் விழுந்தடித்துத் தூது அனுப்பியதை மறந்து விட்டாரா இவர்? பதவி ஏற்றுப் பிரதமராக முன்னரே இராணி மாளிகையிலிருந்து நேராக சமஷ்டிக் கட்சியிடம் தூதனுப்பி ஒடினாரா இல்லையா? அந்தச் சந்தர்ப்பத்தில் புகழுக்கும் பெயருக்குமாகச் செய்ய இருந்த தியாகம் என்ன! இன்று துரோகத்தனத்தில் செய்யும் தியாகம் தான் என்னே என்ன!! பதவி என்ற இனிப்பைக் காட்டி தம்மை மயக்க முயன்ற கொலைகாரரின் மத்தியில் வாழ்வதிலும் பார்க்க, எதிரிகளின் மத்தியில் மாண்டு போவதே மேல் எனச் சமஷ்டிக் கட்சி தீர்மானித்ததில் வியப்பென்ன இருக்கிறது?

### இரகசிய உடன்படிக்கை இல்லை

சமசமாஜக் கட்சியுடனும் கொம்யூனிஸ் கட்சியுடனும் தேர்தல் ஒப்பந்தம் எதுவும் நாம் இரகசியத்தில் செய்து கொள்ளவில்லை. கடந்த மகாயுத்தத்தில் கூட பிரிட்டனும் அமெரிக்காவும் ரஷ்யாவின் உதவியை நாடியிருக்கின்றன. பயங்கரமான ஒரு விஷயத்தை ஒழித்துக் கட்ட எங்கும் நடவடிக்கை உண்டு. இது கடந்த பாராளுமன்றத்தில் சுதந்திரக் கட்சி அங்கத்தவர்களைத் தம்பக்கம் கவர்ந்து கொள்வதிலோ, கறைப்படுத்துவதிலோ தீவிர தோல்வி கண்டது ஐ. தே. கட்சி. முதலாளித்துவமும், அதன் கூட்டாளியான அடக்குமுறையும் இந்தத் தேர்தல் ஒப்பந்தத்தின் பயனாக நிச்சய தோல்வியை அடையப் போகின்றன. இதை நினைக்கும் போது சிலருக்கு மிகுந்த துக்கமும் வெட்கமும் மேலிடுவதற்கு நாம் என்ன செய்ய முடியும்?

"தேசிய தலவுரிமைகள்" என்ற போர்வையில் சுதந்திரக் கட்சித் தலைவர்களிடையே சொந்த ஆசைகளோ கனவுகளோ எதுவும் இல்லை.


பணம்! சேமியுங்கள்!! பணம்!!!

இன்றே நாஷனல் பாட்டரிகளைப் பாவிக்க ஆரம்பித்து அதிக லாபம் பெற்று ஆனந்தியுங்கள்.

நீடியகாலம் பாவிக்கிறது





விலையோ மிகக் குறைவு

இறக்குமதியாளர்கள்:

எஸ். யூ. முகம்மது ஹாஜியார்.

70, டாம் வீதி, கொழும்பு. போன்: 7653 ★ 143, மெயின்வீதி, காலி. போன்: 525


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மேல் மாகாணத் தலைமை ஆசிரியர்கள் சங்கம் உதயம்

## 'ஆசிரியர்கள் என்ன எடுப்பார் கைப்பிள்ளைகளா?'

### சங்கத்தலைவர் சோதிநாதன் கேள்வி

**"பாடசாலை ஆசிரியர்கள் என்ன, எடுப்பார் கைப் பிள்ளைகளா? ஆசிரியர்கள் மேல் குதிரைவிட எண்ணுகிறார்கள் சில முகாமைக்காரர்கள். தமது கடமையைச் சரிவர இவர்கள் உணர்ந்து கொள்ளாதிருப்பதன் விளைவு இது. அதுதான் போகட்டும் என்றால் சம்பள விஷயத்தில் கல்வி இலாகா வேறு கை வைத்து வித்தை காட்டி வருகிறதே! 1954-ம் ஆண்டுக்கு முன் சேவை ஆரம்பித்த ஆசிரியர்களுக்கு இரண்டு வருட சம்பள ஏற்றம் இல்லை! இது பெரும் அக்கிரமம்-அநீதி; ஒழிக்கப்பட வேண்டும்."**

மேற்கண்டவாறு மேல் மாகாணத் தலைமை ஆசிரியர்கள் சங்கத் தலைவர் (கொழும்பு பண்டாரநாயக மாவத்தை கணபதி வித்தியாலயத் தலைமை ஆசிரியர்) வித்துவான் இ. சி. சோதிநாதன் மேற்படி சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில பேசும்போது காட்டமாகக் கூறினார்.

மேல்மாகாணத் தலைமை ஆசிரியர்கள் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் கணபதி வித்தியாலய மண்டபத்தில் திருமதி எம். எம். பெரிணண்டோ தலைமையில் நடைபெற்றது.

திரு சோதிநாதன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:— "மேல் மாகாண ஆசிரியர்கள் சங்கங்கள் பல குட்டிச்சுவராவதற்கு காரணம் என்ன? சங்கங்களில் உள்ளவர்களின் பதவி ஆசை! ஒரே பதவிப் பித்து!! ஒருவருக்கு பதவி கிடைத்துவிட்டால் அவர் அப்புறம் வேறு யாருக்கும் சந்தர்ப்பம் கொடுக்கமாட்டார். இன்னொரு சீர்கேடு; அதாவது ஒரே பாடசாலையில் உள்ள ஆசிரியர்களுக்குள் எல்லாப் பதவிகளையும் பகிர்ந்துகொள்கிறார்கள். இப்படியான அலங்கோலங்கள் எமது சங்கத்தில் வேண்டாம்" இவ்வாறு பேசி முடித்தார் அவர்.

மற்றும் பேச்சாளர்கள் சங்கத்தின் அவசியத்தை வலியுறுத்தியதோடு உரிமைப் பிரச்னையையும் எழுப்பினார்கள். சங்கங்கள் எத்தனையோ இருந்தும் மேல்மாகாணத் தலைமை ஆசிரியர்களின் பிரச்னைகளுக்கு பரிகாரம் தேட அவை பயனற்றவையாய் இருப்பதால் தமக்கெனத் தாம் ஒரு சங்கத்தை அமைத்துக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்றும் சொன்னார்கள். பாடசாலை முகாமைக்காரர்கள் மீதும் கல்வி இலாகாமீதும் பேச்சாளர்களின் உணர்ச்சி வேகம் கட்டுமீறிப் பாய்ந்தது.

திருவாளர்கள் பொ. நடராசா, பி. சரவணமுத்து, எஸ். எம். இஸ்ஹாக் ஆகியோர் பேசினார்கள். சங்கத்தின் சார்பாக விரைவில் கலை விழா ஒன்றை நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்:—

தலைவர்: வித்துவான் இ. சி. சோதிநாதன், உபதலைவர்: திருமதி எம். எம். பெரிணண்டோ, செயலாளர்: திரு எஸ். எம். இஸ்ஹாக், உதவிச் செயலாளர்: திருமதி எல். செபஸ்தியான், பொருளாளர்: திரு பொ. நடராசா. நிர்வாக் குழு உறுப்பினர்கள்: திருவாளர்கள் பி. சரவணமுத்து, டி. ஜோசப், திருமதி என். கந்தையா, திருமதி எம். நைனல்.

---

## வேலைக்கு தகுந்த

(11-ம் பக்கத் தொடர்ச்சி

நெசவு வளர வேண்டும் என்று மனமார வாழ்த்தினேன். கட்டாயம் வளரும்! என்றார் திரு தாமோதரம் பிள்ளை.

"பிள்ளைகளும், தொழிலாளரும் ஒழுங்காக வந்து, கவனமாகத் தொழிலில் ஈடுபட்டால், ஈழத் தமிழினத்துக்கு கை கொடுக்கும் முதலாவது கைத்தொழில் நெசவாகவேயிருக்கும்" என்று மிக ஆர்வத்தோடு அவர் கூறி வைத்தார்.

---

## உலக....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

### வெளியூர்களில்

குரும்பசிட்டி உதயதாரகை மன்றம், தம்பசெட்டி திருவள்ளுவர் நெறி மன்றம், உடுப்பிட்டி இளந் தமிழர் இயக்கம், ஊவா மாகாணத் தமிழ்ச் சங்கம், அற்றன் திருவள்ளுவர் விழா மன்றம், கண்டி திருவள்ளுவர் கழகம், மன்னார் மாவட்ட இந்து இளைஞர் சங்கம், துணுக்காய் சனசமூக நிலையம், நாவலப்பிட்டி இந்து வாலிபர் சபை முதலியன வள்ளுவர் விழாவைச் சிறப்பாகக் கொண்டாட முயல்கின்றன.

யாழ்ப்பாணம் நகரசபை மண்டபத்தில் யாழ் சமூக சேவா சங்கம் பெரு விழா ஒன்றினை ஒழுங்கு செய்கிறது.

---

## "மதி மங்கை',

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடங்கிவிட்டனர். பாதையில்லாமலே வான் வெளியிலே நாம் நடந்து கொண்டிருந்தோம். பயம் வந்து சூழ்ந்து கொள்ளவே உணர்வு பெற்றேன். அங்கே- "மதிமங்கை" மண்ணைப் பொன்னாக்கிப் பாய்ச்சிக் கொண்டிருந்தாள். யாருமே என்னைக் காணவில்லை என்ற எண்ணத்துடன் பாரதியின் 'அழகுத் தெய்வம்' என்ற பாட்டின் முதலடியான "மங்கியதோர் நிலவினிலே............" என்ற வரியை முணு முணுத்தேன். சிரிப்பொலி! திரும்பினேன். அங்கே பாரதி கண்ட அழகுத் தெய்வமாக நின்று கொண்டிருந்தாள் சிவேகிதி இராணி. அப்போதுதான் அவள் சிரிப்பின் பொருளறிந்தேன்.

---

## சிங்கள பொதுமக்களே....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

உறுதி கூறி இருக்கின்றது என்பதை பொது ஜனங்கள் அறிந்து கொள்வதற்காக இங்கு குறிப்பிட வேண்டியிருக்கிறது.

### இரகசிய உடன் படிக்கை

சிறீ லங்கா சுதந்திரக்கட்சி —பெடரல் கட்சிகளின் இந்த உடன் படிக்கைகளின் படி அனுராதபுரம், பொலநறுவை உட்பட வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள ஏனைய குடியேற்றத் திட்டங்களுக்கெல்லாம் பேராபத்து வரப்போகிறது. பொது மக்கள் பொங்கி எழ வேண்டிய சந்தர்ப்பம் அண்மிவிட்டது.

### கமக்காரர்களே எச்சரிக்கை

ராசரட்டை கமக்காரப் பெருமக்களே விழித்தெழுங்கள்! நீங்கள் பெரும் ஆபத்தை எதிர் நோக்கியுள்ளீர்கள். இவ்வாபத்திலிருந்து விடுபடவேண்டின் இன்றே ஒன்று படுங்கள். வருகின்ற பொதுத் தேர்தலின் பின் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் அரசாங்க மேற்படின் நீங்கள் இருக்கும் இடங்களிலிருந்து நீங்கள் துரத்தப்படுவதைத் தடுக்க முடியாது. சுதந்திரக் கட்சி—பெடரல் கட்சிகளின் இந்தப் பயங்கர ஒப்பந்தத்தைக் கிழித்தெறிவதற்கு உங்களை அந்தஇடங்களில் கொண்டுபோய் குடியேற்றிவைத்த ஐக்கிய தேசிய கட்சி பிரயாசைப் படுகிறது. எனவே ஐக்கிய தேசியகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு கட்சியால் உங்கள் பிரதேசத்தில் தேர்தலுக்கு நிறுத்தப்பட்டிருக்கும் அபேட்சகரையே தெரிந்தனுப்புங்கள். இல்லாது போனால் உங்களுக்கு பெரும் ஆபத்துதான் ஏற்படும் என்பது நிச்சயம்.

---


இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

எல்பின்ஸ்டன் 3-வது வாரம்!

ஏ. நாகேஸ்வரராவ்—பத்மினி—ராகினி நடிக்கும்

தெய்வமே துணை

கெயிட்டி 10-வது வாரம்! எஸ். எஸ். ராஜேந்திரன்—மைனாவதி—பிரேம்நசீர் நடிக்கும்

கல்யாணிக்குக் கல்யாணம்

செல்லமஹால் 10-வது வாரம்!

சிவாஜி கணேசன்-வைஜயந்தி மாலா - சரோஜாதேவி நடிக்கும்

இரும்புத் திரை

ரெக்ஸி குமாரி—ஸ்ரீராம் நடிக்கும்

யானை வளர்த்த வானம்பாடி

ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு

ஜூன் 3-ம் திகதி வெள்ளி முதல்

முருகன் (இந்துப்பிட்டி) ராணி (யாழ்ப்பாணம்) ராஜேஸ்வரா (மட்டக்களப்பு)

ஏ. நாகேஸ்வரராவ்—சிவராவ்—ஸ்ரீ ரஞ்சனி

கிருஷ்ணகுமாரி—ஹேமலதா—சுரபி பாலசரஸ்வதி

நடித்த

அரசாளப் பிறந்தவன்

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

முருகன் [இந்துப்பிட்டி]

எம். ஜி. ராமச்சந்திரன் நடித்த சக்கரவர்த்தி திருமகள்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஔவை அமுதம்: 28

# அழகலாதன செயேல்

அழகானது எதுவோ அதற்கு ஓர் அபார சக்தி உண்டு. அழகிய ரோஜா மலரை எல்லோரும் விரும்புகிறோம். ஏன்? அது அழகாயிருப்பதோடல்லாமல் நறுமணமுடையதாயும் இருப்பதால்தான்.

நறுமணமுடைய மலர்களைத் தேடிக்கொண்டு வண்டுகள் பல மைல் தூரம் பறந்து செல்வதை தினம் தினம் பார்க்கிறோம். நல்ல குணமும் அழகிய செயலும் கொண்ட ஒருவனை நண்பர்களும் பெரியோர்களும் தேடி அடைந்துகொண்டு பெருமைப்படுத்துவார்கள். ரோஜா மலர் புஷ்பங்களுக்கு ராஜாவாயிருப்பதைப்போல் உயர்ந்த செய்கைகளைச் செய்யும் ஒருவனும் மனிதருள் மாணிக்கமாய் விளங்குவான்.

உயர்வுள்ள செயல்கள் அழகுடையனவாதலால் உயர்வான செயல்களைச் செய்பவனும் அழகுடையவனாகின்றான். தான் துன்பப்பட வந்த காலத்தும் அறநிலை தவறி இழிவுள்ள செயல்களைச் செய்யாதிருப்பதே அழகானதாகும். "சத்தியம் தவறாத உத்தமன் நான்" என்று சொல்லிக்கொண்டு அதர்ம வாழ்க்கை வாழ்ந்தால் அதற்கு அர்த்தமே இருக்காது.

அழகாயிருப்பினும், மணமில்லாத மலர்களை வண்டுகள் நாடுவதில்லை. செல்வம் சொத்து முதலியன பெற்று குபேர வாழ்வு வாழ்ந்தபோதும் இழிந்த குணமுடைய ஒருவனை எவரும் நாடார். பூக்களுக்கு நறுமணம் எப்படியோ மனிதனுக்கு உயர்குணம் அப்படியே! குணமில்லா மனிதன் மணமில்லா மலர்போன்றவன்.

இழிவான செயல்கள் இழுக்கையும் பாபத்தையும் தந்துவிடும். இழுக்கு இவ்வுலகில் கெட்ட பெயரைக் கொண்டுவரும். பாபம் மறு உலகில் முடிவில்லா வேதனையை வாங்கித் தரும்.

"பெருமைக்கும் ஏனைச்
சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்"

—ஏ. ஜீ. ஆனந்தன்




# "நித்திராதேவி"

மணி பத்திருக்கும்; பாரெங்கும் காரிருள். பயங்கர அமைதி. ஊரே உறங்கிக் கொண்டிருந்தது. ஆனால் நான் மட்டும் என் படிக்கும் அறையிலிருந்து ஊற்றுப் பேனாவுடன் உரையாடிக் கொண்டிருந்தேன். வளர்மதிக்கு அனுப்ப வேண்டிய விடயமாதலால் வளமான சொற்களை வாரி இறைத்துக் கொண்டிருந்தது என் அருமைப் பேனா முனை.

ஆனால் நித்திராதேவி என்னை அணுகினாள். அவளை அணைத்துக்கொண்டு கட்டிலில் புரண்டேன்.

ஆகா! என்ன அழகு! எங்கும் எழிலரசியின் கோலம் தாளம் போட்டுக்கொண்டிருந்தது. வாலைக் குமரிகள் வருவதும் போவதுமாக இருந்தனர். ஆடவர்கள் ஆடிப்பாடிக்கொண்டிருந்தனர். என்ன உலகமிது? ஓகோ! இந்திரலோகம் உண்டு என்று புராணங்கள் புளுகுகின்றனவே ஒருவேளை அதுவாக இருக்குமோ என்று எண்ணிக்கொண்டிருக்கையில் எங்கிருந்தோ வந்த சிரிப்பொலி என் செவிகளைத் துளைத்தன. தாவிப் பாய்ந்தேன் ஒலி கேட்ட திசை நோக்கி.

சபை ஒன்று களிப்பிலே திளைத்துக்கொண்டிருந்தது. காரணம் நகைச்சுவைக் குமரன் வன்னியசிங்கம் அவர்கள் நகைச்சுவைக் கதைகளை நவின்றுகொண்டிருந்தார். அங்கு சென்ற என்னைக் கண்டதும் ஓ! சிங்கத்தைத் தேடிச் சிங்கம் வந்துவிட்டதோ என்று வழமையான நகைச்சுவைப் பாணியில் என்னை வரவேற்றார். முன்னேறினேன் அவர்கள் அவை நோக்கி. பூலோகப் புதினங்களை எடுத்துரைக்கும்படி பணிந்தனர். எழுந்து நின்று சபையை ஒருமுறை உற்று நோக்கினேன்.

தனிச் சிங்களச் சட்டத்தை ஈழவள நாட்டிற்கு ஈந்து இன்னல்கள் பல விளைவித்த திரு பண்டாரநாயகாவைக் கண்டேன்—தரணி புகழ் குறள் தந்த வள்ளுவனைக் கண்டேன்—யாழ் நூல் புனைந்து தந்த விபுலானந்தடிகளைக் கண்டேன்—இராமாயணம் கடைந்து தந்த கவிச் சக்கரவர்த்தி கம்பனைக் கண்டேன்—சுதந்திர இந்தியாவுக்கு உதயகீதமும் அந்நிய ஏகாதிபத்தியத்துக்கு சமாதி கீதமும் பாடிய வரகவி பாரதியைப் பார்த்தேன்—மனுக்குலமே தன் மானமுடன் வாழ வேண்டும் என்று விரும்பிய மகாத்மா காந்தியடிகளைக் கண்டு களித்தேன். என்னை அறியாமலே என் அதரங்கள் அசைந்தன. சொற்கள் உதிர்ந்தன.

அறிவும் ஆற்றலும்மிகுந்த என் முன்னோர்களே! நம் உலக விடயங்களை விரித்துரைக்க நாட்கள் பல தேவை. ஆனால் நாலு நாழிகையில் கூறுவது எப்படி என்றுதான் தெரியவில்லை. இன்று எம்மைக் காபந்து அரசாங்கம் கட்டியாள்கிறது. அதன் பிரதமர்தான் திரு டட்லி. தந்தை காட்டிய பாதையில் தள்ளாடி நடந்து கொண்டிருக்கிறார். தமிழினத்தின் நன்மைக்காகச் சின்னி விரல்தானும் அசைக்காமல் இருக்கிறார்கள் சிங்களச் சுயநலவாதிகள். நீங்கள் ஒரு அங்குலம் விட்டுத் தாருங்கள் நாங்கள் ஒரு அடி விட்டுக்கொடுக்கிறோம் என்றால் கேட்பதாக இல்லை; நம்பி நாசம் போன நம்மினம் இனிமேலும் நம்பி மோசம் போகாது. இலங்கையில் தமிழன் தன்மானமுடன் வாழத் துணிந்துவிட்டான். இமயத்திலே புலிக் கொடி பொறித்தான்-கங்கை கொண்டான்-கலிங்கத்துப் பரணி கண்டான்-கடாரம் வென்றான்-போர்ப் பறை கேட்டுப் பொங்கியெழுந்தான் என்றெல்லாம் விருது கண்டோர் நம்முன்னோர்-வீரர்களின் வீம்புச் செயலுக்கு வெற்றி முரசு கொட்டுவதா கேவலம் அற்ப சலுகைகளுக்காக-தன் குடும்பம் வாழ்ந்தால் போதும் என்ற சுயநலத்தினால் தமிழினத்தை மேலும் காட்டிக் கொடுக்கத் தமிழ்த் தலைவர்கள் தற்பொழுது தயாராயில்லை எடு வாளை சாவா வாழ்வா? இரண்டில் ஒன்றைப் பார்ப்போம் என்று சூழ் உரைக்கின்றனர்.

இன்று தமிழ் மக்கள் ஒன்றுபட்டுவிட்டனர். செல்வாவின் கனவு நனவாகும் நாள் வெகு தூரமில்லை என்று கூறி முடிக்கவில்லை முதுகிலே ஒரு பலமான அடி. யாரடா அது பின்புறம் நின்று தாக்கிய கோழை. எம் இனத்தின் வீர வரலாற்றுக்கே இழுக்குத் தேடிய கொடியவன் என்று உரைத்துக்கொண்டு விழிகளைத் திறந்தேன். அருகே என் மூத்த சகோதரியின் மழலைச் செல்வம் பொக்கை வாயால் புன்னகை சிந்தி விளையாடிக்கொண்டிருந்தான். சோதரியும் காப்பிக் கோப்பையுடன் வந்து சேர்ந்தாள். கோப்பையைக் காலியாக்கிவிட்டுக் காலைக் கடனைத் தீர்க்கக் கிளம்பிவிட்டேன்.

—ஆ. யோசேப் கனகசிங்கம்,
மட்டுநகர்.

# "மதி மங்கை"

—மதியமுதன்—

வானக் கடலிலே "மதி மங்கை" நீந்தி விளையாடிக் கொண்டிருந்தாள். விண் மீன்கள் கண் சிமிட்டிச் சிரித்தன. வானத்து மல்லிகை மலர்ந்ததுவோ! என்று மண்ணிலுள்ளோர் மயங்கிக்கிடந்தனர். அறைக்குள் படித்துக் கொண்டிருந்தேன். வீசுந் தென்றலிலே சாளரத்திரை அசைந்தாடி, விளையாடியது. ஆனால், அதற்குள்ளாக என்னை மதி முகம் மலர்ந்து வா, வா என்று அழைத்தாள் மதி மங்கை. அவள் வண்ண நிலாவொளி உலகையே பால் வண்ணமாக்கி மெருகிட்டுக் கொண்டிருந்தது. வெளியே வந்தேன். மென் காற்று உடலைத் தழுவியது.

பட்டு மணலிலே இருந்துவிட்டேன். பகலாய்க் காய்ந்த நிலவு என்னை அப்படியிருக்கச் செய்ததில் வியப்பில்லையே! நான் ஒரு கவிஞனாகயிருந்தால்............ காவியம் பல பாடியிருப்பேன்! எழுத்தாளனாகயிருந்தால்............எத்தனையோ சிறுகதைகளைச் சிதறச் செய்திருப்பேன். நிலவின் அமுத ஒளியைப் பருகிக்கொண்டேயிருந்தேன்.

வான வெளியிலே வலம் வரப்போகும் ருஷ்ய மக்களை எண்ணிப் பார்த்தேன். அயன மண்டலங்களைக் கடந்து அமெரிக்க மக்கள் சந்திர மண்டலத்திலே சதிபதிகளாக வாழப் போவதை எண்ணிப் பார்த்தேன். "வளர்மதி" எண்ணம் என் மனக் கண் முன் நிழலாடியது. என்னை மறந்தேன். கண்ணை அயர்ந்தேன். [illegible] ஒரு [illegible] 'இராக்கெட்' ஆம்! அதிற்தான் வளர்மதி மருமக்களும், சுதந்திரன் மாமாவும் சந்திர மண்டலத்துக்குச் செல்ல தயாராகயிருக்கின்றனர். எல்லோருடன் நானும் ஏறிக் கொண்டேன். ஏதோ! ஒருவித கவசத்தால் நாங்கள் போர்க்கப்பட்டிருந்தோம். ஒருவிதப் பேரிரைச்சல் காதைத் துளைத்தது. நாங்கள் ஏறியிருந்த 'இராக்கெட் மேலே போய்க்கொண்டிருந்தது. நாங்கள் எங்களையே மறந்து இருந்தோம்.

இராக்கெட் சில மணித்தியாளங்களின் பின் பேரிரைச்சலுடன் ஓரிடத்திற் போய் நின்றது. நாங்கள் இறங்கினோம். அங்கு எங்களை வரவேற்க யாருமில்லை. காரணம் நாங்கள் சந்திரவிற் கொடிபொறித்த பரம்பரையல்ல; இமயத்திலே கொடி போட்ட பரம்பரை. சற்றுத் தூரத்தில் அரிவாளும் சுத்தியலும் பொறித்த செங்கொடி பறக்கக் கண்டோம். அங்கு ருஷ்ய நாட்டுத் தோழர்கள் கூடிக் குலாவித் திரிந்தனர். மறு முனையை நோக்கினோம். என்ன ஆச்சரியம்! அமெரிக்கரின் கொடி அங்கே பட்டொளி வீசிப் பறந்தது. ஓகோ! இதுதான் சந்திரமண்டலம். இல்லாவிட்டால் இவர்களுக்கென்ன வேலை இங்கே? அதிலும் ருஷ்யர் ஒருபால்; அமெரிக்கர் மறுபால் ஆட்சியைத்

(13-ம் பக்கம் பார்க்க)

வள்ளுவர் குரல்:25

# வீட்டுக்கு வித்து

"உரன் என்னும்
தோட்டியான்
ஓரைந்தும் காப்பான்
வரன் என்னும் வைப்பிற்கு
ஓர் வித்து"

யானை பெரியது; எளிதில் அடக்க முடியாதது. அதனையும் தன் கைச் சிறு தோட்டி (துறட்டி)யினாலே அடக்கிவிடுகிறான் யானைப்பாகன். பெரிய யானையைச் சிறிய தோட்டியினாலே அடக்கிவிட்டால், அதைக் கொண்டு அரிய செயல்களைச் செய்விக்கலாம். சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐம்புலன்களும் யானையைப் போன்றவை; எளிதில் அடக்க முடியாதவை. ஒவ்வொரு புலனும் தத்தமது வழியிலே மனிதனை இழுத்துச் சென்று, அவனை அலைக்கும் இயல்புடையது.

யானையை அடக்குவது போன்று, புலனையும் அடக்கியாண்டால் நன்மையுண்டு. அடக்கப்பட்ட யானையானது பாகனுக்கு அடங்கி, அளப்பரிய தொழில்களைச் செய்து பயன் தருவது போல, அடக்கப்பட்ட புலன்களும் மனிதனுக்கு அடங்கி, அளவுடன் நுகர்ச்சி இன்பம் தந்து, அவனை ஆற்றல் மிக்கவனாக்குகின்றன.

யானையை அடக்குவதற்குத் தோட்டி உதவுவது போலப் புலனை அடக்குவதற்கு உதவக் கூடியது உரன்; வலிமை; அறிவாகிய வலிமை. அறிவு வலிமை என்ற தோட்டியினாலே புலன்களாகிய யானையை அடக்க வல்லவன் எவனோ அவனே, அப்புலன்கள் வழியாகப் பிறக்கும் பற்றுக்களைத் துறக்கவும் வல்லவன். அவன், வரன் என்னும் வைப்பிற்கு-மேலான வீட்டுலகிற்கு-ஒரு வித்துப் போன்றவன். அது, சாதாரண நிலத்திலே நடுதற்குரிய வித்தன்று; மேலான வீட்டுலகிலே நடப்பட்டு, ஈறிலா இன்பப்பயன் நுகர்தற்கு ஏதுவாகிய வித்து.

ஐம்புலன்களையும் தன் அறிவு கொண்டு அடக்கும் ஒழுக்கமுடையவன், மேலான வீட்டுலகிலே, நிலையான இன்பம் நுகர்வான்.

—பா. ஆறுமுகம்

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம் கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

## வளர்மதி

### சுதந்திரன் மாணவர் மன்றம்

அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 4.

பெயர்..........................................................................

பாடசாலை.....................................................................

விலாசம்.......................................................................

..........................................................

..................................................  ..................................
பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம்  கையொப்பம்

# குட்டி அணில்

தத்தித்தத்தி குட்டி அணில் மரத்திற்தாவுது
அணில் மரத்திற்தாவுது
கத்திக்கத்தி மலரை நாடி தேனை அருந்துது
அணில் தேனை அருந்துது
பாலர் குரல் கேட்டுவிட்டால் திரும்பிப்பார்க்குது
அணில் திரும்பிப்பார்க்குது
கையைக்காலை ஆட்டிவிட்டால ஓடிமறையுது
அணில் ஓடி மறையுது
குருட்டுத்தனமாய் பிடித்துவிட்டால்
கையைக் கடிக்குது
அணில் கையைக் கடிக்குது
கூண்டிலிட்டு அடைத்துவிட்டால்
தப்பப்பார்க்குது
அணில் தப்பப்பார்க்குது

—"கனகராஜன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

### அகில இலங்கை தமிழ் மறைத் தேர்வு

தமிழ் மறைக் கழகம் சென்ற மார்ச்சு மாதம் நடத்திய அகில இலங்கைத் தமிழ் மறை தேர்வுக்குத் தோற்றியவர்களுள், பின்வருவோர் பரிசுகள் பெறுகின்றனர். இப்பரிசுகள் யாவும் மாத்தளையில் நடைபெறும் எட்டாவது திருக்குறள் மகாநாட்டில் 5-6-60-ல் வழங்கப்படும்.

**பதக்கப்பரிசில்கள்**

முதற் பரிசுக்குத் தங்கப் பதக்கமும் ஏனையவற்றுக்கு வெள்ளிப் பதக்கங்களும் வழங்கப்படும்.

மேற்பிரிவு முதலாம் பரிசில்—ச. மங்கயர்க்கரசி (காரைநகர்) இரண்டாம் பரிசில்—மா. இசைக்கி (மாத்தளை) மூன்றும் பரிசில்—ச. புனிதவதியார் (கொழும்பு) நான்காம் பரிசில்—அ. அருளப்பு (இறக்குவானை)

மத்திய பிரிவு முதலாம் பரிசில்—ந. வள்ளிநாச்சியார் (இறக்குவானை) இரண்டாம் பரிசில்—த. நல்லநாயகி (கரவெட்டி) மூன்றும் பரிசில்—பி இ. இராசரத்தினம் பிள்ளை (இறக்குவானை) நான்காம் பரிசில்—சி. சிவபாக்கியம் (பன்னில)

கீழ்ப்பிரிவு முதலாம் பரிசில்—பொ. பொன்னம்மா (முள்ளியவளை) இரண்டாம் பரிசில்—க. செகசுந்தரி (முள்ளியவளை) மூன்றும் பரிசில்—இ. புட்பராணி (சுளிபுரம்) நான்காம் பரிசில்—ஆ. கமலாட்சி (இறக்குவானை)

தொடக்கப்பிரிவுமுதலாம் பரிசில்—சு. கமலநாயகி (யாழ்ப்பாணம்) இரண்டாம் பரிசில்—க. சிவசந்திராதேவி (முள்ளியவளை) மூன்றும் பரிசில்—அ. மங்கையர்க்கரசி (காரைநகர்) நான்காம் பரிசில்—லா. சரோசினி தேவி (கீரிமலை)

**வயது குறைந்தவருக்குரிய பரிசில்**

செல்வி த. நளினு (கீரிமலை) பிறந்த தேதி 24-6-54.

**புத்தகப் பரிசில்கள்**

மேற்பிரிவு:—க. மகாதேவி (கரணவாய்)

மத்தியபிரிவு:— க. நல்லநாயகி (கரணவாய்) சி. சிவபாக்கியம் (பன்னில)

கீழ்ப்பிரிவு:— இ. தவரத்தின் (புங்குடுதீவு), வே. இராசேஸ்வரி (அளவெட்டி), த. சச்சிதானந்தன் (காரைதீவு), இ. சற்குணராசா (சுளிபுரம்), நா. திருவடிமலர் (திருக்கோணமலை), ஆ. காமாட்சியம்மா (நீர்வேலி), சு. கனகராசா (யாழ்ப்பாணம்), இ. தனலட்சுமி (யாழ்ப்பாணம்), பொ. சிவநாமதேவி (வேலணை).

தொடக்கப்பிரிவு:— க. சித்தானந்தன் (காரைதீவு), சி. சாந்தா (கொழும்பு) ந. ரசனி (சண்டிருப்பாய்), தா. நீலாம்பிகை (கரணவாய்), அ. செயசுந்தரி (பன்னில), க. நவமணி (முள்ளியவளை), க வாலாம்பிகைதேவி (யாழ்ப்பாணம்), ச. அற்புதசிகாமணி (யாழ்ப்பாணம்), சோ ஞானசுந்தரம் (யாழ்ப்பாணம்), கா. புஸ்பராணி (கீரிமலை).

—

### மாஸ்டர் சிவலிங்கம் கௌரவிக்கப்பட்டார்

சென்னையில் நடைபெற்ற சர்வதேசக் கலைஞர்கள் விழாவில் இலங்கைத் தமிழ்க் கலைஞர்களின் சார்பில் பங்கு பற்றிய திரு மாஸ்டர் சிவலிங்கத்திற்கு 13-5-60 மட்டக்களப்பு அரசினர் கல்லூரி கலை மன்றத்தினரால் "சிரிப்பு மன்னன்" என்னும் பட்டம் சூட்டிக் கௌரவிக்கப்பட்டது. கூட்டத்திற்கு மன்றத் தலைவர் திரு எஸ். கதிர்காமத்தம்பி தலைமை தாங்கினுர்.

—

### சன சமூக நிலைய சமாஜ விழா

யாழ்ப்பாண மாவட்ட சன சமூக நிலையங்களின் சமாஜ விழா இவ்வாண்டு செப்டம்பர் மாதமளவில் யாழ்ப்பாண நகர மண்டபத்தில் நடைபெற விருக்கின்றது. இதற்கான ஏற்பாடுகளைச் சமாச விழாச் சபையினர் செய்து வருகின்றனர். சமாச விழா நிகழ்வதன்முன்னர் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த பதினெரு காரியாதிகாரிகளின் பிரிவுகளிலும் சமாச உப விழாக்கள் நடைபெறவிருக்கின்றன. இயலரங்கம், இசையரங்கம், கலையரங்கம், விளையாட்டரங்கம் என நான்கு பிரிவாக நடைபெறவிருக்கும் இவ்விழாப் போட்டிகளில் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த சன சமூக நிலையங்களனைத்தும் கலந்து கொள்ள விருக்கின்றன; பிரஸ்தாப போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் அனைத்தும் 15-6-60 வரை சமாசச் செயலாளரால் ஏற்றுக் கொள்ளப்படவிருக்கின்றன என்று அறிவிக்கப்படுகிறது.

—

### உதயசூரியன் நாடக மன்றம்

உதய சூரியன் நாடக மன்றத்தாரின் மூன்ருவது வெளியீட்டுக்கான "நாடக துவக்க விழா" கடந்த 15-5-60ல் மன்றப் பணிமனையில் தென்னிந்திய சினிமா நடிகர் சங்க உறுப்பினர் திரு பி. ஏ. மாறன் தலைமையில் நடைபெற்றது.

அப்போது கலைஞர்—மு. கருணுநிதி தீட்டிய "மணி மகுடம்" நாடகத்தை மன்றத்தின் மூன்ருவது வெளியீடாக அரங்கேற்றுவதென தீர்மானிக்கப்பட்டது. அதன் பின் நடைபெற்ற மன்றத்தின் நடப்பு வருட நிர்வாகிகள் தேர்தலில் திரு கே. கே. கெங்காதரன் தலைவராகவும், திரு பி ஏ. மாறன் செயலாளராகவும்-மன்ற விளம்பரத்துறை நிர்வாகியாகவும், திரு. பி. ஏ. மோகன் பொருளாளராகவும், திரு. இராசையா துணைப் பொருளாளராகவும், மன்றத்தின் நிரந்தர பயிற்சியாளராக "ரோமியோ ஜூலியட்" புகழ் திரு மு அன்பரசனும் தேர்ந்தெடுக்கப்பட்ட பின் திருமதி லில்லியின் நன்றியுரையுடன் விழா இனிது முடிவுற்றது.

—

### தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் மன்றம்

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் மன்றத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கடந்த 5-5-60ல் கல்லூரி அதிபர் திரு. ஜே. இராசையா தலைமையில் நடைபெற்றது.

மன்றத்தின் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: திரு ஜே. இராசையா, தலைவர்: செல்வன் எஸ். மகேஸ்வரலிங்கம், உபதலைவர்: செல்வன் எஸ். கே. துரைராஜா, செயலாளர்: செல்வன் டி. நற்குணமாணிக்கம், தனாதிகாரி: செல்வன் வி. மகேந்திரன், உப செயலாளர்: செல்வன் என். சிவலிங்கம், நிர்வாக சபை அங்கத்தவர்கள்: செல்வன் கே. சிவலிங்கம், செல்வன் எஸ். இரவீந்திரன், செல்வன் எஸ். பாலசுப்பிரமணியம், செல்வன் கே. குமார சுப்பிரமணியம்.

—

### காத்தான்குடி மத்திய கல்லூரி

சென்ற வருடம், டிசம்பர் மாதம் நடைபெற்ற பொதுத் தராதர வகுப்புப் பரீட்சையில், சென்ற நாலைந்து வருடங்களை விட காத்தான்குடி அரசினர் மத்திய கல்லூரி மாணவர்கள் மிகத் திறமையாகச் சித்தியெய்தி இங்குள்ள பொது மக்களின் நன் மதிப்பைப் பெற்றுள்ளார்கள்.

சென்ற முறை பரீட்சைக்குத் தோன்றிய ஒன்பது மாணவர்களில், ஒரு மாணவியைத் தவிர, மூன்று பேர் நல்ல திறமையான சித்தியும் [illegible] பெற்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### "நேரடி நடவடிக்கை எடுக்கப்படும்"

இளைஞர் அருள் நெறி மன்றத்தில் தமிழ் மாணவர்களுக்குச் சிங்களம் படிப்பிப்பதை உடனடியாக நிறுத்திவிடும்படி, இளைஞர் அருள்நெறி மன்றத் தலைவரும், திருக்கோணமலை இலங்கா சமசமாஜக் கட்சிக் கிளையின் பொருளாளருமான திரு பெ. கனகநாதபிள்ளையையும் ஏற்றும் உறுப்பினர்களையும் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்றையும் சாம்பற்றீவு கிராமச் சங்கம், திருமலைத் தமிழ் வாலிப முன்னணி, கட்டைப்பறிச்சான் கிராமச் சங்கம் ஆகியன கூட்டு வேண்டுகோள் ஒன்றின் மூலம் விடுத்துள்ளது.

அந்த வேண்டுகோளில், சிங்களம் படிப்பிப்பதை நிறுத்தாவிட்டால் நேரடி நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

—

### வீரமல்வத்தைக் கி. மு. சங்கம்

வீரமல்வத்தை கிராம முன்னேற்றச் சங்கத்தின் 12-வது வருடாந்த பொதுக் கூட்டம் கடந்த 8-5-60ல் தலைவர் திரு கா. காத்தமுத்து தலைமையில் வீரமல்வத்தைப் பாடசாலையில் ஆரம்பமானது. கூட்ட அறிக்கை வாசிக்கப்பட்டது. சங்க வளர்ச்சி பற்றிச் சங்கப் போஷகரும் கிராமத்தலைவருமான திரு. கி. செல்லத்துரை உரை நிகழ்த்தினுர். சங்க வளர்ச்சியைப் பலரும் பாராட்டினுர்கள்.

கடைசியாக கீழ்க்கண்டவர்கள் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்:—

போஷகர்: திரு கா. காத்தமுத்து, தலைவர்: திரு க. செல்லையா, காரியதரிசி: திரு மு. செல்வராஜா, உபகாரியதரிசி: திரு க. சாமித்தம்பி, தனாதிகாரி: திரு நா. வேலுப்பிள்ளை, உப தலைவர் திரு செ. பாலசிசந்திரன், நிர்வாக சபை அங்கத்தவர்கள்: திரு சித்தாத்து, திரு வே. சின்னத்தம்பி, திரு வ. அழகையா, திரு சா. பூபாலபிள்ளை.

### இலங்கை நடிகர் சங்கம்

இலங்கை நடிகர் சங்கச் செயற்குழுக்கூட்டம் கடந்த 19-5-60 ல் திரு ஏ டி. ஏ. ராஜேந்திரம் தலைமையில் கூடிற்று.

"இலங்கையிலுள்ள எல்லா நாடக நடிக கலை மன்றங்களையும் ஒன்ருக இணைத்து நல்லுறவையும் நல்லெண்ணத்தையும் வளர்ப்பதோடு கலையையும் கலைஞர்களையும் வளம் பெறச் செய்வதுமே நடிகர் சங்கத்தின் முக்கிய நோக்கமும் இலட்சியமும் என்பதை வெளிப்படுத்து முகமாக நடிகர் சங்கத் துவக்க விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடுவதென தீர்மானிக்கிறது" இவ்வாறு நடிகர் சங்க செயற்குழு ஏகமனதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.

—

### பகுத்தறிவு இயக்க சொற்பயிற்சிக் கூட்டம்

அகில இலங்கை பகுத்தறிவு இயக்க கொக்குவில் கிளை சொற்பயிற்சிக்கூட்டம் கடந்த 15-5-60-ல் கொக்குவில் சன சமூக படிப்பகத்தில் தலைவர் திரு க. சீவகாருண்யம் தலைமையில் ஆரம்பமாகியது.

திரு சி. அரியபுத்திரன் "நாம் செல்லும் பாதை" என்னும் தலைப்பில் பேசினுர்.

—

### சாம்பற்றீவு கி. மு. சங்கத் தலைவர் பேச்சு

"சமயத்தை அடிப்படையாகக் கொள்ளாத வாழ்வு மாலுமி இல்லாக் கப்பல் போன்று நடுக் கடலில் தத்தளிக்க நேரிடும்" என திரு வ. நா. தம்பிராசா, சாம்பற்றீவு கிராமச் சங்கத் தலைவர் மாங்கணுய் மாரியம்மன் கோயில் திருவிழாவின் போது பேசுகையில் கூறினுர்.

திருமலை விபுலானந்த கழகத்து மாணவ மாணவிகள் கூட்டு வழிபாடு நிகழ்த்தினுர்கள்.

**செயலவை தெரிவு**

சாம்பற்றீவு மாங்கணுய் மாரியம்மன் கோயில் புனருத்தாரணத்திற்கென சாம்பற்றீவு மக்கள் சமீபத்தில் கூடி ஓர் செயலவையை நிறுவியுள்ளனர். புனருத்தாரணச் செயலவைக்குத் தலைவராக சாம்பற்றீவு கிராமஅதிகாரி திரு எஸ். சுப்ரமணியமும் செயலாளராக திரு வ. நா. தம்பிராசாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

# என் தங்கை!

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

யும்? வாழ வேண்டிய அவளுக்கு 'வடு' ஏற்படுத்த நேரமாகாது இந்த ஊருக்கு. பின் 'உலைமூடி' கொண்டா அதன் வாயை மூட முடியும்?

நாளை கச்சேரியில் கையெழுத்திட வேண்டுமாம்...அடஆண்டவா!

●

"யாரது கிணத்திலே வாளியை இப்படிப் போட்டு அடிக்கிறது...?" அப்பா முற்றத்திலே இருந்து கத்தினுர். என் சிந்தனை கலைந்தது. சுற்று முற்றும் பார்த்தேன். அதிகாலை—இன்னும் நிலந் தெளியவில்லை போலும். ஒரு முடிவுக்கு வந்தவனுக வாரிச் சுருட்டி எழுந்தேன்.

பதிவுக்குப்போவதற்காகப் பிள்ளை நேரத்தோடு எழுந்து விட்டானென அம்மாவுக்கு ஒரே மகிழ்ச்சி. ஆனுல், "அம்மா, அவளை எனக்குப் பிடிக்கவில்லை..." இவ்வளவு தான் நான் சொன்னேன். அதைச் சொல்லி முடிப்பதற்கு எங்கிருந்து தான் தைரியத்தைக் கடன் வாங்கினேனே தெரியாது. பெரிய ஆண்பிள்ளையாம். நெஞ்சை நிமிர்த்தித் தடவிப் பார்த்துக் கொண்டேன்.

யாரையும் பார்க்கவோ, பேசவோ எனக்குப் பிடிக்கவில்லை. மட்டக்களப்பிலிருந்து காலை ஆறு மணிக்குப் புறப்படும் வண்டிக்காகப் புகையிரத நிலையத்தை நோக்கி வேகமாக நடந்தேன். நேரம் சரியாக இருந்தது. ஆனுலும், 'டிக்கட்'டை வாங்கிக் கொண்டு வருவதற்குள் வண்டி நகர ஆரம்பித்து விட்டது.

வேகமாகத் தாவி, உள்ளே ஏறிய வேகத்தில் யார்மீதோ தடுக்கி விழுந்து நிமிர்ந்தேன். அங்கே சலனமற்ற முகத்தோடு இருந்தாள் அவள்!...

'கிடு கிடு' வென்ற பேரிரைச்சலோடு 'கரி[illegible]' வண்டி வேகமாக [illegible] தொடங்கியது.

வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்

உங்கள் நீடித்த எழிலுக்கு
'எலேட்'
சுப்பர்லோன் ஜோர்ஜட்
என்னும் அழகின் அணிகலனை
அணியுங்கள்.
பார்வைக்கு மட்டும் அழகல்ல, அவை நவீன
நூலிழைகளால் இணைக்கப்பட்டிருப்பதால்
உறுதியாக உழைக்கின்றது.
இன்னும் அழுக்குப் பிடியாமல், சுருங்காமல்,
மடிப்புக் குலையாமல் இருக்கக் கூடியது
'எலேட்'
சுப்பர்லோன் ஜோர்ஜட்
அற்புதமான டிசைன்களிலும் எடுப்பான கண்கவர்
வர்ணங்களிலும் கிடைக்கின்றன.
குண்டன்மால்ஸ்,
லிமிட்டெட்,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டுகளிக்கத் தவறாதீர்கள்!

## இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) காமினி (மருதானை) பிளாஸா (வெள்ளவத்தை)

நவா (கொம்பனித்தெரு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) மனோகரா (யாழ்ப்பாணம்)

விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி) விஜிதா (மஸ்கெலியா)

மொடர்ன் (பதுளை) ஸ்ரீ கிருஷ்ணா (திருகோணமலை) ஜுபிட்டர் குருணகலை



நடிப்புக்கோர் திலகமெனத் திகழ்கின்ற சிவாஜி கணேசன்-செம்மல்
நாடெங்கும் கலைத்திறத்தால் புகழ் மணக்கும் பூ மணக்கும்
பொற்பாவையெனத் திகழ்கின்ற பி. சரோஜாதேவியுடனே
பேராற்றல் காட்டுகின்ற பெருநடிகர் குழுவும்
பாராட்டுப் பெறுகின்ற பாண்மையிலே நடித்து........
தமிழ் கொழிக்கும் எழுத்தாலே
தன்மானம் செழிக்கின்ற கருத்தாலே-பட
அமைப்பு முறை-படைப்பு முறை நனி சிறக்க மேன்மைமிகு



### நடிகர்கள்

சிவாஜி கணேசன்-எம். ஆர். ராதா-
பி. சரோஜாதேவி - பத்மினி பிரியதர்சினி
டி. எஸ். பாலையா-எஸ். வி. சுப்பையா
எம். வி. ராசம்மா-சி. கே. சரஸ்வதி
எம். என். நம்பியார்-என். லலிதா
கே. எம். நம்பிராஜன்-சி. டி. ராஜகாந்தம்

ஆகியோர் நடித்த

சரவணா பிலிம்ஸ்ஸாரின்

# பாகப் பிரிவினை

கதை வசனம்: எம். எஸ். சோலைமலை

பின்னணி: சவுந்தரராஜன், சீர்காழி கோவிந்தராஜன்,
பி. லீலா, சுசீலா, ஜமுனாராணி, ராஜேஸ்வரி

இசை
விஸ்வநாதன்-ராமமூர்த்தி.

திரைக்கதை—டைரக்ஷன்
ஏ. பீம்சிங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை 186-ம் இலக்கத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக பண்டாரநாயக்கமாவத்தை, சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1960 மே 29-ம் தேதி பிரசுரிக்கப்பட்டது